கூத்து வரிசை 001

# எஸ்தாக்கியார்



அநாதிநம

# எஸ்தாக்கியார் நாடகம்

கருநாடகமெட்டு
இது சன்மார்க்க போதினிப்
பத்திராதிபர் இயற்றியது.
அதி சிரேஷ்டரனுமதிப்படி
முன் பிரசுரித்த
பிரதிக்கிணங்க
யாழ்ப்பாணம், அச்சுவேலி
ஞானப்பிரகாச
யந்திரசாலையில்
பிரசுரிக்கப்பட்டது.

ஆறாம் பதிப்பு 1928

ஏழாம் பதிப்பு 1993
திருமறைக்கலாமன்றம்.

நூல் தேட்டம்
கு.இராயப்பு (கலையார்வன்)
நூல் இல.............

# முகவுரை.

பரந்த இப் பூமியில் விரிந்திடும் மன்னுயிர்கள் இனிமைசெறி பாப்பிரியரென்பது சர்வசன சம்மதம். சொற்சுவை பொருட்சுவையூட்டி, நவரசாலங்காரங்காட்டி. கர்ப்பனாவர்ணாலங்காரம் பூட்டிக் கவிவாணர் தொடுக்கும் எக்கவிகளும் யாவர்க்கும் ஏகபோகமாய்ப் பயன்படா. அதால், எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் பயன் உண்டாக நாடக வழக்கமுண்டானது. இதால் மானுசிய உசித விருப்பமாகிய இசைநூல் பயிற்றப்படுவதுடன் அதன் காதையை மனத்திலழுத்தவு மேற்றதாகும். ஆடலும் பாடலும் சீர்திருத்தம் பெறாத சாதிகளுக்குள் மாத்திரமன்று, பொதுவாய் எவ்வகையார்க்குள்ளும் பூரணமாயுண்டு. ஆங்கிலம் முதலாம் பாசைகளிலேயும் "சேக்ஸ்பியர்" ஆதிய கவிவாணர் எழுந்து அறநெறிச் சாரங்கள் மலிந்து பொலியத் தொடுத்த நாடகங்கள் அவ்வவரால் மெச்சப்பட்டு உச்சிமிது வைத்துக் கொண்டாடப்படுவதை இன்றுங் காண்கிறோம். அப்பாசைகளில் மாத்திரமன்று எந் தமிழ்ப்பாசையிலும் இவை பொலிவாய் உண்டு.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பிரிபட்டு இவற்றுக்கு ஏற்ற இலக்கணநூல்களும், இலக்கியநூல்களும் நிறைந்துள்ள எம்பாசையாகிய தமிழ்ப்பாசையிலே, பற்பலநாடகங்கள் உற்பன்னம் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். அவ்வகை நாடகங்களிலே நஞ்சூட்டப்பெற்ற நறுநெய்போலச் சிற்றின்பசாரஞ் செறிந்தவை பலவாம். அவ்வாறு துர்ப் போதனையுஞ் சாதனையும் நிறைந்த நாடகங்களைப் பார்த்துவந்தாரைத் தடுக்கவும், சிறுவர்களைச் சங்கீத விநோதங்களிற் பயிற்றவுந் தக்கதாய்க் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கேற்றதாய்ச் சன்மார்க்க நெறிபிறழாததாய் (கரு) நாடகமெட்டாய் இந்நாடகம் இயற்றப்பட்டது.

அற்புதகர்த்தன் பொற்பதம்போற்றி நற்பரகதியில் நவையறச் சேர்ந்த மெய்ப்பத்தனாம் எஸ்தாக்கியார் சரித்திரம் யாவற்கும் அன்பும் இன்பும் உறப் பெரும் பிரயோசனமாகுமாதலால் அச்சரித்திரத்தை ஓர்நாடகமாய்ப் பாடினம். பாடினதையேற்று ஆடினோர் அரங்கேற்றத்தின் முன்னர் இந்நாடகம் அச்சியந்திரோபாயத்தால் 1890-ம் ஆண்டு வெளிவந்தது. பின்னர் 1894-ம் வருடத்திலும் இரண்டாம் முறையும் பிரசுரித்து வெளிவந்தது. பின் காலத்துக்கேற்ற கோலமாய் இந்நாடகம் சபா மெட்டில் திருத்தப்பட்டு வெளிவந்தது. என்றாலும் பழைய கருநாடகமெட்டும் வேண்டுமென்று பலர் கேட்டுக்கொண்டமையால் இதை மூன்றாம் நாலாம் ஐந்தாம் முறையாயும் வெளிப்படுத்தினோம். அவைகளும் இல்லாதொழிந்தமையால் ஆறாம்முறையாயும் இதை அச்சிட்டு வெளியிடுகின்றோம்.

பற்பல துறைகளிலும் நுழைந்து பல ராகதாளங்கள் செறியவும், எடுத்தகதை யாவர்க்கும் பிரயோசனமாகவேண்டுமென்னும் ஆசை பற்றி யாவர்க்கும் விளக்கமாகவும் தக்கதாகவுமிருத்தல் அவசியமென நினைத்து இயற்றினோம். சாறுமிழ்ந்து கோதுண்ணும் பேறுடைய விலங்கொப்ப, குற்றந்தெரிக்கும் குணமுடையராயிராது, குற்றங்களைந்து குணமளைந்தொழுகல் கற்றறிந்தமாந்தர் கடன் எனச் சிந்தித்து யாவரும் இதையினிது பாராட்டிப் பலன் அடைய வேண்டுகின்றோம்.

முன்னுரை

# எஸ்தாக்கியார் நாடகம்

அச்சுவேலியைச்சேர்ந்த திரு. தம்பிமுத்துப்பிள்ளை, எல்லாத்தீமைகளையும் வேரறுத்து, நன்நெறியைமேம்படுத்தும் நோக்குடன் எல்லாமதங்களையும் இணைத்து "சன்மார்க்க முன்னேற்றச்சபை" என்ற பெயர் கொண்ட ஒரு பொதுவான சபையை 1884ம் ஆண்டு உருவாக்கினார். இந்தச்சபை எல்லாச் சமயத்தவர்கள் மத்தியிலும் மிகப்பிரபல்யம் பெற்றது. இந்தச்சபையின் அங்கமாக, சன்மார்க்க போதினி என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதை வெளியிடுவதற்காக அச்சுவேலியில் 1890ல் "ஞானப்பிரகாசர் அச்சகம்" ஒன்றை நிறுவினார்.

திரு. தம்பிமுத்துப்பிள்ளை, அவர்கள் ஒரு வரகவியாகவும் விளங்கினார். கர்நாடகசங்கீத பாணியில் அவர் எஸ்தாக்கியார் நாடகத்தை இயற்றி, இந்த நாடகத்தில் நடிப்பதற்குத் தனது வளர்ப்பு மகனாகிய ஞானப்பிரகாசர் உட்பட இளைஞர்களைச் சேர்த்து, அவர்களுக்கு நாடகப்பயிற்சியளிக்க பெரும் நாடக ஆசிரியரான பெரிய சரவணை அண்ணாவியாரையும் நியமித்தார். இந்த நாடகம் யாழ் குடாநாடு முழுவதும் பிரபல்யம் பெற்றது. இந்த நாடகத்தின் பிரபல்யம் காரணமாக, இந்த நாடகக்குழு அச்சுவேலியிலிருந்து மானிப்பாய் சென்று நாடகத்தை அரங்கேற்றியது. யாழ்புகையிரத நிலையக்குழு, யாழப்பாணம் வந்தபோது சேர் பொன். இராமநாதனின் வேண்டுகோளுக்கிணங்க (1886ல்) இந்த நாடகத்தின் ஒரு பகுதி யாழ்நகரில் இலவசமாக மேடை ஏற்றப்பட்டது.

எஸ்தாக்கியார் நாடகம் பிரபல்யம் அடைந்ததினால் அதன் கையெழுத்துப்பிரதிக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. அதனைப் பல்வேறுபட்ட இடங்களில் மேடையேற்றவே இக்கிராக்கி ஏற்பட்டது. 1890ல் இந்நாடகப்பிரதி திரு தம்பிமுத்துப்பிள்ளை அவர்களால், அவரது ஞானப்பிரகாசர் அச்சகத்தில் வெளியிடப்பட்டது. எஸ்தாக்கியார் நாடகத்தையும் அதன் ஆசிரியரையும், தெல்லிப்பளை வித்தியாலய அதிபர் புலவர் எரெமியாஸ் அவர்களும், மற்றும் முக்கியஸ்தர்களான சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் போன்றவர்களும் உயர்வாகச் சிபார்சு செய்தார்கள். (from "a life - sketch of Mr. S.THAMPIMUTHUPILLAI" by Mr. S.JOHN

RAJAH ATCHUVELY(1988) p.p.17, 27 & 32) எஸ்தாக்கியார் நாடகம் வடபுலம் முழுவதும் பிரபல்யம் அடைந்ததால் அச்சுவேலி ஞானப்பிரகாசர் அச்சகத்தில் ஆறுமுறை மறுபதிப்புச் செய்யப்பட்டது. 1928ல் இதன் ஆறாவது வெளியீடு வெளிவந்தது.

1905 - 1906ல் எஸ்தாக்கியார் நாடகம் நாரந்தனையில் பலமுறை மேடையேற்றப்பட்டது. கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை ஆகிய எனது தகப்பனார் பிரதான பாத்திரத்தில் தன்னந்தனியாக நடித்தார். அவரது நடிப்பு மிக நன்றாகவே இருந்திருக்க வேண்டும். அதனால் அன்று தொட்டு மக்கள் அவரை "எஸ்தாக்கி" என்று அழைக்க ஆரம்பித்தார்கள். இந்த ஞாபகார்த்தங்கள் காரணமாகவும், யாழ்ப்பாணத்தில், கர்நாடக சங்கீத பாணியில் முன்னுதாரணமாக விளங்கும் இந்தப் புகழ் மிக்க நாடகத்தை எதிர்காலத் தலைமுறையினருக்காகப் பாதுகாத்து வைக்க வேண்டும் என்பதற்காகவும் இதன் ஏழாவது வெளியீட்டைச் செய்யத்தீர்மானித்துள்ள யாழ் திருமறைக் கலாமன்றம் இந்த நாடகத்திற்கு முன்னுரை எழுதும்படி என்னைக்கோரியுள்ளது. இந்தப் பெரிய சேவையைச் செய்வதற்காக எமது மக்கள் யாழ் திருமறைக் கலாமன்றத்திற்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

புனித மாட்டீன் குருமாணவர் கல்லூரி
யாழ்ப்பாணம்
இலங்கை
11 - 04 - 1993

வ.தியோகுப்பிள்ளை
ஓய்வுபெற்ற ஆயர்



# எஸ்தாக்கியார்


திருமறைக்கலாமன்றம்
யாழ்ப்பாணம்
4 - 4 - 93

கலைகளை வளர்ப்பது நமது நோக்கம். கலை வடிவங்களைப் பேணிக்காப்பது, புதுமெருகு ஊட்டுவது நமது ஆக்கம்.

மரபுவழிக் கூத்துக்களை வெளியிட்டுவைக்க ஒருநாட்டுக்கூத்து வரிசைத்தொடரை ஆரம்பித்துள்ளோம். அதேபோல டிறாமா, விலாசம், சபா என்று நம்மவரால் போற்றப்பட்டு இன்று மறக்கப்படும் நிலையில் உள்ள இலக்கியங்களையும் நூல்வடிவில் வேறு ஒரு தொடரில் கொண்டுவருகின்றோம். எஸ்தாக்கியார் என்ற இந்நாடகம் நமது கலைப்பணிக்கு உதவியும் ஊக்கமும் அளித்த தமிழ்ப்பெருமகன் முன்னைய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளைப் பெருந்தகைக்கு மிகவும் பிடித்தது. அதனால் இதை ஏழாம் பதிப்பாக அச்சேற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். நமது முயற்சிகளுக்கு தமிழ்கூறும் நல்உலகம் ஆதரவு தரும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

கலைவழி இறைபணி புரிய வாரீர்.

பேராசிரியர் நீ. மரியசேவியர்



# "நாட்டுக் கூத்தின் நற் காவலன்"



ஓய்வுபெற்ற யாழ்.ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு
பொன்னாடை போர்த்தி "நாட்டுக் கூத்தின் நற் காவலன்" என்னும் பட்டம்
09-5-1993 ல் திருமறைக் கலாமன்றத்தால் வழங்கப்பட்ட நிகழ்ச்சி .

# சாற்று கவி.

ஊர்காவற்றுறை நீதிவானும்
உடுப்பிட்டி குமாரசாமி முதலியார் புத்திரருமாகிய
**ஸ்ரீ கதிரவேற்பிள்ளைத்துரையவர்கள்**
இயற்றியது.

**கட்டளைக்கலித்துறை.**

நாடகத் தோர்மணி யெஸ்தாக்கி நாடக நல்வளஞ்சேர்
நாடகத் தோர்மணி யச்சூ ருடையர் நடித்திசைக்க
நாடகத் தந்தனன் சன்மார்க்க போதினி நாட்டிநல
நாடகத் தான்றம்பி முத்தெனப் பேர்பெற்ற நாவலனே.

உடுப்பிட்டி
**ஸ்ரீ அ. சிவசம்புப் புலவரவர்கள்**
இயற்றியது.

**ஆசிரிய விருத்தம்**

வகைகொண்ட செல்வமுள வெல்லா மகன்றுமனை
மக்களை யகன்றஃதையாய்
வாழ்பதி யிகழ்ந்துபர தேசம் புகுந்துபரன்
வழிபாட்டி னேற்றமுற்ற
பகைகொண்ட வயவருக் கரிநிகரு மெஸ்தாக்கி
பத்திச் சரித்திரத்தைப்
பண்கொளதி மதுரநா டகநறவ மாயினிது
பலர்பருகு மாறமைத்தான்
றொகைகொண்ட சற்சன மதிப்புமதி காரமுஞ்
சுகுணமுங் கல்வியறிவுந்
துதிகுலவு புண்ணிய முயற்சியுந் திகழ்மனச்
சுத்தமுங் கொடையுமுற்றோன்

றகைகொண்ட கங்கைகுல திலகநிறை சுகவளச்
சால்புகிள ரச்சுவேலிச்
சந்தியாப் பிள்ளையருள் புருசரத் தினமெனுந்
தம்பிமுத்துப் பிள்ளையே.

**கலித்துறை.**

அவை வாய்ந்த நாடக மாகவெஸ் தாக்கி யருங்கதையைச்
சுவைவாய்ந்த சாரமுஞ் சொல்லும் பொருளுந் துலங்கச்சொற்றான்
சுவைவாய்ந்த சோலை கிளரச்சு வேலிக் கவிஞனிதிக்
குவைவாய்ந்த தம்பிமுத் துப்பிள்ளை யாருங் குழைவுறவே.

**சுன்னாகம்**

**ஸ்ரீ அ. குமாரப்பிள்ளையவர்கள்**

இயற்றியது.

**வெண்பா**

எஸ்தாக்கி காதை யினிதமைய நாடகமொன்
றித்தா ரணியி லியம்பினான் - வித்தார
மேவும் பொளிலச்சு வேலிப் பதிவாழுங்
காவலன் றம்பிமுத்து காண்.

திருகோணமலை
அர்ச்.சூசைமாமுனிவரது தமிழ்ப்பாடசாலைத்
தலைமை உபாத்தியாயராகிய

**ஸ்ரீ வெ.சி.சுவாக்கியம்பிள்ளையவர்கள்**

இயற்றியது

**வெண்பா.**

வண்டாருஞ் சோலை வளரச்சு வேலிவாழ்
தொண்டாருந் தம்பிமுத்துத் தூய்புலவன் - பண்டாரும்
எஸ்தாக்கி யின்சரிதை யின்னிசை நாடகமாய்
விஸ்தரித்துச் சொற்றான் வியந்து.

தெல்லிப்பழைப் போதனாசக்தி வித்தியாசாலைச்
சிரேஷ்ட ஆசிரியராகிய
**ஸ்ரீ சி.ஏரேமியாப் புலவரவர்கள்**
இயற்றியது

### தரு

இராகம் - தன்னியாசி. தாளம் - ஆதி.

பல்லவி

இரதநறவொழுகு பரதகிருதமிகும்
எஸ்தாக்கியார் நாடகம்

அனுபல்லவி

துரிதநடனமிடு பவுரிவருசரித ...இரத

சரணங்கள்

அச்சுநன்னகர்வே ளாண்குல தீபன்
அரசர்புகழுஞ்சந்தி யாப்பிள்ளைம கீபன்
உச்சிதசுகுணகு மாரசல் லாபன்
உயர்தம்பிமுத்துவெனும் புலமைப்ர தாபன்...இரத

துங்கசாதுசன சங்கநன் னேசன்
தோற்றும்பரோபகார மிகும்யேசு தாசன்
இங்கிதஅச்சியந்திர சாலைப்ர காசன்
இயலிசைநாடகத் தமிழறி வி லாசன்...இரத

சதிசுதிதிகழ்சங் கீதச லாக்யம்
சந்தஇன்பசா துரியம னோக்யம்
அதுலிதநிறைதரு கானரச போக்யம்
ஆனந்தமதுரநல் லதிசய வாக்யம்... இரத

புத்திதருமிதய புனிதமெய்ஞ் ஞானம்
புலவரறிஞர்தகை யுளரபி மானம்
பத்திசன்மார்க்கநிலை பகரும்ப்ர தானம்
பார்க்கப்பார்க்கப்பர வசமது நிதானம்...இரத

எஞ்சிய சாற்றுகவிகள் சுருக்கநோக்கிப் பிரசுரியாது விடப்பட்டன

அநாதிநம

# எஸ்தாக்கியார் நாடகம்

காப்பு

விருத்தம்

பார்பூர்த்த ரோமைதனைப் பரிபாலித்த
பார்த்திபனார் திறையானு படைகட்கெல்லாம்
பேர்பூத்த தலைவனாய்ப் பிலாசிதென்னும்
பெயர் பூண்டு பின்புதிரு மறைபுகுந்து
ஏர்பூத்த எஸ்தாக்கி யென்னுநாம
மேற்றமலன் மறைக்காக விறந்ததூயன்
நேர்பூத்த சரிதையைநா டகமாய்ப்பாட
நித்தியகர்த் தன்சரண நிதங்காப்பாமே

## தேவமாதா ஸ்துதி.

வெண்பா.

சற்பத் தலையதனைத் தாளால் மிதித்தவளே
தற்பரனைத் தந்த தயாபரியே - அற்புதஞ்சேர்
தூயவெஸ் தாக்கிகதை சொல்லவருள் நல்கிடவுன்
சேயினைமன் றாடியருள் செய்

## அவையடக்கம்.

விருத்தம்.

நற்பயிர்க ளுக்குநீர் பாய்ச்சும்போது
நாடியவந் நன்னீரி னாலேபுற்கள்
உற்பவித்தா லத்தையே களைவதன்றி
யோங்குபயிர் களையழிக்க வுணருவாரோ
அற்புதமாங் காதைதனை யறையும்போது
அடர்பிழைகள் மிகவரினு மறிஞரானோர்
முற்றுமிகழ்ந் திடத்துணியா துற்றகுற்றம்
முயன்றுநீக் கிடுதலவர் முறைமையாமே.

### தோடையம்:

இராகம் - நாட்டை. தாளம் - ஜம்பை.

திருவிலகும்ரோமைநகர் செறிதிறையானென்றுபகர்
நரபதிதன் பொருனன்கதை நாடகமாய்ப்பாட ஆ. ஆ.
வரைமனுவோர்தமைமீட்க வல்லலகைதலைதாழ்க்கப்
பரிவொடுயர்மரியுதவு பாலனடிதுணையே ஜெய. ஜெய.
தரையினற்காயுயிர்கொடுத்த தற்பரர்க்காயுயிர்விடுத்த
திருவுறுமெஸ்தாக்கிகதை சீருடனேபாட ஆ. ஆ.
பரிவுடையமரிபாலன் பாரடியர்க்கனுகூலன்
சருவவியாபகசீலன் தாளிணைகள்துணையே ஜெய. ஜெய.

### மங்கலம்

இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி.

மங்களம் மங்களம் நித்தியசுக ...மங்
எங்கும்நிறைந்திட்டநாதன் யாவுமறிந்திட்ட போதன்
துங்கமுறைந்திட்டநீதன் தூய்மைசெறிபாதத்திற்கு ...மங்
எவ்வுயிர்க்குந்தயாபரி இலங்கிடுமனோகரி
திவ்வியமிகுமாமரி செம்பதுமபாதத்திற்கு ...மங்
மாதவமார்விற்பனி மாமரியெனுங்கனி
காதலன்சூசைமுனி கமலசெஞ்சரணுக்கு ...மங்
தூயபரிசுத்தருக்குஞ் துணையுறுமுத்தருக்கும்
வாய்மையுறுபத்தருக்கும் மாதவதேசிகருக்கும் ...மங்

## புலசந்தோர் தோற்றம்.

### விருத்தம்

பலசந்தானுண்டுவந்த பழம்பகைதீர்க்கயூத
குலசந்தமரியாயீன்ற குமாரனைப்போற்றி செய்து
நலசந்தமாயெஸ்தாக்கி நற்கதையதனைக்கூறப்
புலசந்தோர்சபையகத்துப் புகழுடன்தோற்றினாரே.

### தரு

இராகம் - தன்னியாசி, தாளம் - ஆதி.

புலசந்தோர்வந்தார் புகழுறுசபையில் ...புல
உலகினர் போற்ற உயர்கதை சாற்ற
நலமதைத்தேடி நாதனைப்பாடி ...புல

திருவணி தரித்து செபத்தையுச்சரித்து
நரருளந்தேற நற்கதைகூற ...புல
அன்பினையணிந்து அமலனைப்பணிந்து
துன்பினைநீக்கிச் சோதியை நோக்கி ...புல
மெய்யறிவூட்ட விளக்கியேகாட்ட
துய்யனைநாடித் தோத்திரம்பாடி ...புல

## புலசந்தோர் தேவ ஸ்துதி

### தரு.

இராகம் - காபி. தாளம் - ஆதி

ஆதியானநாதா - இப்போ
தடியனுக்குனதருள் புரிநீதா
சோதியாயெங்குந் துலங்கலங்காரா
சுருதிதந்தருள் தூயசிங்காரா ...ஆதி

மண்ணின்மாந்தர்கோலா - உயர்
மாமரியனைதர வந்திடுபாலா
பண்ணுறுங்காதை பரிவோடுசொல்லப்
பரிசுத்தர்களடி பரவிடுவல்ல ...ஆதி

அவனியோர்கள்தேற - எஸ்
தாக்கியின்காதையை யன்பொடுகூற
புவனமீதருள் பொலிவுறத்தாராய்
புரைதவிர்த்ததின் குறைகளைத்தீராய் ...ஆதி

புத்திபுவியிலூட்ட- உயர்
பொருனன்காதையைப் புகழொடுதீட்ட
பத்தர்மீதருள் வைத்திடுசத்ய
பரிபூரணபர னாகியநித்ய ...ஆதி

## புலசந்தோர் ஆசிரியப்பா.

வாக்கினாலுலகம் வகுத்தவனருட்கொடெஸ்
தாக்கியின் சரிதையை யறைந்திடக்கேளீர்
றோமைமாநகரி லுயர்பிலாசிதுவெனும்
நாமமோடவ்வூர் நரபதியுடைய

அன்புறுசேனைக் கதிபதியாகிப்
பொன்பொலிநகரிற் புகழுடன் தனது
மனைவிமைந்தர்களுடன் வாழ்ந்திடுநாளில்
வனமதில் வேட்டை மகிழ்வுடனாட

வீரரோடேகி விளங்குமக்காவினில்
வாருடன் வந்த மானதைக்கண்டு
வேகமாயதன்பின் வீரனுஞ்சென்று
தாகமாய்க்கொல்லச் சருவிடும்போது

நிறைந்த மான்கோட்டிடை நிமலனுங்குருசில்
அறைந்தபாவனையாய் அப்போது தோன்றக்
கண்டேமயங்க கர்த்தனாரன்பு
கொண்டே மான்வாயாற் கூறினார் போதகம்

அத்தையேகண்டு அறிவதுதெளிந்து
சத்தியமறையே தக்கதென்றுணர்ந்து
நாதனார்சொற்படி நலமுறுகுருவிடம்
மாதுமைந்தர்களுடன் வல்லபனேகி

கஸ்தியைவருத்துங் கணைத்தினைநீங்கி
எஸ்தாக்கியென்ன வினிதுறுநாமமும்
தேவியார்தமக்குத் தேயொப்பீஸ்தென்றும்
ஆவலாய்மைந்தர்க் ககப்பீஸ்தென்றும்

ஒப்பீஸ்தென்றும் உயர்நாமமீய்ந்து
தப்பாதஞானஸ் நானமேதரித்து
மனைதனில்வந்து மகிழ்வுடனடுத்த
தினமதிலாதி செப்பியவுரைபோல்

நீட்சிசேர்வனம்போய் நிமலனாருயிர்த்த
காட்சியுமங்கே காட்டிடக்கண்டு
சந்தோசமாகத் தன்மனைநாடி
வந்துவாழ்ந்திருக்க வானவனவரைச்

சோதனைசெய்யத் தொடங்கினாரதனா
லாதனமெல்லா மழிந்ததாலார்க்கும்
பேசாமற்பெண்டீர் பிள்ளைகளுடனே
தேசாந்திரியாய்ச் சென்றாரங்கே

கடலடுத்ததினால் கப்பலிலேறி
இடமுறுமெசித்தூ ரேகினவுடனே
வங்கத்தின்கூலியை மாலுமிகேட்க
அங்கோர்சல்லியு மவர்கைக்கிலாததால்

வாதைசெய்தவனும் மனைவியைச்சிறையிற்
றிதுடனிருத்திச் சிறுவர்களோடு
எஸ்தாக்கியையு மேகிடவிடவே
விஸ்தாரமான விதனத்துடனே

நடந்திடும்வழியில் நண்ணியவாற்றைக்
கடந்திடப்பயந்து காளையர்களிலே
அக்கரைதன்னி லகப்பீஸ்தைவிட்டு
தக்கவொப்பீஸ்தைத் தான்தூக்கிச்சென்று

மறுகரைவிட்டு வளர்நடுக்கடலி
லுறவோனாய்கடுவா யோடியேவந்து
சிறுவரைப்பிடித்துச் சென்றனவப்போ
தறிவழிந்தேங்கி யவர்திகைத்தனரே

இடையரோடுழவர் இப்பாலர்தம்மை
அடவியில்மீட்டே அன்புடன்வளர்த்தார்
தந்தையோர்பிரபு தன்னிடமடைந்து
சிந்தையாய்க்கொல்லை சீருறக்காத்தார்

அன்னையைக்கலாசுக எநீதிசெய்திடவே
உன்னியநேரிழை யோதியபோதனை
கேட்டவர்விடுக்கக் கிளர்ந்தோர்விதவையின்
வீட்டினையடைந்து மெல்லியலிருந்தாள்

இப்படியிருக்க வெசித்தூராசன்
செப்பமாய்றோமைத் திறையான்றனக்கு
அளித்திடுகப்பம் அனுப்பாததினால்
விழிப்புறுமமர்பொர வேண்டுமென்றெண்ணி

பொருநனைத்தேடப் புறப்பட்டதறிந்து
கருணையாயவரைக் கண்டேபிடித்துக்
கொடுவரும்படியே கூர்மைசேர்தூதரை
விடவவரெங்கும் மேவியேதேடி

எகித்தினிற்கண்டே யினிதுறவழைத்து
மகத்துவராசன்முன் வந்தனரன்றே
மன்னனுங்கருணையாய் மனமுடனழைத்து
அன்னியவெசித்தா ளரசனையடக்கச்

செல்லெனச்சொல்லச் சேனைகளோடே
துல்லிபத்தளபதி துணிவாய்நடந்தான்
அப்படைதன்னு ளவரிருகுமாரருந்
தப்பறச்சேர்ந்தார் தயாபரனருளால்

எஸ்தாக்கிசெல்ல வெசித்தரசன்றான்
கஸ்தியில்லாமற் கப்பங்கொடுத்தான்
திரும்பியேநடந்தார் தினகரன்மறைய
விரும்புகூடாரம் வியப்புடனிட்டார்

தாய்வசித்திருந்த தகுமனையதிற்போய்ச்
சேயிருபேருந் திருந்துதம்மூர்பேர்
ஒருவற்கொருவ ருசாவியபோதில்
இருவருஞ்சகோதர ரென்னவறிந்தார்

தாயிதைக்கேட்டுச் சந்தேகமுற்று
தூயனைவேண்டித் துணைவன்முன்னேகி
அடியாளைரோமைக் கழைத்துநீர்சென்றாற்
படிமீதில்மிக்க பலன்பெறுவீரெனச்

சொல்லிடக்கேட்டுத் துரையுமுன்சரிதையை
நல்லாயுரையென நவின்றாளப்போது
தேவியென்றறிந்து சிந்தைமகிழ்ந்ததும்
பூவைசொல்லுரையால் புதல்வரைக்கண்டதும்

ஏகனைப்போற்றி யினிமையாய்வாழ்ந்ததும்
பாகுறுநாடகப் பாவினாலறிவீர்
அப்பாலுநடந்த அருஞ்சரித்திரத்தையுஞ்
செப்பமாய்க்கேளீர் திறையான்மரித்திட

அதிரியானரசனா யரியவெஸ்தாக்கியை
எதிரிலேசென்று இனிமையாயழைத்துத்
தன்கீழிருத்தித் தகவொடுவாழ்நாள்
வன்புறுமலகை மன்னவன்மனதைக்

கடினப்படுத்தவே காவலன்மெய்ம்மறை
விடுமெனச்சொல்ல வீரனும்மறுக்கச்
செப்பெருத்ததனைத் தீயெழக்காய்ச்சித்
தப்பிதமுடனே தலைவிமைந்தர்களொடு

இனிமைசேர்சிட்டனா மெஸ்தாக்கியையும்
அநியாயமாக அதனிலேபோட
வேதசாட்சியதாய் விளங்கிடுநால்வரும்
காதலாய்மரித்துக் கதியினிற்சேர்ந்தார்

இவ்விதசிட்டனின் இனிமைசேர்காதையைச்
செவ்வையாய்ப்படிப்போர் சீருடன்கேட்போர்
சகலபேர்களுக்குந் தயாபரனாகி
செகமிசைசேர்ந்து செழிக்குகமன்னோ.

## கட்டியகாரன் தோற்றம்

### விருத்தம்

மட்டில்லாப்புகழ்பெற்றோங்கி வளர்ந்திடுரோமைநாட்டைத்
திட்டமாயரசுசெய்யுந் திறையானுஇராசன்வாசல்
சட்டமாய்மருவிக்கீர்த்தி சாற்றியேபோற்றிநிற்குங்
கட்டியகாரன்வந்து களிப்புடன் தோற்றினானே.

### தரு.

இராகம் - மத்தியமாவதி தாளம் - ஆதி

கட்டியகாரன்வந்தான் இட்டமதாக
காவலன்வருகைகூறி ஆவலாயேக
சட்டையொட்டி யாணநெற்றிப் பட்டந்துலங்கஉயர்
தங்கமணிமாலைகளு மங்கமிலங்க ...கட்
சித்திரப்பாதச்சிலம்பு ஒத்திசைபாட - நல்ல
செங்கையிற்கோலொடுபாகை சென்னியிலாட ...கட்

## கட்டியகாரன்சொல் தரு.

இராகம் உசேனி அடதாளம்.

சீராரிவ்வூரிலுள் ளோர்களே - மன்னன்
திறையானுவரலறி வீர்களே
தாராளமாய்வந்து கூடுவீர் - நல்ல
தட்டுத்தட்டாய்ப்பந்தர் போடுவீர்

பகைவர்கள்வலிக்கச்ச மருவுறான் - றோமைப்
பதியாளுமகராசன் வருகிறான்
வகையற்றவறியோரே வாருங்கோ - நிதி
மகிழ்வாகத்தருவார்கை யேருங்கோ

துரைமக்களொடுமிக்கோர் புகழவே - எங்கள்
சுடர்மாலைமுடிவேந்தன் மகிழவே
விரைபெற்றமலர்மாலை தூக்குவீர் - தெரு
வீதியெல்லாம்வடி வாக்குவீர்

காலாளாதியசேனை சேரவே - வருங்
காவலனுளமன்பு கூரவே
கோலாகலத்தோடு போற்றுவீர் - புகழ்
கூறியேதுத்தியஞ் சாற்றுவீர்

### கட்டியங் கூறல்

கடகாடகரியிரத பரிபதாதிகள்நிதங் கடமையொடுபுடைசூழவே கருதரியதரியலர்கள் முடிகளதுபொடிபடக் கணையுடனரசுபுரிவோன் புடவியிடை கொடியமனமுடையவர்வலிகெடவரசு புரிகின்றபரிவு செறிவோன்--புத்திவித்தாரன்புகழ்பரவுதீரன் பொறைகள்நிறை போசன் திறையானுமகாராசன் கொலுவீதிவருகிறார், சமூகம் எச்சரிக்கை ஐயாசுவாமி பராக்கு!

### இராசன் தோற்றம்

### விருத்தம்

சீருலவு ரோமைநக ராள்பூபாலன்
　செற்றலர்க டமையடக்கித் திகழுஞ்சீலன்
பேருலவு பாருலகோர் தம்மில்நேசன்
　பிரசைகளைக் கண்மணிபோற் காக்கும்போசன்
காருலவு மாற்றலர்கள் பயந்துகூசக்
　கன்னியர்க ளிருமருங்குங் கவரிவீச
நேருலவு மதியமைச்ச னருகில்மேவ
　நேசதிறை யான்சபையில் நேர்ந்திட்டானே.

### தரு

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி,

இராஜாதிராஜன் இராஜன்திறையானு
இராஜன்கொலுவில்வந் தானிதோ
தேசதேசமுள்ள ராஜாதிராஜர்கள்
தெண்டனிட்டுத்துதி கூறவே ...இரா
மந்திரிகூட வயவர்களோட
மங்கையர்கள் நடமாடவே ...இரா
தந்திரவுபாயன் தருமசகாயன்
தாளிணைபணிபவர் நேயனாம் ...இரா

### வேறு தரு

இராகம் கேதாரகௌளம். அடதாளம்.

இராஜராஜமக ராஜன்திறையானு
ராஜன்கொலுவில்வந் தானிதோ
தேசதேசர்மிகு நேசபோசர்சூழ
வாசமேவிடுமுல் லாசதீரவீர ...இரா

ஞானமேவுபிர தானர்சூழவெகு
மானதானநிறை வானசீலமிகு ...இரா
வேதவேதியர்க ளாசிகூறவுறும்
விரகமாதர்நட மாடவீதிதொறும் ...இரா

## இராசன் விருத்தம்.

அரியமெய்ம்மறைவிளங்க அந்தணராலயங்கள்
பெருமைசேருயர்வுற்றோங்கப் பிசகாதுமாதந்தோறும்
உரியமும்மாரிபெய்ய ஒன்னலர்வெருவிநைய
வரிசைசேரெமதுதேவர் மலரடிவணங்கினேனே.

*வசனம் - எனதுகுலதெய்வங்களே! என் தேசஞ் செழிக்கவும், சத்துருக்கள் ஒழியவும், நான் களிக்கவும் கிருபைசெய்தருளுங்கள் சுவாமிகளே.*

## மந்திரி விருத்தம்,

நிறைவானரோமைநாட்டை நிலையுடன்புரப்பாய்போற்றி
குறையாதநீதியுள்ள கொற்றவாபோற்றிபோற்றி
பொறையானதிலகிவாழும் புண்ணியபூபாபோற்றி
திறையானுமன்னனேயுன் றிருவடிபோற்றிபோற்றி.

*வசனம் - மகத்தாகிய ரோமாபுரியில் வீற்றிருந்து அரசாட்சிசெய்யும் மகாராசனே, சரணமேசரணமையா சுவாமி.*

## தேசவிசாரணை

### தரு,

இராகம் கேதாரகெளளம். தாளம் ஆதி.

இரா. திருவார்ரோமை நகரிற்பயிர் செழிப்பாகுதாமந்திரி
திங்கள்மூன்றுமாரிபெய்து சிறக்குதாசொல்மந்திரி

*வசனம் - நானரசாட்சிசெய்கின்ற இந்தராச்சியத்தில் மாதந்தோறும் மூன்றுமழைவருசிக்குதா மந்திரி.*

மந் பரிவாய்ப்பயிர்செழித்தேமிகப் பண்பாகுதுமன்னனே
பரவிமாதமூன்றுமழை குறையாதென்றன்மன்னனே

*வசனம்- அவ்வண்ணமேமாதம்மும்மாரிபொழிந்து தேசம்செழித்துவருகின்றதுஇராசனே.*

இரா சங்கையுறுமங்கையர்கள் தழைக்கின்றாராமந்திரி
சார்ந்தமாதர் கற்பின்நிலை தவறினாராமந்திரி

*வசனம்- ஸ்திரீகள் தங்கள்நிலமையிலே மேன்மைபெற்றுக் கற்புநெறிதவறாமல் நடந்துவருகிறார்களா மந்திரி*

மந். துங்கமிகு மாதர்மிகத்துலங்குகிறார் மன்னனே
தூயகற்பி னிலைதவறார் தொகுத்தறிவீர்மன்னனே

*வசனம் - ஸ்திரிகள் மிகவிளங்கிக் கற்புநெறிமுறை குன்றாமல் நடந்துவருகிறார்கள் இராசனே*

இரா. பூசுரர்கள் தந்நிலைமை பூரணமோமந்திரி
பூசைபலி கோயில்களில் புரிகின்றாரா மந்திரி.

*வசனம் - நமது பூசுரர்கள் தந்நிலைமைதவறாது ஆலயங்களில் முக்காலமும் பூசைசெய்து வருகின்றார்களா மந்திரி*

மந். தேசமுறு பூசுரர்கள் செழிக்கின்றார்என்மன்னனே
தினந்தோறுமுக்காலபூசை செய்கின்றாரென்மன்னனே

*வசனம் - பூசுரர்கள் சீர்சிறப்போடு வாழ்ந்து நாடோறுந் திரிகாலபூசையுஞ் சீராய் நடத்திவருகின்றார்கள் இராசனே.*

இரா. மாற்றலர்க ளாகவாருந் தோற்றினாராமந்திரி
மன்னவர்கள் திறைகள்தந்து வருகின்றாரா மந்திரி

*வசனம் - நமதுஅரசாட்சிக்கு விரோதிகளாரு மிருக்கின்றார்களா ? நம்மாணைக்குட்பட்ட அரசரெல்லோரும் ஒழுங்காய்க் கடமைசெலுத்துகின்றாரா மந்திரி.*

மந். சீற்றறியேறேயுமக்கு மாற்றாரில்லைமன்னனே
திறைதருவோர்குறையாமலே செலுத்துகின்றார்மன்னனே

*வசனம் - சிங்கத்தையொத்த வலிமையுடைத்தான உமக்கு யாதோர்பகைவருமில்லை கப்பந்தந்துவருகின்ற காவலர் தங் கடமையை ஒழுங்காய் நிறைவேற்றிவருகிறார்கள் மன்னனே.*

## இராசன் விருத்தம்

பதிதங்குவழமையெல்லாம் பகர்ந்திடக்கேட்டேநானும்
விதிதங்கமகிழ்ந்தேனின்னம் விளம்பிடக்கேளாய் மந்திரி
சதுரங்கசேனைக்கெல்லாந் தலைவனாம்பிலாசிதென்னும்
மதிதங்குபொருனன்றன்னை வரும்படியழைத்திடாயே.

*வசனம் - இந்நாடு நகரங்களிலுண்டான வழமைகளெல்லாங்கேட்டு மகிழ்ச்சியுற்றேன். ஆனால்கசரத துரக பதாதி யெனப்பட்ட நால்வகைச் சேனைகளுக்கெல்லாம் தலைவனாய் இருக்கின்ற பிலாசிதென்னுஞ் சேனாதிபதியை அதிசீக்கிரத்தில் அழைப்பிப்பாய் மந்திரி*

*மந்திரி வசனம் - அப்படியே செய்கின்றேன் இராசனே*

## மந்திரி விருத்தம்

இட்டமாயரசன்வாச லேவல்செய்திறைஞ்சிநிற்குங்
கட்டியகாராநானுங் கழறும்வாசகத்தைக்கேளாய்

மட்டில்லாக்கீர்த்திபொங்கி வளர்பிலாசிதையிப்போது
திட்டமாயரசன்முன்பு சீக்கிரம்வரச்செய்வாயே

வசனம் - அகோவாரும்பிள்ளாய் கட்டியம் பிலாசிதென்னுந் கர்த்தனை இராசன் சமுகத்துக்கு வரும்படி செய்வாயாக.

கட்டியம் வசனம் - அப்படியே செய்கிறேன் சுவாமி.

## பிலாசிது தோற்றம்.

### விருத்தம்

சிரமருவு கனகமணி வரத்தியாடச்
திறலிலகு மருமமதின் மணிகளாடப்
பரசமந்த்ர வாளுறையோ டிடைமீதாடப்
பாதசிலம் பொலியொடுதத் திமியென்றாட
முரசவொலி வாத்தியங்க ளொருபாலாட
முத்துவட்டக் குடைகொடிகள் முறையாயாட
பிரசநிகர் மொழிமடவார் நடனமாடப்
பிலாசிதெனுந் தளபதியும் பெயர்ந்துற்றானே.

### ஆடற்றரு.

இராகம் சுருட்டி. தாளம் ஆதி,

பதிபுகழ்பிலாசிதுவும்வந்தானே - பொருனனானபருதி
பதிபுகழ்பிலாசிதுவும்வந்தான் பரவிடுசெயவலிமிகுந்தான்
பாருள்ளோரஞ்சப் போர்செய்வோர்கெஞ்சப்
பற்றிப்பிடிவெற்றிக்கொடி கொற்றத்தொடு பெற்றுற்றிடு ...பதி

சிரசிற்பாகை சிறந்து துலங்கவே -இடையுடையினிற்
செறிந்தவாளொளி நிறைந்திலங்கவே
கரமுற்றசெயவிருதுமின்னக் கனத்தகண்டிகைமார்பிற்றுன்ன
காட்டித்திறல் நாட்டிப்படை கூட்டிப்பகையோட்டித்திகழ் ...பதி

### பிலாசிது விருத்தம்.

இழைத்தபொற்கிரீடஞ்சூடி இலங்கியதபனன்றன்னைப்
பழித்தசெங்கோல்கையேந்திப் பகர்ந்திடுரோமைநாடு
தழைத்திடவரசுசெய்யுந் தார்செறிமன்னாவென்னை
யழைத்திடுகருமந்தன்னை யன்பதாயுரைசெய்வாயே.

வசனம் - நவரத்தின மகுடம்புனைந்து ரோமாபுரியை அரசாளுகின்ற சக்கரவர்த்தியே, அடியேனையழைத்த காரியமேதென்று திருவாய் மலர்ந்தருள வேண்டுமையா சுவாமி

### இராசன் விருத்தம்

பிடிகொண்டதலைவரஞ்சப் பிணித்தகம்பிளந்துவெற்றிக்
கொடிகொண்டபிலாசிதேநான் கூறும்வாசகத்தைக்கேளாய்
படைகொண்டமாற்றாரென்னும் பற்றலரெனதுநாட்டில்
நடைகொண்டுவாராவண்ணம் நட்புடன்காத்திடாயே.

*வசனம் - கேளும்வீரசூர பராக்கிரமமுள்ள சேனாபதியே, நமது நாடு நகரங்களிற் சத்துராதிக ளணுகாதபடி மிக சாக்கிரதையாய்க் காவல்செய்திரும் சேனாபதியே.*

*பிலாசிது வசனம் - அப்படியேசெய்கிறேன் மகாராசனே.*

### பிலாசிது விருத்தம்

வீரரேகேளீர்காட்டில் விளங்கிடுவேட்டையாடத்
தீரமதாகநானுஞ் சென்றிடச்சிந்தையுற்றேன்
பாரதிலுயர்ந்தவெந்தன் பாவையைப்பாலரோடு
நேருடனழைத்துக்கொண்டு நிமிசத்தில் வருகுவீரே.

*வசனம் - கேளும்வீரர்களே நான் காட்டிற்சென்று வழைமைபோல வேட்டையாட நினைத்தேன்.ஆகையால் எனது மனைவியைப் புத்திரருடன் எனதுசமுகத்திற்கு வரும்படிசெய்யுங்கள் வீரரே.*

## பிலாசிது தேவியும் பிள்ளைகளுந் தோற்றம்

### விருத்தம்

கரமதில்வளைகளாடக் கழல்களிற்சிலம்புபாட
உரமதில்பருதியென்ன ஒளிவிடுமணிகள்மின்ன
சிரமணிபணிதுலங்கச் சிறுவருமருகிலங்க
விரகுறுபொருனன்றேவி மிளிர்சபைமருவினாளே.

### தரு

இராகம் தோடி — தாளம் ஆதி

சந்திரோதயம்போல்வந்தாளே - தளர்கர்த்தன்தேவி ...சந்.

சந்திரோதயம்போல் வந்தாள் சாந்துசவாதணிந்தாள்
அந்தவதனமின்ன அரியபருதியென்னப்
பந்தமிகுந்தசின்னப் பாலரருகுதுன்ன ...சந்

முத்துவடமிலங்கவே கடிகைமேவுங் கொத்துப்பணிதுலங்கவே
முத்துவடமிலங்கக் கொத்துப்பணிதுலங்கச்
சித்திரச்சிலம்புபாட செம்பொற்பதக்கமாட
அத்தகடகம்நீட அன்பன்சமூமுகம்நாடச் ...சந்

### தேவி விருத்தம்

வன்புறுமரசரஞ்ச வாகைபெற்றுயர்ந்தெந்நாளும்
அன்புறுமொழிகள்பேசி ஆதரித்தெம்மைக்காக்கும்
இன்புறுபிராணநாதா இருமகாருடனேயென்னை
முன்புறவழைத்தசெய்தி முறையுடனறைகுவீரே.

*வசனம் - அடியாளையும் புத்திரரையும் உமதுசமுகத்திற்கு அழைத்த காரணமேதென்று திருவாய் மலர்ந்தருளவேண்டும் பிராணநாயகா.*

### பிலாசிது விருத்தம்.

சுந்தரவகத்தினாளே சுடர்விடுமுகத்தினாளே
மந்திரமிகுந்தவென்றன் மங்கையேசாற்றக்கேளாய்
அந்தமாங்காட்டில்வேட்டை ஆடிநான்வருமட்டாக
மைந்தர்களுடனேசித்ர மனையினில்வைகுவீரே.

*வசனம் - பெண்ணே நான் வீரர்களுடன்கூடிக் காட்டில் வேட்டையாட நினைந்தேன். ஆதலால் நான் வரும்வரைக்கும் அதிக சாக்கிரதையாக மாளிகையில் மைந்தரோடு வீற்றிரும் பெண்ணே.*

*தேவி வசனம் - அப்படியே செய்கிறேன் பிராணநாயகா.*

## பிலாசிது வேட்டைக்குச் செல்லல்.

### பொதுவிருத்தம்.

சுந்தரஞ்சே ரிடையிலங்க வுடைதுலங்கச்
சொல்லரிய வல்லயமுஞ் சொலித்துநிற்க
இந்திரநேர் வதனமது மெழிலெறிப்ப
வேற்றவம்பு வில்லுடனே யெறிகோலீட்டி
மந்திரநேர் புயமுலவு கரத்திற்றாங்கி
வல்லமைசேர் வீரர்களும் மருவயுத்த
மந்திரியாம் பிலாசிதுவும் வீரரோடு
வழிப்பட்டான் வேட்டைபுக்க வெளிப்பட்டானே.

### தரு.

இராகம் சுருட்டி. அடதாளசாப்பு

மந்திரிவேட்டைக்கேகுஞ்
சுந்தரம்பாரீர்
மந்திரிவேட்டைக்கேகுஞ் சுந்தரம்பார்மெத்த
அந்தமுடையரோமை அரசன்றனதுயுத்த ...மந்

விந்தைசெறிந்தநாட்டில் வீரர்கள்கூட
மேவிமிருகங்களைத் தாவியேசாட
தந்திபுலிகரடி நொந்துவருந்திடவே
அந்தவில்லம்பாதிய அணிகள்பொருந்திடவே ...மந்

பிலாசிது விருத்தம்

திடமுறுமம்புவில்லுச் சேர்ந்திடுமெறி கோலீட்டி
இடமுறுகைத்துப்பாக்கி யாவையுமெடுத்துக்கொண்டு
நடமிடுபரியிலேறி நாமனைவோருங்கூடி
அடவியில்வேட்டையாட அகமகிழ்வொடுவாரீரே.

தரு.

இராகம் தேசிகதோடி. தாளம் மிசுரம்

பல்லவி.

தேடிவேட்டையாடுவோம்வாரீர் - அதி
தீரர்களேரண சூரர்களேயிதோ ...தேடி

அநுபல்லவி.

ஒடியேநாமிந்தக் காடெங்குஞ்சுற்றியே
ஒய்யாரமாயம்பு கையினிற்பற்றியே ...தேடி

சரணங்கள்.

யானைபுலிகானிடையோடுகுதே- அடவீரரேமிகு
சேனையெனமானினம்நாடுகுதே
கூனல்வில் லெடுத்துவளையடா
குறித்தம்பால்மான் குலத்தைத்துளையடா
ஆனையுள்ள தந்தப்பளையடா
அடடாவரு குதடாநீ தொடடா விடடாபாணம் ...தேடி

சாய்ந்துமந்திபாய்ந்துகுதிக்குதடா - ஒருகரடியானது
காய்ந்துசினந் தோய்ந்துகொதிக்குதடா
மாய்ந்திடமணி வாளினால்வெட்டடா
வந்தமிருகங்கள் நொந்திடத்தட்டடா
வாய்ந்திடும்மிரு கங்களைக்கட்டடா
வடிவாயொரு கலைமானது கடிதாய்வரு குதடாபார் ...தேடி

விருத்தம்

சீரழகுடையவென்றன் றிறல்கொள்வீரர்களேகேளீர்
நேரழகுடனேயிங்கே நின்றருண்டோடுகின்ற
பேரழகுடையமானைப் பிடியாமல்விடுவேனானாற்
பாரழகுடையசேனா பதியெனவதியலாமோ..

### தரு.

இராகம் நாராயணி. அடதாளசாப்பு

மானேமறையாதே - வடிவுள்ள
மானேமறையாதே
நானுனை யேகணை யானதி னாற்செறி
கானக மேற்கொலை தானேசெய் வேனறி ...மானே

வாட்டியுனைமறிப்பேன் - இதோவீரங்
காட்டியுயிர்பறிப்பேன்
தாட்டிக மாயிந்தக் காட்டினி லேசரம்
பூட்டி யிதோவிழுத் தாட்டுவே னிந்நேரம் ...மானே

எடுத்தே தனு பிடித்தே - இதோசரந்
தொடுத்தே மாளவிடுத்தே
ஈடுற வோடியே காடுற முன்னேநான்
தேடிம றித்திதோ சாடுவே னுன்னைத்தான் ...மானே

### விருத்தம்.

தீட்டருமழகுவாய்ந்த திறலுறுமானேகேளாய்
காட்டிடையதிகதூரங் கடிதுடனோடிவந்தாய்
மேட்டிமையானவுன்னை விடுவேனென்றெண்ணினாயோ
ஈட்டியாலுன்னைக்குத்தி இச்சணங்கொல்லுவேனே.

*வசனம் - ஓகோ அழகிய கலைமானே, என்னை நீ வெகுதூரம் அலைக்கழித்தாயே, இதோ உன்னை ஈட்டிக்கிரையாக்குகிறேன் பார்மானே.*

### பொதுவிருத்தம்.

வானவனருளால்மிக்க வடிவுடனங்கேவந்த
மானதைக்கொல்வதற்கு வல்லயமோங்கும்போது
ஞானமாங்குருசிலேகன் நனியறையுண்டார்போலக்
கானமான்கோட்டினூடே கண்டவன்திகைத்திட்டானே.

*வசனம் - மிக்கபிரயாசத்துடன் தொடர்ந்துவந்த பிலாசிது மானைச்சமீபத்து அதைக்கொல்லும்படியாகத் தன்கையிலிருந்த எறிகோலை ஓங்கியபோது அளவற்ற தயைச்சுரூபியாகிய எங்கள்நாயக யேசுக்கிறிஸ்து சிலுவையிலறைந்தபாவனையாக அதன் கொம்புகளினூடே தெரியப்பட இக்காட்சியைக்கண்ட வீரன் மயங்கிவிழ்ந்து பின்னெழுந்து புலம்பும்விதங்காண்க.*

தேவாரம்.

வாலனாகியநாட்டொட்டு வனமதில்மகிழ்ந்துவந்து
சீலமார்வேட்டையாடிச் சிந்தனைகழித்துச்சென்றேன்
கோலமாமிதுபோற்காட்சி குறித்துநான்கண்டதில்லை
ஞாலநாயகனேஸ்வாமி நடுங்கியுள்ளயர்வுற்றேனே.

கையயரந்திடுதேநோக்குங் கண்புகைந்திடுதேயென்றன்
மெய்யெல்லாம்நடுங்கிச்சோர்ந்து வெயர்த்துளம்மெலியலுற்றேன்
ஐயையோவடியேன்கண்ட வதிசயமேதிதற்குச்
செய்வதேதறியேனெங்கள் தேவரேயருள்செய்வீரே.

*வசனம் - ஐயையோ என்குலதெய்வங்களே, இன்நாள்வரையுமிக்காட்டிலே இந்தவிதமான அதிசயத்தைக்காணேனே! என்புத்திகலங்குதே! இதே தெனத்தெரிவிக்க வேண்டும் சுவாமிகளே.*

பொதுவிருத்தம்

காட்டிடைவீரன் காட்சியைக்கண்டு கலங்கிடமானிடைநின்று
கர்த்தனார்பிலாசி தேயெனக்கூவிக்
கருத்தொடுநீயெனைமேவி
நாட்டமாய்வணங்குங் குணுங்கினைமறுத்து நாடுமஞ்ஞானத்தை
வெறுத்து நம்முடைகுரவர் தம்மிடமுற்று நல்
ஞானஸ்நானமேபெற்று
வாட்டமில்லாமல் நடந்திடில்வான வீட்டினைமகிழ்ந்தளித்திடு வேன்
வருகுவாய்நாளைப் பரிவதாயுயிர்த்த வகை
யையுங்காட்டுவேனென்று
தீட்டியவுரையைக் கேட்டகமகிழ்ந்து தேறியேவீரனுமெழுந்து
தெரிசித்தார் யேசு ரட்சகரென்று சிரமிசைகர
முறிஇத்தொழுதான்.

*வசனம் - இந்தப்பிரகாரமாகப் பிலாசிது தான்கண்ட காட்சியால் மயங்கிப் புலம்பிநிற்கையில் அசரிரிவாக்காக அந்தமானிடை நின்று ஓர்சத்தங்கேட்கப்பட்டது. அதேதெனில்,பிலாத்தே நானேபாவிகளுக்காக இரத்தஞ்சிந்தச் சிலுவையில் மரித்த இரட்சகராகிய யேசுக்கிறீஸ்து. நீ என்னைப்பின்பற்றிவா. இப்போது நீபோய் ஞானஸ்நானம்பெற்று நாளை யிவ்விடத்தில் வருவாயானால் நான் உயிர்த்தபாவனையையுங்காட்டுவேனென்று திருவாய்மலர்ந்தருளினார். இதைக்கேட்ட வீரன் அகமகிழ்ந்து தன்னை இரட்சிக்கவந்த இரட்சகரென்று மனந்தெளிந்து தனது இருகைகளையு முயரவெடுத்து வணங்குகின்றவிதங்காண்க.*

## பிலாசிது தரு

இராகம் பெலகிரி அடதாளசாப்பு

மெஞ்ஞானமான விளக்காயிருப்பவா போற்றி - பொல்லா
அஞ்ஞானநீக்க வடியேன்முன்வந்தவா போற்றி
நாட்டிற்பொய்த்தேவரின் கேட்டைவிளக்கினாய் போற்றி - உயர்
காட்டிற்கலைக்கோட்டிற் காட்சியைத்தந்தவா போற்றி
ஈனனென்றெண்ணாமலென்முன்னேதோன்றினாய் போற்றி - உயர்
வானவாநின்னன்பு வைத்துக்கிருபைசெய்வாய் போற்றி
பாவியெமைமீட்க மேவிமுன்வந்தவா போற்றி - என
தாவிதனைநானுன் னடைக்கலமாக்கினேன் போற்றி

*வசனம்- திருவாக்குக்கெதிர்வாக்கில்லை ,தேவரீர் சித்தப்படியே நடக்க ஆய்த்தமாயிருக்கிறேன் சுவாமி*

பொதுவிருத்தம்

காட்சியைக்காட்டிப்பின்னர் கர்த்தனும்மறைந்துபோக
மாட்சிமையுடையவீரன் மனமதில்மகிழ்ச்சியுற்று
நீட்சிசேர்வீரரோடு நின்றவவ்வனத்தைநீங்கி
ஆட்சியாமனையைநாடி அன்புடன்நடந்திட்டாரே,

தரு

இராகம் பந்துவராளி. தாளம் ஆதி

தளபதிமனைதனைச் சார்ந்துநடந்தனனே
உளமகிழ்வாகவே ஒண்ணுதற்கிதையோத ...தள

மெய்ம்மறைநாடிட வேதனைத்தேடிட
நைவினையோடிட நாதனைப்பாடிட ...தள

*வசனம்- இந்தப்பிரகாரமாகக் காட்சியைக்காட்டிய இரட்சகர் போதித்து மறைந்துபோகப் பிலாசிது மனமகிழ்ந்து தனது மனையில்வந்து சேருகிற விதங்காண்க,*

பெண் விருத்தம்.

மதிசெறிபிராணநாதா மலர்நிகர்வதனரூபா
கதியுடனிந்நாள்மட்டுங் காட்டினில்வேட்டையாடிப்
பதியினில்வந்தபோது பார்த்திராவண்ணமாக
அதிமகிழ்வாகவந்த அதிசயமறைந்திடீரே.

*வசனம்- பிராணநாயகா என்றுமில்லா மகிழ்ச்சியோடு இன்றைக்குவந்த காரணமேதென்று திருவாய்மலர்ந்தருளும் சுவாமி*

பிலாசிது தரு

இராகம் புன்னாகவராளி. தாளம் மிசுரம்.

தெரிவையேநான் கண்டகாட்சியைச்
செப்பலாகுமோ மானேதேனே

அரியவனத்தி லடர்ந்துவேட்டை யாடிவரும்போது
அழகுமா னொன்றைக்கண்டே
அதிசயித்தேனே மானேதேனே ...தெரி

மானைத்துரத்திக் கானிற்சென்றென் வல்லையமோங்க
வளர்ந்தகோட்டி னிடையில்ரட்சகர்
வடிவுகண்டேனே மானேதேனே ...தெரி

குருசினிற்கைகா லறையுண்டிருந்த குறிப்பைக்காட்டினார்
கோலத்தைக்கண்டு மயங்கித்தவித்துக்
குப்புறவிழ்ந்தேன் மானேதேனே ...தெரி

தேறிடவுரை கூறியென்றனைத் திடப்படுத்தினார்
தீட்சைபெற்றபின் வாவெனவவர்
செப்பியேமறைந்தார் மானேதேனே ...தெரி

யேசுரட்சக ராரல்லாதுநா மீடேறமாட்டோம்
யாவுமறிந்தேன் பாவையேஞானஸ்
நானம்பெறுவோமே மானேதேனே ...தெரி

*வசனம்- பிராணநாயகி நானின்று காட்டில்வேட்டையாடும்போது ஓர் அழகிய மானைக்கண்டு அதைப் பின்றொடர்ந்து தனியேசென்று அதைக்கொல்லும்படி ஆயுதத்தை ஓங்கியபோது அதன்கொம்புகளுக்கூடே யேசுக்கிறிஸ்துநாதர் சிலுவையி லறையுண்டாற்போலேதோற்றினார். நான்மயங்கும்போது அவரென்னைத்தேற்றி நாம் வணங்கும்பொய்த்தேவரைவிட்டுத் தம்மைப் பின்பற்றி ஞானஸ்நானம்பெறும்படி அசரீரிவாக்காய்க் கற்பித்தார். ஆதலால் அவரேமெய்த்தேவனென்று நிச்சியமாயறிந்து ஞானஸ்நானம் பெறும்படி வந்தேன். நீயும் பிள்ளைகளும் அவ்விதமே ஞானத்தீட்சை பெறவேண்டும். அதற்குள் மன விருப்பமேது சொல்லும் பெண்ணே.*

*பெண்வசனம்- இறைவன் வார்த்தைக்கெதிர்வார்த்தையுண்டோ? தேவரீருடைய சித்தப்படி நடக்க ஆய்த்தமாயிருக்கிறேன் பிராணநாதா.*

### சபை தரு

இராகம் தோடி. அடதாளம்.

குருவிடஞ்சென்றாரே பிலாசிது - குருவிடஞ்.
குருவிடஞ்சென்றாரே அரிவையர்தன்னுடன்
இருமைந்தர்தம்மையு மின்பமாய்க்கூட்டியே ...குரு
தேவனினுரைப்படி தீட்சையைப்பெற்றிடக்
கோவிலைநாடியே குலவுயோவானெனுங் ...குரு

தீட்சையைப்பெற்றாரே திருஞானத் - தீட்சை
காட்சியைக்கண்டதுங் கர்த்தனுரைத்ததுந்
தாழ்ச்சியில்லாமலே சற்குருவுக்கோதித் ...தீட்
தலைவனார்எஸ்தாக்கி தலைவிதேயொப்பீஸ்து
இலககப்பீஸ்தொப்பீஸ் தெனமைந்தர்பெயர்கொண்டு ..தீட்

மனைதனைநாடினரே எஸ்தாக்கியார் - மனைதனை.
அனைமரிபாதத்தை அன்பொடுபோற்றியே
தனையர்க்கும்மனைவிக்குஞ் சந்தோசஞ்சாற்றியே ..மனை
மெய்ம்மறைதனைக்கண்டு மிகவுள்ளங்களிகொண்டு
துய்யநாதனைத்தேடிச் சோபனங்கள்பாடி ...மனை

*வசனம்- இந்தப்பிரகாரமாகப் பிலாசிது தன் மனைவி மைந்தரோடு யோவானென்னுஞ் சுவாமியாரவர்களிருக்குமிடந் தேடிச்சென்று தனக்கு எஸ்தாக்கியென்றும் மனைவிக்குத் தேயொப்பீஸ்தென்றும் மைந்தருளொருவனுக்கு அகப்பீஸ்தென்றும் மற்றவனுக்கு ஒப்பீஸ்தென்றும் திருநாமம்சூட்டி ஞானஸ்நானம்பெற்றுத் திடசித்தனாய் மனையில் வந்திருந்த விதங்காண்க,*

### பொது விருத்தம்

அகமகிழ்ந்தெஸ் தாக்கியருங் குடும்பத்தோடே
அன்புடன்வீற் றிருக்கும்போ தமலநாதன்
செகமதிற்சோ திக்கவெண்ணி ஆஸ்தியெல்லாந்
திருடர்விலங் காதியவாற் சேதஞ்செய்ய
மிகவறுமைப் பாடாகிப் பொருள்களற்று
வெறுவிலிக ளாகிமிக மெலிந்ததாலே
தகவுறையுந் தலைவனது முகத்தைநோக்கித்
தார்குழலும் புலம்பலொடு சாற்றுவாளே.

*வசனம்- இந்தப்பிரகாரமாக வெகு சந்தோசத்துடன் வீற்றிருக்கும் நாளில் தேவன் இவர்களைச் சோதிக்கக்கருதி இவர்கள் செல்வங்களியாவையும் திருடர்மிருகங்கள்*

*முதலியவற்றால் சேதமாக்கினார். அதனால் மனமெலிவுற்று மனைவி தலைவனுக்கு முறையிடுகின்ற விதங்காண்க.*

### தேவி விருத்தம்.

நாடியதருமஞ்செய்தோம் நமக்குதவிடுவாரில்லை
கூடியேயிந்நாள்மட்டுங் குறைவறவாழ்ந்திருந்தோம்
தேடியபொருள்களெல்லாஞ் சிதைந்திடுமாயமேதோ
வாடியென்மனதுநோக வந்ததேபிராணநாதா

### தரு.

இராகம் சாமா. தாளம் மிசுரம்.

வாடியென்மனம்நோகுதே-என்றன்
மன்னவாஎங்கள் நிலைமையையெண்ண
நாடிவந்த கேடிதென்னவோ
நாதனருளோகுறியேன் சோதனையோவீதறியேன் ..வாடி

கன்றுகாலிகளழிந்ததே-எங்கள்
கைப்பொருள்களுமொழிந்ததே
நன்றியுடனே வாழ்ந்தநமக்கு
நண்ணியகேடேதறியோம் பண்ணியபாவக்குறையோ ..வாடி

பயிர்கள்நாசமானதே-எங்கள்
பவுள்சுமழிந்துபோனதே
உயிர்களுக்குநா மிரங்கவில்லையோ
உற்றகுறையேதறியோம் குற்றமெதன்றேகுறியோம் ..வாடி

கடன்தருபவரில்லையே--அரைக்
காசும் பிரிக்கவல்லையே
தொடர்ந்திடும்வினைக் கேதுசெய்குவோம்
தூயபரன்வாராரோ துயரதனைத்தீராரோ ...வாடி

*வசனம்- கேளும்பிராணநாயகா, எங்கள்திரவியங்களெல்லாம் அழிந்த மாயமேதென்று விளங்கவில்லையே நாயகா.*

### எஸ்தாக்கி விருத்தம்

பார்தலம்புவனம்வானம் படைத்திடும்பரமனிந்தப்
பூதலமனிதருக்குப் புரிந்திடாரநீதியன்றோ
ஆதலாற்றுன்பமெய்தி லன்புடன்பொறுக்கவேண்டும்
காதலியாளேநீயுங் கலங்கிநொந்திரங்கிடாதே.

### தரு

இராகம் தேசிகதோடி. தாளம் மிசுரம்

காதலியாளே நீயுங் கலங்கிடவேண்டாம் -அஞ்சி
மலங்கிடவேண்டாம்
நாதனருட் படிநடப்பதை
நாமென்னசெய்வோம்வே றாரென்னசெய்குவர் ..காத
உலகசெல்வங்கள் தேர்ச்சில் லுருளல்போலாமே
அலகைசெய்த வஞ்சனையோ
அமலன்றன்சோதனையோ வடியோர்நாமேதறியோம் ..காத
பூவிலின்பசுகம் கணப் போதில்மாறிடும்
தேவனருள் நாமடைந்திடிற்
றிங்கேதும்வாராதே பாங்குடையபூங்கிளியே ..காத
செல்வமிந்திட்ட பரன் திரும்பவாங்கினாற்
சொல்வதற்கெதிர் ஞாயமுண்டோ
துக்கஞ்சுகமெல்லா மெமக்கல்லவோதேனே ..காத

### எஸ்தாக்கி விருத்தம்

மலர்மணம்போலேயொன்றி வாழ்ந்திடுமன்பினாளே
பலபலபவுள்சுமற்றேன் பாருளோருதவியற்றேன்
குலநலஞ்சங்கையற்றேன் குறித்தினியிவ்வூர்விட்டு
நலமுறுபிறவூர்செல்லல் நன்றெனவெண்ணினேனே.

*வசனம்- பெண்ணே, வயல் புலம் தோட்டந்துரவு கன்றுகாலி ஆளடிமை பொருள்பண்டங்களெல்லாமிழந்துவிட்டேன். இனியிவ்வூரிலிருந்தாலதென்ன? "கருமவொழுங்கு பெருமைக்கழகு" ஆதலால் நாம் பிறதேசம்போய்ப் பிழைப்ப துத்தமமாய்த் தோற்றுகிறது, அதற்குன் மனவிருப்பமேது சொல்லும் பெண்ணே.*

### பெண் விருத்தம்.

தார்த்தொடையணியும்மார்பா சமர்செய்யவல்லதீரா
பார்த்திபாஉமதுசொல்லைப் பாவைநான்மறுப்பதுண்டோ
சீர்த்திசேரெமதிரண்டு சிறுவர்களுடனேகூடிப்
பூர்த்தியாய்வருவேன்சித்தம் போல்நடந்திடுவீரையா.

*வசனம்- உமதுவாக்கின்படியே எனது பாலகருடனே கூடிப்புறப்படுவதற்கு யாதொரு தடையுமில்லைப் பிராணநாயகா.*

### எஸ்தாக்கி விருத்தம்.

பூவுளர்தொழுதிறைஞ்சப் புகழுடன்வாழ்ந்திருந்தோம்
தாவியபசியால்வாடித் தவித்திடவந்ததென்னோ
யாவருமறியாவண்ண மிப்பொழுதெழுந்துசெல்வோம்
பாவையேதுயரைநீக்கிப் பாலகருடன்வாராயே.

*வசனம்- பிராணநாயகி, ,எமக்கிந்தக் கேடுவந்ததேதென்றுதெரியவில்லை. ஆதலால் ஒருவரையுமறியாமல் பிறதேசஞ்செல்லவேண்டும். பாலரையுங் கூட்டிக்கொண்டு புறப்படும்பெண்ணே.*

### தரு

இராகம் பைரவி. அடதாளசாப்பு.

எஸ். எங்கள்குலச்சங்கை போயிற்றே
எவற்குமிதுவசை யாயிற்றே
மங்கையேயிதற் கென்னசெய்குவோம்
மயங்குதேயுடல் தியங்குதே ஐயோ! ...எங்

பெண் எந்தவிடமென்று செல்லுவோம்
எவருக்கித்துயர் சொல்லுவோம்
மைந்தர்பசியினால் மயங்கிவாடுறார்
வானவாகிர்பை தானேபுரிகுவாய் ...எங்

எஸ் ஆசைக்கிளிமொழிப் பெண்ணாளே
அன்னநடையுடை கண்ணாளே
வாசநகரினை விட்டுநாம்பர
தேசிபோலவே செல்லலாயிற்றே ...ஆசை

பெண் விந்தைமதிமுக வின்பனே
விளங்குமழகுறு மன்பனே
வந்தகுறையென்ன வகையோதெரிகிலேன்
வாடுதேமனங் கோடுதேஐயோ ...விந்

எஸ் பண்ணுறுந்திருப் பாலரே
பட்சமிகுந்தவென் சீலரே
மண்மேலுமக்கிது வருமென்றிருந்தோமோ
வந்தவினையினாற் சிந்தைகலங்குதே ...பண்

பெண் தோணித்துறைமுகங் காணுதே
சோகமிகுந்துளங் கோணுதே
நீணிலந்தரு நீதனேதுயர்
நீக்குவாய்கிர்பை யாக்குவாய்சுவாமி ...தோணி

## தோணிக்காரர் தோற்றம்

### விருத்தம்

இப்படியெஸ் தாக்கியரும் பாரியாளும்
இன்புடைய பாலகரோ டேங்கிநொந்து
செப்பரிய மலைதாண்டி வனங்கள்தாண்டிச்
செல்லுகையில் கடலெதிரே தெரியக்கண்டு
ஒப்பருமக் கரைக்கேகிப் பிறவூர்செல்ல
ஓடமிங்கார் விடுவரென வுசாவும்போது
மைப்பரவு வேலைதனில் வங்கமோட்டும்
மாலுமியுங் கலாசரொடு மருவினானே

### ஆடற் றரு.

இராகம் கேதாரகௌளம். தாளம் சாப்பு

சிங்காரப்பூசணங்களாடச் சிறந்தகலாசுக்காரர்கூடத்
தங்காதேநல்லலங்காரத்துடன் வங்காதிபதிதோற்றினான்
மங்காரோமைநகரைநீங்கி வல்லவெசித்துச்செல்லவே
தொங்காத்தொங்காவென்னப்பாயுந் தோணிக்கதிபதிதோற்றினன்
சட்டைபூட்டித்தொப்பிதரித்துச் சரணிற்செருப்பும்மாட்டியே
கட்டுடன்மரக்கலமதோட்டுங் கப்பலாதிபன்தோற்றினான்
இட்டஆழிகரத்திலெறிக்க எழில்வெற்றிக்கொடிபறக்கவே
மட்டுடன்மரக்கலமதோட்டும் மாலுமிசபைதோற்றினான்

### எஸ்தாக்கி விருத்தம்

அண்ணமாரேநீர்கேளீர் அந்தரித்தலைந்துநொந்து
எண்ணியேபிறதேசத்துக் கேகிடவெழுந்துவந்தோம்
நண்ணிநீர்போகுமூர்க்கு நம்மையுங்கூட்டிச்சென்றால்
புண்ணியத்தோடுமிக்க புகழ்ச்சியுமுமக்குண்டாமே.

*வசனம்- நாங்கள் அந்தரித்தலைந்துவந்தோம், நீங்கள்போகுமிடத்துக்கு எங்களையுங் கூட்டிக்கொண்டுசென்றால் உங்களுக்குப் புண்ணியமுங் கீர்த்தியுமுண்டு அண்ணமாரே.*

### மாலுமி விருத்தம்

வங்கத்தைவைத்திருந்தால் வருபவர்தம்மையேற்றிப்
பங்கத்தையடையாவண்ணம் பறித்திடல்முறைமையன்றோ

இங்கித்தையறியாவண்ண மிரந்துநீர்கேட்பதென்ன
பொங்கத்தினோடுவந்தாற் புகழுடனேற்றிச்செல்வோம்.

*வசனம்- இதற்கு நீங்கள் கெஞ்சவேண்டுமா? கப்பல் பிரயாணமாயிற்று சீக்கிரமேறுங்கள் பிரயாணிகளே.*

### பொது விருத்தம்

சீர்விளங்கெஸ் தாக்கியருந் தேவியாருஞ்
சிறந்தவிரு மைந்தர்களுந் திடமதான
பேர்விளங்கு மாலுமியி னுத்தாரத்தைப்
பெற்றுமரக் கலமேறிப் பிரியமாகத்
தார்விளங்க வங்குறைந்தார் கலாசுக்காரர்
தண்டயலி னுத்தரம்போற் சடுதியாகப்
பார்விளங்கு மெசித்துநகர் தன்னைநாடிப்
பாய்விரித்தே சோபனங்கள் பாடினாரே.

*மாலுமி வசனம்- காப்புக்கார்க்காவி, ததாந்தாமா, அங்கார்க்கா, அங்கார்ச்சீப், அங்கார்க்கோஸ்,விட்டாப்போமந்தில் ,அங்கார்ச்சிவாஸ், சாப்புத்தவர்த்தாந்தாமா, பாற்காவி.*

### மாலுமி தரு.

இராகம் புன்னாகவராளி. தாளம் மிசுரம்.

ஏலேலோ ஏலேலோ -தத்தெய்தாம்
ஏலவலி ஏலேலோ

மேலோங்குரோமைவிட்டு நாங்கள்விளங்கெசித்தூர்செல்வதற்கு
மாலோங்குநங்கூரந் தூக்கி வலித்திடுவீர்பாய்களெல்லாம்

*(வசனம். அவேஸ் கேட்டுப்பாழ்மோர்)*

பாலானபின்னணியில் மேவியேசென்று
பக்குவமதாகவே சுக்கான்பிடித்து
மாலாஞ்சமுக்காவை வளமுடன்பார்த்து
வரிசைபெறுகும்பாசை வைத்துநேரோடி
நூலாலிழைத்திட்ட சவுதரிப்பாயை
நுடங்கிடாதேபின் னடங்கிடக்கட்டி
காலானதாற்பொருமு காவியாக்கட்டிக்
கடுவேகமாகவே விடுவீர்கள்கப்பல் ..ஏலே

புகைபுகைந்து அனல்பொழியும் ஸ்திராம்போலிமலைதெரியுதடா
வகைசெறிந்தநேப்பிள்நகர் தன்னை மருவிவலம்வருகுதடா

*(வசனம்.. யவனவடவிறாஸ்)*

செகமெங்குமஞ்சவக் கினிகக்குகின்ற
சிசிலிதீவுறுமெறனாப் பருவதமிதோபார்
தகைகொண்டநங்கூர மதையிங்குவைத்துத்
தவறாதுகந்தகமு முப்புகளுமேற்றித்
தொகைகொண்டமாலுமிகள் சோபனம்பாடித்
தூக்கியேபாய்களைத் துரிதமாயோடி
வகைகொண்டமால்றா தீவைக்கடந்து
மதித்திரேனியாக்கடலில் வந்ததேகப்பல் ...ஏலே

அல்பிஸ்மலைமறையுதடா உயர்ந்த அப்பினயின்மறையுதடா
நல்லழகார் ஒலிம்பஸ்மலை எதிரே நன்றாகத்தெரியுதடா

*(வசனம். டவனவடவிறாஸ்)*

கல்வியறிவானது கதித்திடுகிரேக்கைக்
கடல்வந்தடுத்துக் கனத்துச்சிறந்த
சொல்லரும்பதியைத் துறந்தேபறந்து
தொடர்ந்துசிப்புருதீ வடைந்துவந்ததனில்
எல்லையுந்தாண்டியப் பாலிதோவந்தோம்
எதிரேயிலங்கு தெசித்துமாநகரம்
துல்லிபமதாய்வேக மோடுவிடுகப்பல்
சுறுக்காகவோடியே துறைசேருவோமே ...ஏலே

ஆலயத்தின்கொடுமுடிபார் அப்பாலதற்கருகே கோட்டைகள் பார்
கோலமுறுஞ்சோலைகள்பார் அழகு குறித்தசித்ரச்சாலைகள் பார்

சீலமதுறைந்ததெரு வீதிதெரியுதுபார்
தேர்குதிரைகரிநிரைகள் சென்றிடுவதைப்பார்
கோலமயிலோடுகுயி லாதியனபுட்கள்
கூடிவிளையாடிவரு கொள்கைதனையும்பார்
காலமதுதவறாது பாயைச்சுருக்கிக்
கட்டவேயாவருஞ் சட்டனவெழுந்து
நாலுதிசையுங்கலா சுகள்பரவிநில்லும்
நங்கூரமிட்டிங் கிறங்கிடச்சொல்லும் ...ஏலே

### மாலுமி விருத்தம்.

சங்கத்தோடிப்பிமுத்துச் சமுத்திரக்கரையிற்சிந்தும்
துங்கத்தையுடையெசித்துத் துறைதனில்வந்துசேர்ந்தோம்
இங்குற்றோர்கூலியீந்தே யேகவெஸ்தாக்கியேநீர்
வங்கத்தின்கூலிதாரா வகையினையுரைசெய்வாயே.

வசனம்-எஸ்தாக்கி எகிப்துதேசக் கரையில்வந்து சேர்ந்து விட்டோம். ஆனால் யாவருங்கூலி தந்திறங்கிப்போக நீயின்னுங் கொடாதகாரணமென்ன? என்பிசகைத்தீர்த்துப் போகுமிடம் நோக்கிப்போ எஸ்தாக்கி.

### எஸ்தாக்கி விருத்தம்.

பரவுவங்காதிபாநான் பகர்ந்திடுமுரையைக்கேளாய்
இரவிலேயெழுந்துவந்தோம் எம்பொருளிழந்துவிட்டோம்
கரவுநீர்கொள்ளவேண்டாங் கப்பலின்கூலிதன்னைத்
தரவொருவழியுமில்லைத் தயவுசெய்தனுப்புமையா.

*வசனம்- கலங்காதிபதியே எங்களுக்குள்ள ஆஸ்திகளெல்லா மிழந்து வெறுமையாய்ப் புறப்பட்டுப் பிறதேசஞ்செல்ல வந்தோம். ஒரு சல்லியுமெங்களிடமில்லை. எங்கள்பேரில் மனமிரங்கி எங்களை விட்டுவிடும் அண்ணா.*

### தற்கத்தரு.

| | | |
|---|---|---|
| இராகம் உசேனி. | (மாலுமி) | அடதாளம் |
| கிட்டஎஸ்தாக்கியே | வாடா-தோணி | |
| விட்டகூலிதன்னைத் | தாடா | |
| மட்டறிவில்லாத | மூடா-தந்து | |
| விட்டெங்கேனும்போகிற் | போடா | |

| | | |
|---|---|---|
| இராகம் துசாவந்தி, | (எஸ்தாக்கி) | அடதாளசாப்பு |
| ஐயாவிதுவெகு | தொல்லை-இங்கே | |
| அரைக்காசுமெம்வச | மில்லை | |
| மெய்யாயெனதுடை | சொல்லை-நம்பி | |
| விட்டிடுந்தருவது | வல்லை | |

மாலுமி.

| | |
|---|---|
| வல்லையென்றுஞ்சொல்ல | லாமோடா-நாங்கள் |
| வாங்குங்கூலிதப்பிப் | போமோடா |
| நல்லதுனைத்தாக்கு | வோமடா-உன்றன் |
| இல்லைப்பேச்சுப்போக்கு | வோமடா |

### எஸ்தாக்கி

பால்முகத்தையுற்றுப் பாரையா- எம்மைப்
பட்சம்வைத்துக்காத்தி டீரையா
சோலிசெய்யாதன்பு கூரையா-எங்கள்
சோகந்தவிர்த்தனுப்பு வீரையா

### மாலுமி விருத்தம்

ஏதடாகூலியீவ தில்லையென்றிறுக்கிநின்று
வாதடாபேசுகின்றாய் வாய்க்கொழுப்படக்குவேன்நான்
சூதடாபழகிக்கொண்டாய் துட்டனேகூலிநீயிப்
போதடாதராதிருந்தாற் புத்திநான்படிப்பிப்பேனே.

*வசனம்- பழநமுவிப் பாலிலேவிழுந்தாற்போல இனிமையான வார்த்தைசொல்லி எம்மை ஏய்க்கப்பார்க்கிறாயா? வாய்பொத்து. கூலியயைச் சட்டெனக் கீழேவை. மறுத்தாயாகில் நல்லலபாடம் படிப்பிப்பேன் எஸ்தாக்கி.*

### பெண்விருத்தம்

வாருங்களென்றழைத்தீர் வகைதெரியாமல்வந்தோம்
காருங்களெம்மையேகன் கடாட்சமுமுமக்குண்டாகும்
பாருங்களெமதிடத்திற் பணமில்லாதிருக்கநீங்கள்
தாருங்கள்கூலியென்றாற் றரவென்னசெய்வோமையா.

### தரு

இராகம் பியாகடை தாளம் ஆதி

கூலிதர என்னசெய்குவோம் -ஐயனேதோணிக்
கூலிதர என்னசெய்குவோம்
கூலிதர என்னசெய்வோம் சோலிபண்ணவேண்டாமையா
தாலமிசையெங்கள்துயர் தாங்கமுடியாதேமெய்யாய் ...கூலி

கையிலரைக்காசுமில்லையே-ஐயனேயிங்கே
கடன்தருவதும்வல்லையே
கையிலரைக்காசுமில்லைக் கடன்தருவதும்வல்லை
ஐயனேதயைசெய்திடும் ஆண்டவர்க்காய்விட்டுவிடும் ..கூலி

இரக்கமில்லாதசொல்லிதோ - ஐயையோபாவி
என்னவுன்மனதுகல்லதோ
இரக்கமில்லாதசொல்லோ என்னவுன் மனதுகல்லோ
பரக்குமெம்மூர்மறந்தோம் பாடுபடப்பிறந்தோம் ..கூலி

*வசனம்- அகதியைப்பிடித்துப் பகுதிகேட்கலாமா? மனமிரங்கி எங்களை விட்டுவிடவேண்டும் வங்காதிபதியே.*

மாலுமிவிருத்தம்

அடியடிபோலிதோலி ஆருன்னைக்கேட்டார்கூலி
வடிவுடனிதங்கள்பேசி வந்தாயோநீகைவீசிக்
கடிதிலெஸ்தாக்கிவாடா கடன்தருமட்டதாக
வடிவுறுன்மனைவிதன்னை மறிப்பினில்வைத்துப்போடா

*வசனம்- அடியே பெண்ணே, உன்னைக் கூலிகேட்டதார்? பேசாதிரு: அடே எஸ்தாக்கி கிட்டவா, நீ கூலிதராவிட்டால் இவளையிங்கே விட்டுவிட்டுச் சட்டெனப்போய்க் கிரயஞ் சம்பாதித்துவந்து தந்து இவளை மீட்டுக்கொண்டுபோவாய் எஸ்தாக்கி.*

எஸ்தாக்கி விருத்தம்.

இப்படிமொழியலாமோ ஏகனுக்காயிரங்கி
ஒப்பறுமனைவிமைந்த ருடனெனையனுப்புமையா
தப்பிதஞ்செய்யவேண்டாஞ் சங்கைதானிழந் திட்டாலும்
மைப்பழிகுழலைவிட்டு மறுகிநான்போகேனையா.

*வசனம்- இந்தவிதமான கொடூரவார்த்தை சொல்லலாமா? தேவனுக்காக எனது மனைவி மைந்தரை என்னுடன் விட்டுவிட வேண்டும். ஒருபோதும் விட்டுப்போகேன் வங்காதிபதியே.*

தரு

இராகம் ஆனந்தபைரவி. தாளம் அடதாளம்.

மாலுமி.

தேவியைவிட்டுப்போடா அல்லாற்கூலி சீக்கிரமாய்த்தாடா

இராகம் துசாவந்தி. அடதாளசாப்பு.

எஸ்தாக்கி

தேவியைவிட்டெங்கே பாவிநான்செல்லுவேன்
சிந்தைகலங்குதையா

மாலுமி.

சிந்தைகலங்கிடவே செல்லாவிடிற் றொந்தரவுசெய்குவோம்

எஸ்தாக்கி

அந்தோமிகுந்திட்ட தொந்தரைவந்தாலும்
அன்னத்தைவிட்டேகேன்

மாலுமி.

விட்டுப்போகேனெனவே திட்டஞ்சொல்லிவீணாய்வருந்தாதே

எஸ்தாக்கி.

கட்டியடித்தாலும் மட்டற்றமங்கையை
விட்டுப்பிரியேனே

*எஸ்தாக்கிவசனம்- நீரென்ன தொந்தரவுசெய்தாலும் எனது மனைவியைவிட்டுப் போகமாட்டேன் ஐயா.*

மாலுமி விருத்தம்

அதிருறவுரைகள்பேசு மாங்காரக்கலாசுமாரே
எதிர்மொழிபேசுமிந்த வீணனைப்பிடித்துக்கட்டி
கதியுடன்வருத்திப்பின்பு கடந்துசென்றிடவேசெய்வீர்
மதியிலான்மறுத்தானாகில் வலோற்காரஞ்செய்குவீரே

*வசனம் - என்னோடெதிர்த்துப்பேசிய இவனைப் பிடித்துக்கட்டி வருத்தஞ்செய்து போகும்படி செய்வீர்கள் மறுத்தானானால் வலுவந்தமாய்ப்பிடித்துத் தள்ளிவிடுங்கள் வீரரே.*

*வசனம்.*

*கலாசுகள் - அடே கிட்டவாடா, காசுதருகிறாயா? இல்லையா?*

*எஸ்தாக்கி-காசுதரஒருவழியுமில்லை அண்ணமாரே!*

*கலாசுகள் - அடே பாய்மரத்தோடே அடுத்துக்கட்டடா, தாடியிலே பிடியடா, சள்பிள்என்றடியடா.*

விருத்தம்.

எஸ் அடிக்கிறார்வீரரென்னை அழகுறுதாடிதன்னில்
பிடிக்கிறாரிச்சதிக்குப் பெருமானேயென்னசெய்வேன்
பெ துடிக்குதேயங்கமெல்லாந் துணைவனைத்தொட்டபோதில்
இடிக்குதேயெனதுநெஞ்சம் ஏகனேயிரங்குவாயே.

தரு

இராகம் ஆனந்தபைரவி. தாளம் ஆதி

எஸ் ஈனமாயடிக்கிறார்க ளையனே-இதற்
கென்னவகைசெய்திடுவேன் துய்யனே
மானத்தைக்கெடாதருள்செய் மெய்யனே-கன
வாதைசெய்யவேண்டாங்கொடைக்கையனே

மாலு காசுதரவல்லையென்று சொல்கிறாய் -நல்ல
கதைபேசியென்னுரையை வெல்கிறாய்
கூசிமடமாதுபின்னே செல்கிறாய்-என்றன்
கூலிதராதேகமன நல்கிறாய்

| | | |
|---|---|---|
| பெண் | ஐயையோ அடியாள்மன | மேங்குதே-என்றன் |
| | அன்பரழகுமுகம் | வீங்குதே |
| | மெய்யாயிருவிழிநீர் | தேங்குதே-இதை |
| | விளம்பனதறிவு | நீங்குதே |
| மாலு | கூலிதராமற்சென்ற | தாரடி-உன்றன் |
| | கொழுநன்பிழைக்கவகை | பாரடி |
| | சோலியில்லாதவகை | தேரடி-பணஞ் |
| | சுறுக்குத்தந்தென்பிசகைத் | தீரடி |
| பிள்ளை | அப்பாதமைப்பார்க்கமனம் | நோகுதே-எங்கள் |
| கள் | அன்னைதன்னறிவுகெட்டுப் | போகுதே |
| | இப்படிவருத்தத்துய | ராகுதே-நாங்கள் |
| | எப்படிப்பொறுப்போமுளம் | வேகுதே |
| மாலு | கிட்டநின்றிடாமலெட்ட | வோடுவீர்-ஏதுங் |
| | கிளத்தாதுமதுவாயை | மூடுவீர் |
| | சட்டெனவிறங்கியூரை | நாடுவீர்-பணந் |
| | தந்துதாயைமீட்கவகை | தேடுவீர் |

### எஸ்தாக்கி விருத்தம்.

விற்கொண்ட பிறைநுதல்சேர் மெல்லியளே?
பசும்பொன் மேனியாளே
கற்கண்டின் மிக்கமொழிக் காரிகையே
காரளகத் தாளேமுத்தார்
பற்கொண்ட பாவையரே பரன்செயலோ
அறிவழிந்து பதைக்கிறேன்நான்
மற்கொண்ட திண்புயஞ்சேர் மாலுமியும்
மனமிரங்க வழிகாணேனே.

### தரு

இராகம் ஆனந்தபைரவி. தாளம் மிசுரம்

எஸ் மானேமறிப்பினில் நாமிருந்தேளம்
மனதுவருந்திட வந்ததென்னோ
வானோனருளிது தானோவிதற்கென்
வகைசெய்குவோமென்றன் மங்கையரே

பெண் மன்னனேவேறு வழிகாணேனிங்கெனை
வைத்துநீர்சென்று பொருள்தேடி
வன்மனத்தாரிவர்க் கீர்ந்தெனைமீள
வழிவகைபாரு மெழிலரசே

எஸ் மீட்டுக்கொள்வீரென்று தீட்டினாயுன்னைநான்
விட்டெங்கேசெல்லுவேன் மெல்லியலே
வாட்டமுடன்போக மாட்டோமென்றாலுமிவ்
வஞ்சர்விடுவாரோ ரஞ்சிதமே

பெண் பாலகர்சோர்ந்து தவியாமல்நாங்கள்
பாதுகாவல்செய்தல் நீதமல்லோ
கோலமுடையவிப் பாலகரைக்கூட்டிக்
கொண்டுசென்றுகாத்துக் கொள்வீரே.

எஸ் குழந்தைகள்டம்மையுங் கூட்டிச்செல்வீரென்று
கூறியதேதென்ற னாறுதலே
தளர்ந்தவுன்னுள்ளந் தனையரைக்காணாமல்
தாங்கமுடியுமோ மாங்குயிலே

பெண் கண்மணிகடம்மைக் காணாமலென்றன்
கண்ணொளியெய்துமோ மன்னவரே
புண்மனமாகுதே யென்னசெய்வேனிது
பூதலத்தில்நாஞ்செய் பாதகமோ

எஸ் என்னசெய்வேனென்றா யுன்னைமறிப்பி
லிருத்திநான்செல்லுவ தெப்படியோ
அன்னமேயுன்னக் களையாய்வருகுது
ஆகும்வழியொன்றுங் காணேனே

பெண் மீண்டுமீண்டுமிதை யெண்ணாமலென்றன்
வேந்தனேபாலரை யுங்கூட்டி
ஆண்டவன்தன்னரு ளாற்கரைசேர்த்தபின்
அப்புறம்மீட்டென்னை யாள்வீரே

பெண் விருத்தம்

துன்பமாயிரந்திட்டாலுந் துட்டர்கள்விடவேமாட்டார்
இன்பமார்புதல்வரோடே யேகியேபொருளைச்சேர்த்த
பின்பதாய்வந்துமீள்வீர் பின்னொருவழியுமில்லை
அன்பனேநானிருக்க அனுமதிதாருமையா

தரு

இராகம் மோகனகல்யாணி. அடதாளசாப்பு

அன்பனே அனுமதி தாரும் -எங்கள்
அரியபாலகர்தம்மை அலையாமற்காரும்
துன்பமுடனேமனஞ் சோராமல்நீரேகும்
தூயபரமநாதன் துணைதானுண்டாகும் ...அன்

ஒருநாளும் பிரியாமல் வாழ்ந்தோம் -என்றும்
ஒழியாத்துயர்க்கடற் குள்ளாகியாழ்ந்தோம்
பெருமாகுலமுற்றாலும் பிரியாதிருத்தல்வல்லை
பிராணநாயகாவேறு பேறேதுமில்லை ...அன்

சென்றுபொருள்தேடி வாரும்-என்றன்
சிறைதன்னைமீட்டொரு தேசத்திற்சேரும்
நின்றுநாமெல்லோரும் நெடுமூச்செறிந்துமென்ன
நெருப்பாயெரியுதுள்ளம் நேசரையுன்ன ...அன்

ஏகன் செயலிது வாமே-அவர்
இரக்கமுண்டானாலெங்கள் கலக்கங்கள்போமே
சோகமார்பவத்தாலிச் சோதனைசெய்கிறாரோ
துக்கந்தவிர்த்தொருகால் சுகத்தைத்தாராரோ ...அன்

*பெண்வசனம்- பிராணநாயகா, நீர்போய்ப் பணஞ்சேர்த்துவருமட்டாகத் தேவகிருபையால் இவ்விடமிருக்கிறேன். ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் பிராணநாயகா.*

*எஸ்தாக்கி வசனம் -எப்படி உன்னைவிட்டுப்போவேன் பெண்ணே*

பெண் விருத்தம்

தந்தரமாகஎம்மைச் சதிகாரர்மறித்துக்கொண்டார்
சிந்தைநொந்தழுதிட்டாலும் திரும்பியேபார்ப்பாரில்லை
வந்திடுவருத்தமெல்லாம் வானவன்விலக்கிவைப்பார்
மைந்தரேதந்தையோடு மகிழ்வுடன்செல்லுவீரே.

*வசனம்- -இனியென்னசெய்வோம் பாலரே! உங்கள்பிதாவுடன் போய்வாருங்கள் மக்காள்*

## பிள்ளைகள் தரு

இராகம் சாவேரி. தாளம் ஆரபி

பிள் எப்படிநாம்பிரிவோம் அன்னையரே தாயே
இரக்கமுமக்கில்லையோ அன்னையரே

தாய் அப்பப்பாஎன்னசெய்வேன் பாலகரே இந்த
அவதிவரலாயிற்றே பாலகரே

பிள் உன்னைத்தனியேவிட்டு அன்னையரே நாங்கள்
ஒருபோதும்போகமாட்டோம் அன்னையரே

தாய் என்னுடன்நீரிருக்கிற் பாலகரே பசி
எப்படிப்பொறுப்பீர்கள் பாலகரே

பிள் நீபசியாயிருக்கில் அன்னையரே நாமும்
நேசமாகவிருப்போம் அன்னையரே

தாய் மாபிரலாபம்வேண்டாம் பாலகரே ஏகும்
மன்னருங்களைக்காப்பார் பாலகரே

*வசனம் -இனியென்னபேசியும் ஏதுசெய்வோம் உங்கள்பிதாவுடன் போய்வாருங்கள் மக்காள்*

## பிள்ளைகள் விருத்தம்

தினமுமெங்களை யணைத்துச் சீருடன்வளர்த்திட்டாயே
சினமுறுகப்பற்காரர் சிறைதனில்வைத்திருக்கக்
கனமுறுகத்தையோடு காளையர்செல்வதற்கு
மனமதுவருகுதில்லை மாதாவேஎன்னசெய்வோம்.

## தரு

இராகம் ஆனந்தபைரவி அடதாளம்

தாயேயுமைப்பிரிந்து- போகமனந்
தாங்கமுடியாதே
மாயவுலகத்தில் வாழ்வென்னவாழ்வம்மா
வாடுகுதேமனங் கோடுகுதே ஐயோ ...தாயே

அங்கமுருகுதம்மா-கண்கள்கண்ணீர்
ஆறாய்ப்பெருகுதம்மா
எங்கள்துயரை யெவர்க்குச்சொல்லுவோம்
இப்படியும்மைவிட் டெப்படியுய்குவோம் ..தாயே

மெத்தப்பசிக்குதம்மா-அகமிக
வேர்த்துக்களைக்குதம்மா
அத்தனோடும்மைவிட் டன்புடன்செல்வமோ
சித்தமுருகுதென் செய்குவோமம்மணி ...தாயே

தாய் விருத்தம்

பத்தியாய்நிதம்வணங்கும் பரிவுறுமனுடர்தம்மைக்
கர்த்தனார்தாமோர்போதுங் கைவிடமாட்டார்மக்காள்
சித்தநீர்கலங்கவேண்டாந் திடமாய்இப்போதுசெப்பும்
புத்தியைக்கேட்டுநீங்கள் புரவலனுடன்போய்வாரீர்.

தரு

இராகம் சங்கராபரணம். தாளம் ஆதி

அப்பரைநீர்விட்டு அகலவேண்டாம் மக்காள்
அவமதியாயேதும் புகலவேண்டாம் மக்காள்
தற்பரனார்நேசந் துறக்கவேண்டாம் மக்காள்
சந்ததமுஞ்செபத்தை மறக்கவேண்டாம் மக்காள்
துட்டருடன்விளை யாடவேண்டாங் கெட்ட
தோழருடன்நீங்கள் கூடவேண்டாம் மக்காள்
பட்டுப்பணிதனைத் தேடவேண்டாம் மக்காள்
பசித்திட்டாலும்முகங் கோடவேண்டாம் மக்காள்
குன்றுகுழிநாடிப் போகவேண்டாம் மக்காள்
குணுக்கனுக்கேயடிமை யாகவேண்டாம் மக்காள்
என்றுமுகம்வாடி மலங்கவேண்டாம் மக்காள்
என்னைநினைத்துள்ளங் கலங்கவேண்டாம் மக்காள்

வசனம் -ஒன்றுக்கும்பயப்படாமல் உங்கள்பிதாவுடனே சென்று நான்சொன்ன புத்தியின்படி நடந்துகொள்ளுங்கள் மக்காள்

பிள்ளைகள் வசனம் -நாங்கள் என்னசெய்யப்போகிறோம் தாயே

பெண் விருத்தம்

தடமுடிநேர் வடிவுடைய புயத்தினானே
தங்கமய மானதிரு முகத்தினானே
கடிவைநடை யுடனிலகு வயத்தினானே
காதலிமே லன்புவைத்த நயத்தினானே.

திடமுடனே திருமணஞ்செய் தின்நாள்மட்டுஞ்
சீர்சிறப்பாய் வாழ்ந்துமிகச் சுகித்திருந்தோம்
இடைநடுவிற் பிரியவந்த தென்னசெய்வோம்
எங்கெனும்போய்ப் பொருள்தேடி எமைமீள்வீரே.

## தரு

இராகம் சங்கராபரணம். தாளம் மிசுரம்

வஞ்சகமாலுமி வன்சிறைவைத்தானென்
றஞ்சவேண்டாம்மன்னவா- புவி
கொஞ்சவாழ்வே மன்னவா
கெஞ்சிமன்றாடினும் மாலுமிதன்னுடை
நெஞ்சமிளகுதல் வல்லை-வேறோர்
தஞ்சமென்றாலெமக்கில்லை
மிகு தொல்லை. ...வஞ்ச

மைந்தர்பசியால் வருந்தியுழன்றகம்
நொந்தேயழுகிறார் கூவி-அவ
தந்தரஞ்செய்தானே பாவி
மிகு கோபி ...வஞ்ச

எத்துயர்வந்தாலும் கர்த்தன்மலரடி
சித்தமதிற்தினம் எண்ணும் -பய
பக்தியுடன்செபம் பண்ணும்
சுகம் நண்ணும். ...வஞ்ச

ஆதிபரன்விடு சோதனையோவிது
வல்லாலலகையின் சூதோ-இந்தப்
பொல்லாங்குவந்ததும் ஏதோ
அருள் யாதோ ...வஞ்ச

## பொது விருத்தம்

இப்படியே எஸ்தாக்கி மனைவியோடும்
இருமைந்த ரோடுமிக விரங்கிநிற்கத்
தப்பிதஞ்சேர் கலாசுகளுங் கோபங்கொண்டு
தலைவிதனைச் சிறையிருத்தித் தலைவன்றன்னைக்

கைப்பிடியாய்ப் பிடித்திழுத்துக் கரைக்குவந்து
காளைகளை யும்விடுத்துக் கடத்திவிட்டார்
வெப்பமதா யழுதிரண்டு மைந்தரோடும்
வேறூர்க்குப் போகவென வெளிப்பட்டானே

*வசனம்- இந்தப்பிரகாரமாக எஸ்தாக்கியும் மனைவி மைந்தருங்கூடிப் புலம்பிநிற்கையில் பெண்சாதியைப்பிடித்து மறியலிட்டு எஸ்தாக்கியையும் பிள்ளைகளையும் வலோற்காரமாகக் கப்பலின்நின் றிறக்கிவிட்டார்கள். அப்போதவர் மிகுந்த துயரத்துடனே வேறூருக்குப்போகிற விதங்காண்க.*

எஸ்தாக்கி விருத்தம்

அன்னியர்க ளெனைவெருட்டி யலைக்கழித்து
அரிவையையு மெங்களையும் பிரித்துவிட்டார்
முன்னிதுவந் தெய்துமென வறிந்தேனானால்
மோசமுறிக் கப்பல்தனி லேறவொட்டேன்
சின்னமக வோரையெங்கே கொண்டுசெல்வேன்
தியங்குதே தலைவிதனை நினைக்கும்போது
என்னசெய்வே னென்னசெய்வே னெமையாள்வோனே
ஏதுமறி யாப்பாவிக் கிரங்குவாயே.

தரு

இராகம் புன்னாகவராளி. அடதாளசாப்பு.

என்ன செய்வே னென்ன செய்வே னென்ன செய்குவேன்
எந்தன்தேவி யைப்பிரிந்து எங்கேசெல்லுவேன்
முன்னை நாட்பு ரிந்த பாவம் முற்ற லானதோ
மொய்குழலாள் தன்னை நீங்க முறைமையாகுமோ
அன்னை மாம ரியமக வானநேயனே
ஆருந்துணை யில்லையெனை யாழுந்தூயனே
முன்னே கால்கள் வைத்தே யேகப் பின்னி வீழ்த்துதே
மோசத்தினைத் தீர்த்தருள்செய் யேசுநாதனே
எம்மை நினைந் தேந்திழையு மேங்கி நிற்பாளே
எப்படிநான் மீளுவேனோ வேகநாதனே
நம்மெளிமை சொல்லிப் பொருள் நாட்டில் வாங்கியே
நணுகிவரு மளவுங்கப்பல் நண்ணிநிற்குமோ
மக்கள் பசி யாலே சோர்ந்து மயங்கிவாடுகிறார்
வனத்திலென்ன செய்வேனொரு மனையுமில்லையே

தக்க சோக மாயிவர்கள் தண்ணீர்கேட்கிறார்
தவிப்பை நீக்கக் கொஞ்சநீருந் தருவாரில்லையே
ஓகோ புன லாறெதிரே ஒன்றுதோன்றுதே
ஊடேசெல்லக் கூடுமோநா னுணரேனையனே
ஏகா விதற் கென்ன செய்வே னென்றன்மைந்தரை
எப்படியிவ் வாற்றாலேகொண் டேகலாகுமோ

எஸ்தாக்கி விருத்தம்

மைந்தரேயென்னசெய்வேன் வருவதுவருவதெல்லாந்
தொந்தரவல்லால்வேறு சுகமொன்றுங்காண்கிலேனே
இந்தவாறதனின்றாழ மெவ்வளவறிகிலேன்நான்
எந்தமாதிரியாயுங்க ளிருவரைக்கொண்டுசெல்வேன்.

*வசனம்- ஐயையோ இவ்வாற்றிற்தாழ் எவ்வளவென்றறியாமல் உங்களிருவரையும் ஒரேமுறையில் எப்படிக்கொண்டுசெல்வேன் பாலகரே.*

அகப்பீஸ்து விருத்தம்

இப்படியிருவர்தம்மை ஏந்திநீர்கொண்டுசென்றால்
எப்படிவருமோஐயா என்னையிவ்விடத்தில்விட்டுத்
தப்பறுதம்பிதன்னைத் தாங்கிநீர்கடலைத்தாண்டி
அப்புறம் விட்டுவந்து அடியனைக்கொடுசெல்வீரே.

*வசனம்- பிதாவே! இப்படி இருவரையுங் கொண்டுசெல்ல என்னமோசஞ் சம்பவிக்குமோ தெரியாது. தம்பியை அக்கரையிற்கொண்டுபோய்விட்டு மீண்டுவந்து என்னையுங் கொண்டுபோவீர் ஐயா.*

எஸ்தாக்கி விருத்தம்.

மைந்தனேயிந்தவார்த்தை வசனித்ததாலேமிக்க
சந்தோசமானேன்தேவன் தன்னையேநினைத்துக்கொண்டு
இந்தநீர்க்கரையில்நிற்பா யெவ்விடத்திலும் போகாதே
சிந்தையாய்க்கொடுபோய்விட்டுச் சீக்கிரம் வருகுவேனே.

*வசனம்- நீயிவ்வார்த்தைசொன்னதினால் மிகவுஞ்சந்தோசமானேன் .உன்தம்பியைக்கொண்டுபோய் அக்கரையில்விட்டு வருமளவும் தேவனைப்பார்த்துப் பிராத்தித்துக்கொண்டுநிற்பாய் என்னருமைமைந்தனே.*

### தரு

இராகம் மோகனம். அடதாளம்

சீர்செறுபாலனைத் தூக்கினார்-அவர்
சிக்கெனவக்கரை நோக்கினார்
வார்பெறுமாற்றினைத் தொடர்ந்தார்-அவர்
மார்பளவுநீரில் நடந்தார்
கடல்மிகுதாழ்வென்று கண்டார்-அவர்
கருத்தழிந்தேதுயர் கொண்டார்
திடமயர்ந்தேங்கியே யழுதார்-அவர்
தேவனைநோக்கியே தொழுதார்
மார்பிலேபாலனை ஏந்தினார்-அவர்
மல்லாந்துநீரிலே நீந்தினார்.
ஏர்பெறுமக்கரை சேர்ந்தார்-அவர்
இதயமதிற்றுயர் தீர்ந்தார்.

*வசனம்- இந்தப்பிரகாரமாக இளையபிள்ளையைத்தூக்கிக் கடலைநீந்தி அக்கரைசென்றபின் பயந்தெளிந்து சொல்லுகிறவிதங்காண்க.*

### எஸ்தாக்கி விருத்தம்.

கண்ணொளிபோன்றபாலா காட்டினிற்கடுவாயோனாய்
பண்ணொலிகேட்டுநீயும் பரதவித்திடவேவேண்டாம்
விண்ணவனுதவியுண்டு மீண்டுமக்கரைபோயுன்றன்
அண்ணனைக்கொண்டுமிழ்வே னன்புடனிருந்திடாயே.

### பொதுவிருத்தம்

அஞ்சிடா தக்கரையி லிளையோன்றன்னை
அன்புடனே விட்டுமூத் தோனைநாடி
நெஞ்சமுட னேமீண்டும் பரனைவேண்டி
நேர்ந்துநடுக் கடலினிடை நீந்தும்போது
வஞ்சகஞ்சேர் கடுங்கடுவா யோனாய்வந்து
வளைந்திரண்டு பாலரையும் வவ்வியோட
மிஞ்சுதுயர்க் கடலாழ்ந்து கோகோவென்று
விளம்புவா னிடைநீரிற் றளம்புவானே.

*வசனம்- இந்தப்பிரகாரமாக இளையபிள்ளையை நீறுகரையில்விட்டு மூத்தபிள்ளையை நாடி நடுக்கடலில்வரும்போது மூத்தவனைக் கடுவாயும் இளையவனை ஓனாயும் பிடித்துக்கொண்டோட எஸ்தாக்கி மயங்கிக் கலங்குகின்றவிதங்காண்க.*

### எஸ்தாக்கி தரு

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி

ஒகோவிதென்னமாய மறியேனே-ஐய
ஒகோவிதென்னமாயங் குறியேனே
ஒகோவிதென்னமாய மேகாவிரங்கிடாயோ
ஆகக்கடுவாயோனாய் வாகாய்ப்பிடித்தோடுதே ...ஒ
வஞ்சகமிருந்தபொல்லாக் கடுவாயே -என்றன்
மைந்தன்றனைநீவிட்டு விடுவாயே
நெஞ்சில்மிகுகடின மிஞ்சுமோனாயேமிக
வஞ்சியழுஞ்சுதனைக் கெஞ்சினேன்விட்டுவிடு ...ஒ

### எஸ்தாக்கி விருத்தம்

அந்தந்தோவென்னசெய்வே னநியாயவிலங்கினங்கள்
வந்தென்றன்பாலருள்ளம் வருந்திடப்பிடித்திரத்தஞ்
சிந்திடக்கடித்துக்கொண்டு செல்லுகின்றனவேநேச
மைந்தர்கள்தமைவிட்டிந்த மண்ணினிலிருக்கலாமோ

### தரு

இராகம் பெலகிரி. அடதாளசாப்பு.

பிரியமாகநிதம் பெருமைபாராட்டியே
அருமையதாய்வளர்த்த உரியஉங்களைவிட்டு
அழுவேனோநீரில் விழுவேனோதேவைத் தொழுவேனோ
காவிற்கடுவாயோனாய் கவ்விற்கொண்டோடிற்றோ
நோவுற்றிடக்கொண்டேக நோக்கிச்சோகாக்கினி
நூர்ப்பேனோதுயர் தீர்ப்பேனோகண்ணால் பார்ப்பேனோ
காதலுறுமென்மைந்தர் கலங்கிப்பதைபதைத்த
பாதகந்தனைக்கண்டு பாவிநானித்துயர்
படுவேனோஅயர்ந் திடுவேனோசீவன் விடுவேனோ
தாவிப்பயின்றெடுத்த தாயிதனையறிந்தால்
ஆவலுடன்புலம்பிச் சீவனுள்ளளவிலும்
ஆறாளேயுளந் தேறாளேசோகம் மாறாளே

### எஸ்தாக்கி விருத்தம்

ஆழ்ந்தவன்புடையவென்றன் அரிவையைப்பிரிந்துவிட்டேன்
சூழ்ந்தவென்பாலர்தமைத் தொடர்விலங்குணக்கொடுத்தேன்
தாழ்ந்தவாருதிசூழிந்தத் தரையில்நானிருக்கலாமோ
மாழ்ந்துயிர்துறத்தல்நன்று வானவாவருள்செய்வாயே

தரு

இராகம் காம்போதி. அடதாளசாப்பு.

மைந்தரேயுமைக்கிட்டி வந்துகடுவாயோனாய்
வவ்விக்கொண்டோடினவோ

இந்தமிருகங்கட் கிரையாய்வளர்த்தேனோ
அந்தோவெனதக நொந்தேயுருகுதே ...மைந்

காவில்மிருகங்கள் மேவிப்பிடித்ததைப்
பூவையறிந்திடிற் சீவன்தரியாளே ...மைந்

ஆதிபரன்விடு சோதனையோவிது
ஏதென்றறியேனிப் போதுசிறியேனே ...மைந்

வனமார்விலங்குகள் சினாமாய்ப்பிடித்ததோ
எனதுமனமிகு மனலாயெரியுதே ...மைந்

*வசனம்- ஐயையோ உம்மைமிருகங்களுக்கிரையாக்கி நான் சீவனோடிருக்கலாமோ மக்காள்*

அலகை தோற்றம்

விருத்தம்

தீதானவிலங்கினங்கள் சிறுவரைப்பிடித்ததாலே
ஆதாரமற்றெஸ்தாக்கி அலறியேகரைக்குச்செல்ல
சூதாளனாகவந்து துர்ப்புத்திசொல்வதற்கு
வேதாளநீசனானோன் வெளிப்பட்டான்வழிப்பட்டானே

தரு

இராகம் மோகனம். தாளம் சாப்பு

அலகைவந்ததே -பொல்லாத
அலகைவந்ததே
அலகைவந்ததே கலகமாகவே
அந்தரமாயவ தந்தரஞ்செய்யவே ...அல

தோழர்களைநடித்துப்-பிறைபோல
நீளுறுபற்கடித்து
வீழுசனியைப் போலுரைகூறியே
வெங்கண்பொறியெழ வங்குருமாறியே ...அல

அலகை விருத்தம்.

ஆர்பிள்ளாய்நீதானிந்த ஆற்றருகினிலிருந்து
சோர்வுள்ளார்போலவாடித் தூங்கியேயேங்குகின்றாய்
பார்பிள்ளாயெனையிப்போது பார்த்துன்றன்குறைகளெல்லாந்
தீர்பிள்ளாயுற்றசெய்தி திடமுடன்செப்புவாயே.

வசனம் - ஒகோ நீயார்? நீயெவ்வூருள்ளாய்? உன்செய்தியெல்லாம் விள்ளாய் பிள்ளாய்.

எஸ்தாக்கி விருத்தம்

உரையதுபகரக்கேளா யூருடனுறவிழந்தேன்
தரைதனிற்செல்வத்தோடென் தையலாள்தனையும்விட்டேன்
திரைகடல்நீந்தும்போதென் சிறுவர்கள்தமையுமிந்தக்
கரையினிற்கடுவாயோனாய் கௌவியோடினவென்செய்வேன்.

*வசனம்- நானெனது நாடு வீடு உற்றார் உறவோர் மனை மக்களாகிய செல்வமெல்லாமிழந்து கலங்குகிறேன் அறிவாயாக*

அலகை விருத்தம்.

இந்தமாதிரியுனக்கே இடர்கள்வந்தெய்தினாலும்
சந்தோசமாயெழுந்து தப்பிடவெண்ணினாயோ
பைந்தொடிமைந்தர்தம்மைப் பாரினிலிழந்தாயானாற்
சிந்தைநொந்திடாமலுன்றன் சீவனைவிடுதல்நன்றே.

*வசனம்- நன்று நன்று, ஆர்குடிகெடினும் நீகுடிமிளகுசாறென்றவன் சீலமாய்ப் பெண்டீர் பிள்ளைகளின்றி ஒன்றியாய்ப்போயும் உன் சீவனைப் பத்திரம்பண்ணிக் கொண்டாயோ? துணிவில்லாத பேதையே, இவ்வாற்றி லுன்னுயிரைப் போக்கடித்துவிடுவாயாக.*

பொதுவிருத்தம்

அலகைசொன்ன மொழியதனைக் கேட்டபோதே
அண்ணலெஸ் தாக்கியருஞ் சோகமாகி
உலையதனிற் காய்ந்தநா ராசந்தன்னை
உயர்செவியிற் செலுத்துதல்போ லுள்ளம்நொந்து
பலபலயோ சனைகள்பண்ணிப் பசாசிதென்று
பரனருனை மனதிலெண்ணிப் பணிந்தபோது
நிலையழிந்தே யகன்றதப்பாற் பாலருக்கு
நேர்ந்தநலந் தன்னையினி நிகழ்த்துவாமே.

*வசனம்- பசாசுசொன்ன புத்தியால் எஸ்தாக்கி துர்நினைவுறும்போது தேவனருளால் அவர்மனது பிரகாசிக்கப் பசாசிதுவென்றுணர்ந்து தேவனைப்பிரார்த்தித்தார். அப்போது அலகை மறைந்து போனது. அப்பால் அவர் மைந்தர்கள் இரட்சிக்கப்பட்டவகையை விளக்குவாம்.*

## இடையர் தோற்றம்

விருத்தம்

அணைத்திடுகுழலுங்கோலும் ஆயுதங்களுங்கையேந்தி
நிணத்தொடுதயிரும்பாலும் நேர்ந்திடுவெண்ணெய்மோரும்
மணத்தொடுநெய்யுமுண்ட வண்டியுமழகுதுன்னக்
குணத்தொடுவாழுகின்ற கோவலர்மருவினாரே.

தரு

இராகம் பூபாளம். தாளம் ஆதி.

கோபாலர்கள் வந்தார்-மகிழ்வொடு
கோபாலர்கள்வந்தார்
கோபாலர்களதி கூர்மையதாகவே
காமிதசம்மேய்க்கக் கருத்துடனேகவே ...கோபா
கையினிற்கோல்நீட்டிச்-செருப்பைக்
கால்களிலேமாட்டி
மெய்யினிற்கம்பிளி வேட்டியைப்போர்த்து
வேண்டியதளைகளை விருப்பொடுசேர்த்து ...கோபா
அரிவைதன்னுடன்கூடிச்-சோபனம்
ஆனந்தமாய்ப்பாடி
உரியபாறயிர்நெய்க ளுவப்பாயருந்தி
உடம்பதுபூரிக்கத் திடம்பெறத்திருந்தி ...கோபா

தரு

இராகம் மாஞ்ஞை. தாளம் ஆதி.

இடையன் குறும்பாடு வெள்ளாடு -நல்ல
கொடியாடுசெம் மறியாடு
நிதம்பெறு வரையாடு- நல்ல
நீராடுபள்ளை சேராடு

மகன் வகைவகையாய்ப் பிரிப்போம்-அவைகளின்
வரும்படியின்னதென் றேகுறிப்போம்
தொகைதனை நிதம்பார்ப்போம் -மிருகங்கள்
தொடராமறகிடை நாங்காப்போம்

பெண் செம்மறிப் பாலருந்திற்-கிரந்தி
செறிந்திடுஞ்சேடம் நிறைந்துவிடும்
விம்மிடும்வயிறுமிக- வாய்வு
மேலாமீதின் காலாகும்

இடையன் வெள்ளாட்டுப்பாலில்-யாதொரு
விக்கினமில்லைத் தக்கோரே
உள்ளாடுமக்கரமும் பித்தமும்
ஓடிடுமதிசாரம் நாடாதே

மகன் கம்பிளிபோர்த்திடுவோந் -தோற்பை
களியொடுதோளிற் சார்த்திடுவோம்
அம்புவிதனில்நாமே-பெரிய
அழகுறுமாயர் குலமாமே

பெண் பட்டிதனைத்திறப்போம் -நாங்கள்
முட்டியெடுத்துப் பால்கறப்போம்
சட்டியிலிட்டுவைப்போம்-அதனைக்
கட்டித்தயிராக்குங் காலந்தப்போம்

இடையன் விருத்தம்

தினையொடுகம்புநெல்லுச் சிறந்திடவரிசியாக்கி
நனைவுறப்பால்நிறைத்து நற்புற்கையோடுகஞ்சி
நினைவொடுகாய்ச்சிநல்கும் நேசமாமரிவையேநீ
மனையினிலிருநானாட்டை வழமைபோல்மேய்த்துமீள்வேன்.

*வசனம்- நான் வழமைப்பிரகாரம் ஆடுமேய்க்கப்போகிறேன். நீ மாளிகையிலிருப்பாய் பெண்ணே.*

இடைச்சி தரு

இராகம் சாவேரி. அடதாளம்.

மைந்தனையுங்கொண்டு செல்லும்-அவன்
மறித்தாடுமேய்க்கும் வகையினைச்சொல்லும்

சந்தோசமாயிடங் காட்டும் -நீர்
தடதடத்தால்மேய்த் திடுவதார்தீட்டும்

பாலன்பழகுதல் தீதோ-இவன்
படர்ந்தவனந்தன்னைப் பார்க்கலாகாதோ

சீலமுட்டைக்குளெப் போதுங் -குஞ்சு
சேர்ந்தங்கிருக்குமோ தேர்ந்திதையோதும்

பசுமையானவிடந் தேடி -ஆடு
பரவிமேயவிட்டுப் பட்டியைநாடி

இசைவாயருள்பர னாரே -என
ஏத்தித்தொழுதிங்கே யெய்துங்கோனாரே.

*வசனம்- முட்டைக்குட்குஞ்சு எப்போதும்முட்டைக்குள்ளிருந்து விடுகின்றதா? நீர் தளர்ந்துபோனால் ஆடுமேய்ப்பதார்? ஆதலால் எங்கள் பாலனையுங்கூட்டிக்கொண்டுபோய் ஆடுமேய்க்கப் பயிற்றிவருவீர் நாயகா.*

*இடையன் வசனம்- அப்படியே செய்கிறேன் பெண்ணே.*

பொதுவிருத்தம்.

பட்டியைக்கிட்டியாட்டைப் பரிவுடன்திறந்துமேய
விட்டங்கேநிற்கும்போது விளங்குமெஸ்தாக்கிசேயைச்
சட்டெனப்பிடித்தவோனாய் தருவெனத்துறவேபாலன்
இட்டகூக்குரலைக்கேட்டே இடையருந்திகைத்திட்டாரே.

*வசனம்- இந்தப்பிரகாரமாக இடையர்பட்டியைத்திறந்து ஆடுகளைக் காட்டிற்கொண்டுபோய் மேய்த்துநிற்குஞ் சமயத்தில் எஸ்தாக்கியின் இளையபாலனை ஓனாய்கொண்டோடக் குழந்தை கூக்குரலிடுஞ் சத்தங்கேட்டு இடையரிதேதென்று திகைத்துநிற்கும் விதங்காண்க.*

இடையன் விருத்தம்

நேசமாமகனேநில்லாய் நேர்ந்தவிவ்வனத்தினூடே
கூசியேயோர்குழந்தை குழறிடுங்குரலைக்கேளாய்
வீசமாய்ப்போவோமங்கே மேவியசதிதானேதோ
யோசனையுடனேபார்ப்போ மோடியேவருகுவாயே,

## இடையன் கந்தார்த்தம்

நாடிவாமகனே நலமுறோர்குழந்தையைத்
தேடியேயோனாய் சிக்கெனப்பிடித்து

தரு

இராகம் ஆரபி — அடதாளம்

ஓடுதுபாராய் -கடிதாய்க்கொண்
டோடுதுபாராய்
ஓடுதுபாரதி உக்கிரமமாகவே
சாடிவளைந்ததைத் தாக்குவோஞ்சாகவே ...ஓடு

கூக்குரல்கேளும்-கொஞ்சத்திற்
குழந்தையும்மாளும்
சீக்கிரமாயதைத் தேடிநாஞ்செல்லுவோம்
ஆக்கிர்மமோடெங்க எம்பினாற்கொல்லுவோம் ...ஓடு

பட்டுதேயம்பு-மிருகம்
பதைக்குதேநம்பு
எட்டிநடந்ததைக் கிட்டியேசெல்லடா
என்கண்ணிற்கண்டபின் னேகுமோசொல்லடா ...ஓடு

இடையன் விருத்தம்

விட்டிடுபாணத்தாலே விழுந்தோனாய்மடிந்ததங்கே
கிட்டுவாய்பாலன்தேவ கிருபையாற்பிழைத்துவிட்டான்
பட்டதோபாணமோனாய் பல்லினாற்கடித்ததாலே
நட்டமுமுண்டோவென்று நணுகிநாமறிகுவோமே.

*வசனம்- அண்டத்தைக் கையில்வைத்தாட்டும் பிடாரிக்குச் சுண்டங்காய் மெத்தவும் பாரமா? என்கைக்கு இவ்வற்பசெந்து எம்மாத்திரம், அதோபார்! அம்புபட்டு ஒனாய்மடிந்துபோகப் பாலன் உயிரோடிருக்கிறான். காயமேது முண்டோவென்று சமீபித்தறிவோம் வா மகனே.*

இடையன் விருத்தம்

சேதங்களொன்றுமில்லைச் சிறுகாயந்தானேயுண்டு
நாதனார்கிருபையாலே நல்லதோர்பாலன்பாராய்
ஏதடாகுழந்தாயுன்னை யிவ்விலங்கெடுத்தவாறும்
தாதைதாயுன்றன்பேரூர் சகலமுமுரைசெய்வாயே.

வசனம்- கெட்டி! கெட்டி! காயமொன்றுமின்றிப் பாலன்தப்பிவிட்டான். நீ இந்தத் துட்டமிருகத்தின்வாய்க் ககப்பட்ட வரலாறும் உன் தாய் தந்தையோ டுன்பேருரும் நானறியும்படிசொல் குழந்தாய்.

## ஒப்பீஸ்து தரு.

இராகம் வராளி. அடதாளசாப்பு.

எந்தவிதஞ்சொல்வே
னெங்கள்சரிதைதனை ஐயமார்களே -நாங்கள்
இருந்தமாநகர்றோமை
என்றுரைத்திடுவார்கள் ஐயமார்களே
தந்தையெஸ்தாக்கியென்
தாய்பேர்தேயொப்பீஸ்தாம் ஐயமார்களே-என்றன்
தமையன்போகப்பீஸ்தென்
றன்னையொப்பீஸ்தென்பார் ஐயமார்களே

செல்வமுடனேயத்
தேசத்தினிலேவாழ்ந்தோம் ஐயமார்களே-எங்கள்
திருவெல்லாங்கெடப்பிற
தேசத்தைநோக்கினோம் ஐயமார்களே
வல்லவோர்கப்பலில்
மகிழ்வாயேறிவந்தோம் ஐயமார்களே-கப்பல்
மாலுமிகூலியை
வைத்துப்போவீரென்றான் ஐயமார்களே
சல்லியுமில்லாத
தந்தையைவருத்தினான் ஐயமார்களே -பின்பு
தாயைமறித்தெம்மைத்
தகப்பனோடுவிட்டான் ஐயமார்களே
வல்லமையில்லாமல்
மயங்கித்தவித்திட்டோம் ஐயமார்களே-சோர்ந்து
வாடித்தந்தையுடன்
கூடிநடந்திட்டோம் ஐயமார்களே
அந்தவழியிலப்பர்
ஆற்றைக்கண்டஞ்சினார் ஐயமார்களே-அங்கே
அண்ணனைவிட்டென்னை
அக்கரைகொடுசென்றார் ஐயமார்களே
சிந்தையதாய்விட்டுத்
திரும்பிவரும்போதில் ஐயமார்களே-இந்தத்
தீயவோனாயென்னைத்
தேடிப்பிடித்ததே ஐயமார்களே
அப்பருமண்ணரு
மெப்படிப்போனாரோ ஐயமார்களே-ஒன்றும்
அறியேனவர்செய்தி
சிறியேன்நானென்னசெய்வேன் ஐயமார்களே
இப்போதென்னுயிர்தனை
ரட்சித்துவிட்டீரே ஐயமார்களே-இனி
எப்போதுமடிமையாய்
இருக்கக்கிருபைசெய்வீர் ஐயமார்களே

*வசனம்- இதுதானெனதுவரலாறு, இதையறிந் தென்னை இரட்சிக்கவேண்டும் ஐயமார்களே*

### இடையன் விருத்தம்

புல்லைப்பார்மேய்ந்திடாமற் புலையர்போலிறைச்சிதின்னும்
பல்லைப்பாரோனாயேநீ பாலனைக்கடித்திட்டாயோ
வில்லைப்பாருன்னைநாங்கள் விடுவோமோபாலகன்றன்
சொல்லைக்கேட்டெங்களுள்ளஞ் சோருதேயென்னசெய்வோம்.

*வசனம் -பாரெடா பல்லை, பாரென்வில்லை, வந்ததோ உன்னுயிர்க்கெல்லை.*

### தரு

இராகம் கரகரப்பிரியை தாளம் ஆதி

இந்தவிதம்வந்ததோ சிறுபாலா -நீயும்
ஏங்கித்தவிக்கவேண்டாம் சிறுபாலா

தந்தையைவிட்டுப் பிரிந்தாயோ-தாயார்
தமையன்றன்னைநீங்கிப் பரிந்தாயோ

தோணிக்காரப்புலையன் கெடுத்தானே -உமக்குச்
சோலிமிகவேயவன் தொடுத்தானே

வீணிற்புலம்பவேண்டாஞ் சிறுபிள்ளாய் -உன்னை
விட்டுவிடோம் நீயன்பு தான்கொள்வாய்

*வசனம்- எழுதாவிதிக் கழுதாவதென்ன ? ஒன்றுக்கும் பயப்படாதே ,நாங்களுன்னைப் பாதுகாப்போம் பாலனே*

### இடையன் விருத்தம்

அடியடிபெண்ணேவாராய் அழகுறுகுழந்தைதன்னைக்
கடிதுடன்வனத்திலோனாய் கவ்வியேவந்தபோது
கொடியவோனாயைக்கொன்றிக் குழந்தையைமீட்டுவந்தேன்
பிடியடிநமக்கேன்பாலன் பிறருக்குக்கொடுத்திடாயே.

*வசனம்- பெண்ணே இப்பாலனை ஓனாயின்வாயினின்று இரட்சித்துவந்தேன். இதை ஆரிடமுமுங்கொடுத்து நன்றாய்வளர்க்கச்செய்யும் பெண்ணே,*

### பெண்விருத்தம்

அன்புறுபிராணநாதா அடியவளுரையைக்கேளீர்
என்புதல்வரிலும்மிக்க எழிலுள்ளானிவனைப்பாரீர்
முன்செய்ததவத்தினாலே முடுகினானிந்தப்பாலன்
பின்பொன்றும்பேசவேண்டாம் பிரியமாய்வளர்ப்போம்நாமே.

*வசனம்- அன்பனே, பூரணசந்திரன்போன்ற இப்பாலனையா பிறருக்குக்கொடுப்பது. நாங்கள் அன்புபாராட்டி வளர்ப்போம் நாயகா*

## இடையன் விருத்தம்

மடைச்சியோநீயுமிந்த வையகந்தனிலேயோரம்
படைச்சியோவுனதுபாலர் பசித்தழுகிறார்கள்போபோ
கடைச்சியோமாதர்க்கெல்லாங் காளையையுனக்கேதுக்கு
இடைச்சியேயிடைச்சியான லிவ்வண்ணமெய்திடாதே.

*வசனம்- தான்கிடப்பது ஒட்டுத்திண்ணை, கனாக்காண்பது மச்சுமாளிகையா? நல்லதிருக்கட்டும் ,நீ இடைச்சியானால் இந்தஎண்ணம் வருமா? உனக்கேன்பிள்ளை பயித்தியக்காரி, அலட்டாமல் அப்பாலேபோ.*

## இடையனும் இடைச்சியுந் தரு.

இராகம் சங்கராபரணம் அடதாளம்,

இடைச்சி ஏண்டாபடுகிடையா-நீயும்
இப்படிச்சொல்லவோ பேயிடையா
ஆண்டவன்தந்ததல்லோ-இதை
ஆர்க்குங்கொடுநீ யெனச் சொல்லவோ

இடையன் நல்லமொழிபாங்காய்ச்-சொன்னாய்
நாய்க்கேன்டிபெண்ணே போர்த்தேங்காய்
செல்லக்குழந்தையடி-இதைச்
சீராய்வளர்ப்பது தொல்லையடி

இடைச்சி ஆட்டுநெய்ப்பாலருத்தி-இவன்
அங்கம்பூரித்திட வேதிருத்தி
காட்டுவேன்பாருமையா-இந்தக்
காளையையென்வசந் தாருமையா

இடையன் உண்டிகூழ்தேடுகுதே-கொண்டை
உற்றபூமாலையை நாடுகுதே
பண்டவறைநாடி-உன்றன்
பாடுபதினா யிரம்போடி

*இடையன்வசனம்- உண்டிகூழுக்கழுகுது, கொண்டைமாலைக்கழுகுது, வேண்டாமென்றுசொல்லக் கேட்கிறாயில்லை. போடிபோ ,உன்பாடு பதினாயிரம்.*

## உழவர் தோற்றம்.

### விருத்தம்.

நேரான இளையோனை ஓனாய்வாயின்
நின்றிடையர் தற்காத்தார் மூத்தோனான
சீரான வகப்பீஸ்தைக் கடுவாய்தூக்கிச்
செல்லுகையிற் சிறுவனறி வற்றுக்கூவ
வாரான குரலோசை யேதோவென்று
வயலுழவர் கேட்டுமன வாட்டமுற்று
வீராதி வீரமுட னணுகிப்பார்க்க
வேகமதா யோடியே வெளிப்பட்டாரே.

### தரு.

இராகம் பூபாளம். தாளம் ஆதி,

கரமதிற்கோலேந்தி-விரகொடு
கண்டமனுடர்பயங் கொண்டிடவே
உரமிகுகுரலோசை-கேட்டு
உழவர்கள்விரைவொடு மருவினரே

கல்லொடுபொல்லெடுத்துக்-கொண்டு
கடுங்கொடுங்கடுவாய் நடுங்கிடவே
வல்லமையாய்மறித்துப்-பறித்திட
வளமிகுமுழவர்கள் மருவினரே

### உழவர் விருத்தம்.

நொடியினில்வாடாதோழா நோக்கமாய்க்குழந்தைதன்னை
நெடியதோர்கடுவாய்கவ்வி நேராகவருகுதேபார்
துடிதுடிக்கிறான்பாலன் சுறுக்காகநாங்கள்சென்று
கடிதினில்விலங்கைக்கொன்றக் காளையைத்தூக்குவோமே.

### தரு.

இராகம் கரகரப்பிரியை தாளம் ஆதி,

ஒடிமறியாய்தோழனே-கடுவாயை
ஒடிமறியாய்தோழனே

ஒடிமறியாய்தோழா ஊக்கமுறுகண்ணாளா
தேடியேசேயைத்தூக்கிச் செல்லும்விலங்கைநோக்கி ...ஒடி

சுற்றிமறிக்கமீறுதே-கடுவாயுஞ்
சுழன்றுபாய்ந்துசீறுதே
பற்றிப்பிடித்தகோலால் பதைக்கஅடித்துக்காலால்
எற்றியதனைத்தாக்கு இளைஞன்றனைக்கை தூக்கு ...ஓடி

அஞ்சிப்பயந்துசோருதே-எமைக்கண்டு
ஐயாவெனவேகேருதே
நெஞ்சிற்றுணிவாயிந்த நிமிஷத்தினுக்குளந்த
வஞ்சவிலங்கைமேவி வதைத்துவிடுவோந்தாவி ...ஓடி

தண்டாலடிகள்பட்டுதே-சோகமிகத்
தாவியுயிரும்விட்டுதே
துண்டாய்க்கடுவாய்மன்னை துணித்துச்சிறுவன்றன்னை
அண்டியேதூக்கிவாராய் அழகவதனம்பாராய் ...ஓடி

*வசனம் - பட்டுதொடாகடுவாய், தூக்கியெடடா பிள்ளையை.*

உழவர் விருத்தம்.

புன்மிருகத்தினுக்குட் புகுந்திடவிருந்தபாலா
உன்னுடையூரும்பேரு முற்றதந்தையர்தாய்பேரும்
பின்னிதமிருகமுன்னைப் பிடித்திடநேர்ந்தவாறும்
நன்னயமுடன்நான்கேட்க நட்புடனுரைசெய்வாயே.

*வசனம்- துட்டமிருகங்களுக் குணவாயகப்பட்டும் மீட்கப்பட்ட குழந்தையே! உன் தந்தைதாயுடன் உன்பேரும் உனக்கு இவ்விபத்துநேர்ந்த வகையுஞ் சொல்லுவாயாக.*

## அகப்பீஸ்து தரு.

இராகம் அசாவேரி, தாளம் ஆதி.

என்சரிதையைக்கூற ஐயாவே-இப்போ
தியலமெனக்குப்போதாதே ஐயாவே

வன்புறுகடுவாயை ஐயாவே-காண
மனமிகவேங்குதே ஐயாவே

அறிந்தளவோதிடுவேன் ஐயாவே-நாங்கள்
அரியரோமாபுரியூர் ஐயாவே

செறிந்ததந்தையெஸ்தாக்கி ஐயாவே-தாயார்
திருநாமந்தேயொப்பீஸ்தாம் ஐயாவே

தம்பிபெயரொப்பீஸ்தாம் ஐயாவே-என்றன்
தக்கபேரகப்பீஸ்தாம் ஐயாவே

நம்பியுலகில்வாழ்ந்தோம் ஐயாவே-எம்மை
நாடியதேமிடிமை ஐயாவே

வறுமையாய்ப்புறப்பட்டு ஐயாவே-ஒரு
வங்கத்திலேறிவந்தோம் ஐயாவே

உறுவங்கக்கூலியீய ஐயாவே-வகை
ஒன்றுமின்றித்தவித்தோம் ஐயாவே

கூலிகொடுக்குமட்டும் ஐயாவே-தோணிக்
குறும்பன்தாயைமறித்தான் ஐயாவே

சோலிமிகவடைந்தே ஐயாவே-தந்தை
சோர்ந்தெமைதூக்கிவந்தார் ஐயாவே

வழியிலோராற்றைக்கண்டு ஐயாவே-என்னை
வாரிக்கரையில்விட்டார் ஐயாவே

இளையவனாமொப்பீஸ்தை ஐயாவே-அவர்
ஏந்தியக்கரைசென்றார் ஐயாவே

சென்றுவிட்டென்னைத்தேடி ஐயாவே-அப்பர்
திரும்பிநடாற்றில்வந்தார் ஐயாவே

ஒன்றுமறியேனென்றன் ஐயாவே-அப்போ
தோனாய்வந்தடுத்ததே ஐயாவே

தம்பியைக்கொண்டோடிற்றே ஐயாவே-கண்டு
தவித்துச்சோர்ந்துவிழுந்தேன் ஐயாவே

வெம்பியேயென்றனையும் ஐயாவே-இந்த
விலங்குபிடித்திட்டதே ஐயாவே

*வசனம் -இதுதான் சங்கதி அறிந்துகொள்ளுமையா.*

உழவர் தரு.

இராகம் பெலகரி அடதாளசாப்பு

பந்தமாயுனக்கிந்தத் தொந்தரைவந்ததோ பாலா-நீயும்
பரதவித்திடவேண்டாம்பாதுகாத்திடுவேன்நான் சீலா

வந்துகடுவாயுன்னை வளைந்துபிடித்ததோ பாலா-இந்த
வயதினில்நீயிந்த வருத்தமடையலாமோ சீலா

பெற்றவண்மிகுசோப முற்றுத்தவிப்பாளே பாலா-கண்ணீர்
பெருகத்தந்தையுள்ளங் கருகிவாடுவானே சீலா

உற்றுப்பார்க்கமனம் பற்றியெரியுதடா பாலா-நீயும்
ஒன்றுக்குமஞ்சாதே உன்னைக்காத்திடுவேன்நான் சீலா

*வசனம்- பயப்படாதே, உன்னை மிகுந்த கவனத்தோடு பாதுகாப்பேன். துக்கத்தைநீக்கிச் சந்தோஷமா யென்னுடனிருப்பாய் பாலகனே.*

பொதுவிருத்தம்.

இவ்விதமா யேகன்சோ தனையினாலே
ஏந்திழையுந் தோணிதனில் மறிப்பிருக்கச்
செவ்வையுறு மைந்தர்தமி லிடையரோடு
சிறியவனு முழவரிடம் மூத்தோன்றானும்
கவ்வையுடன் வாழ்ந்தார்எஸ் தாக்கியந்தக்
கவலையுடன் கரையதனை விட்டெழுந்து
எவ்விதமாந் தொழிலேனுஞ் செய்துவாழ
எண்ணியே துயரமுடன் நண்ணினானே.

*வசனம் -அளவற்ற கிருபாசமுத்திரமாகிய ஆதிநாயகனருளால் எஸ்தாக்கியின் பெண்சாதி தோணியிலே மறிப்பிருக்க ,பிள்ளைகளில் ஒருவன் ஆயரிடமும், மற்றவன் உழவரிடமும் வாசஞ்செய்ய, எஸ்தாக்கி மனவிதனத்தோடு எங்கேயாகுதல்சென்று பிழைக்கவென்று புறப்பட்டுப் போகிறவிதங் காண்க.*

எஸ்தாக்கி விருத்தம்.

அன்னைமாமரியதாயே அடியனுக்குதவிநீயே
என்னுடைமனைவியோடு இருபுதல்வரையிழந்தேன்
பின்னையிவ்வுலகவின்பம் பெரிதெனவெண்ணுவேனோ
உன்மகன்தனைமன்றாடி உவந்தருளுதவுவாயே.

தரு.

இராகம் ஆனந்தபைரவி அடதாளம்

என்னசெய்திடுவேன்பாவி சின்னமைந்தரோடென்தேவி
தன்னைவிட்டுத்துயர்தாவித் தயங்குகிறேனேகூவி
சோலைக்கிளிபோலுமானே தூயதித்திப்பானதேனே
ஞாலத்திலெளியேன்யானே நலிந்துவாடுகிறேனே
பாரினிலெனக்கார்தஞ்சம் படர்மாயையிப்பிரபஞ்சம்
நீரதனில்நிற்குங்கஞ்சம் நிறைநீராயிற்றென்நெஞ்சம்
ஈதெனக்கோர்போதனையே தீதகற்றும்வேதனையே
ஆதிகர்த்தன்சோதனையே அருள்செய்மரியனையே
எந்தைபரன்சித்தமிது ஈந்தவன்பறித்தபோது
சிந்தைகலங்குவதேது சித்தமேநீயிதையோது
பூரணமிகுந்தபாலா பூமியுளர்க்கனுகூலா
தாரணிமனுடகோலா தயைசெய்மரியைபாலா.

*வசனம் -பாவிகளை இரட்சிக்கப் பூமியிலேவந்த பரிசுத்த இரட்சகரே, அடியேனைத் தயவுசெய்து இரட்சிக்கவேண்டுஞ் சுவாமி!*

எஸ்தாக்கி விருத்தம்.

மிகுத்திடுநேசமாக விளங்குமைந்தரைக்கைவிட்டேன்
அகத்தினிற்பீடை யோடே ஆயிழைதனைப்பிரிந்தேன்
மகத்துவங்கதித்திலங்கும் வளமுறுநகரமான
எகித்துறைபெரியோரேநீ ரென்னைச்சேர்த்தாளுவீரே.

தரு

இராகம் பந்துவராளி. தாளம் மிசுரம்.

எகிப்துநகரி லியல்பாய்வாழ்ந்திடு வோரே -நீங்கள்
எனக்கோர்வேலைதந் தென்னைக்காத்திடுவீரே

பகுத்தறிவுள்ள பாருறைபெரி யோரே-நல்ல
பணிவிடைசெய்வே னெனையணைத்திடுவீரே

கொத்தவுந்தண்ணீ ரெற்றவுமறி வேனே-உங்கள்
கொல்லைகாத்துநான் நல்லாயங்குறை வேனே

புத்திரர்க்குறும் போர்பயிற்றிடு வேனே-இந்தப்
புவியிற்கூலியா ளாயுடன்படு வேனே

ஏற்றுஎன்றனைச் சேர்த்திடுபவ ரில்லையோ - ஐயோ
என்வயிற்றுக்கும் யானுழைப்பது வல்லையோ

சாற்றுசீவர்கள் போற்றிசெய்திடு நாதா -இங்கே
தவித்திடுமடி யேனுக்குன்னருள் தாதா

*வசனம் -சர்வ வியாபக தயாபரா! நானிளைப்பாற ஓர்வழியுமில்லையே! எனக்கோர் பாதை காட்டவேண்டுஞ் சுவாமி!*

பிரபு தோற்றம்.

விருத்தம்.

அழகெழுமங் குலியதனி லரியசொர்ன்ன
ஆழியது துலங்கவிவ ராரோவென்னப்
பளபளெனச் சிரசிலுயர் பாகைமின்னப்
பரிவுடைய வுத்தரியப் போர்வைதுன்ன
தெளிவுசெறி யொளியினால் விழிகள்கூசச்
சேர்ந்திடுரத் தினவகைகள் பிரபைவீச
உளமகிழ்வா யெகித்துமா நகரந்தன்னி
லுறைபிரபு நிறைசபையில் மருவினானே

## ஆடற்றரு.

இராகம் ஆனந்தபைரவி. அடதாளம்.

பிரபுவந்தாரே -எகித்துறை பிரபுவந்தாரே
பிரபுவந்தாரே பணிகளார்க்கவே
பின்னமின்றிநல்ல கொல்லைகள்பார்க்கவே ...பிரபு

கரமதிற்குடையும்-அழகுறு- களிறுபோல்நடையும்
பரவிடுசோலை சாலைகளுங்கண்டு
பண்புற்றுளந்தனி லன்புமிகக்கொண்டு ...பிரபு

பிரபு விருத்தம்.

ஒருவருமற்றார்போல் உள்ளமுருகிவாடித்
தெருவினிற்றனியேநின்று தியங்கிடும்பிள்ளாய்வாராய்
பெருகுமுன்பதிதானேது பெயரென்னவிவ்விடத்தில்
வருவகையேதென்றன்முன் வண்மையாய்வழுத்துவாயே

*வசனம்- மழையின்றி வாடியபயிர்போல முகங்கோடித் தனியே நீவந்த காரணமேது ? உன்பேருரென்ன ? நானறியும்படி சொல்லும்பிள்ளாய்.*

எஸ்தாக்கி விருத்தம்

நம்பதிரோமைநாடு நாமமெஸ்தாக்கியாகும்
அம்புவிதனிலென்னாஸ்தி அடங்கலுந்தோற்றுவிட்டேன்
தம்பமிலரிவைமைந்தர் தம்மையுமிழந்துவிட்டேன்
வெம்பியேபிழைப்பதற்கு வெளிப்பட்டுவந்திட்டேனே.

*வசனம் -என்னூர் ரோமாபுரி, என்பெயர்எஸ்தாக்கி, என்னாஸ்தி முதலிய ஐசுவரியங்களெல்லாங்கெட்டுப் பிற தேசம்நோக்கி வரும்போது மனைவி மைந்தரையு மிழந்துவிட்டேன். ஆதலால் மனச்சஞ்சலமுற்றுப் பிழைப்புத்தேடிவந்தேன் எசமானே.*

பிரபுவும் எஸ்தாக்கியுந் தரு.

இராகம் முகாரி. தாளம் ஆதி.

பிரபு என்னென்ன வேலைசெய்வாய் எஸ்தாக்கி-உன்க்
கேற்றிடுந் தொழிலென்ன எஸ்தாக்கி

எஸ் வன்னக் குதிரையேற்றம் ஐயாவே-மன்னர்
மைந்தர்க்குப் பயிற்றிடுவேன் ஐயாவே

பிரபு பெரியவன்போற் றோற்றுதே எஸ்தாக்கி-நீயும்
பின்னென்ன வேலைசெய்வாய் எஸ்தாக்கி

பிரபு

எஸ் பூ

பூமரங

பிரபு பங்கமிகவடை

பாவையைவிட்ட

எஸ் வங்கத்தின்கூலிக்காக

மறிப்பிலிருத்திக்கொண்டா

பிரபு புத்திகலக்கமுற்றாய்

புத்திரர்செய்தியென்ன எஸ்தாக்கி

எஸ் கத்துங்கடுவாயோனாய் ஐயாவேஆற்றங்

கரையிற்கடித்தோடிற்றே ஐயாவே

பிரபு கூலியன்புடனீவேன் எஸ்தாக்கி-என்றன்

கொல்லைகாத்திடுவாயோ எஸ்தாக்கி

எஸ் காலினாலிட்டவேலை ஐயாவே-என்றன்

கையினாற்செய்திடுவேன் ஐயாவே

பிரபு விருத்தம்.

சொல்லியமொழியைக்கேட்டுத் துயரமுமிகுதியானேன்
அல்லலுற்றழுங்கவேண்டாம் அமலனாரிரக்கம்செய்வார்
செல்லுமிப்பாதைநேரே சென்றெதிர்தெரியுமென்றன்
கொல்லையைக்காத்தாயானாற் கூலிநானீகுவேனே

*வசனம் -அதோதெரிகின்ற எனதுகொல்லையினிடமாகச் சென்று அதைப் பராமரித்து வருவாயானால் சம்பளந்தந்து உன்னை ஆதரித்துக்கொள்கிறேன் எஸ்தாக்கி.*

*எஸ்தாக்கி வசனம் -அப்டியே செய்கிறேன் எசமானே.*

எஸ்தாக்கி விருத்தம்.

ஏற்றிட்டமனைவியோடு இருபுதல்வரையும்பாவி
தோற்றிட்டபின்பும் மிக்க சுகத்தினைவிரும்பு வேனோ
மாற்றலர்வணங்கநாளும் மகிழ்ந்துவாழாமற்கொல்லை
போற்றிடவிதியதாச்சோ பூரணாவிரங்குவாயே.

...ம்

...பாலா

ஓ மரிபாலா

ஓ மரிபாலா

...றன்

ஓ மரிபாலா

...யத்தானே

... படவுமாயிற்றே ஓ மரிபாலா

...பத்தெனை ரட்சைபுரிகுவாய்

பொதுவிருத்தம்

கொல்லைதனை நாடியெஸ் தாக்கிசென்று
கொத்திவெட்டிப் பயிர்நாட்டி வாழ்ந்திருந்தார்
பொல்லாவங் காதிபன்றுாப் புத்திகொள்ள
பூவையரும் புவிவாழ்வு பொய்யேயென்று
நல்லாதி பரனருளாற் புத்திசொல்ல
நாட்டுவங்க மோட்டுவர் கேட்டுநின்று
எல்லாரு மிணங்கியே யரிவைதன்னை
ஏத்தினார் துதிகள்மிகச் சாற்றினாரே.

வசனம்- இந்தப்பிரகாரமாக எஸ்தாக்கிசென்று கொல்லையைக்காத்தும் பண்படுத்தியும் வாழ்ந்திருக்க, கப்பலில் மறியற்படுத்தப்பட்டிருந்த மனைவியானவள் பசாசினேவல்பூண்ட கப்பற்காரரால் கடினப்படுத்தப்பட்டாள். தேவருளால் அந்தமாதுசிரோமணி அவர்களுக்குப்போதித்த போதனையால் மனந்திரும்பி அவளைநமஸ்கரித்திருந்த விதங்காண்க.

மாலுமி விருத்தம்

மணமலர்க்குழலினாளே மங்கையேயுன்னைவிட்டுப்
பணமதுசேர்க்கவென்று பாலகருடனேசென்ற
கணவனைக்காணோங்கப்பல் கடத்திவேறூர்க்குச்செல்லக்
குணமுடனுன்றனெண்ணக் குறிப்பினைக்கூறுவாயே

வசனம் கப்பற்கூலிக்காகப் பணஞ்சேகரிக்கப்போன உன்னுடைய பத்தாவை இன்னும்வரக்காணோம். கப்பல் பாய்தூக்கி மறுதேசம்போகிறோம். நீயிதற்கென்ன சொல்கிறாய் பெண்ணே

### தேயொப்பீஸ்து விருத்தம்

திடமுறுகணவன்பாலர் தேடியபணத்தோடிந்த
இடமதில்வந்தேயென்னை எங்கெனத்தேடுவாரே
தடமுறுபுயத்தரேயென் சம்மதியேற்பீரோவும்
முடையசித்தம்போற்செய்வீ ரொன்றும்நானறிகிலேனே

*வசனம்- இதற்கு நான் ஒன்றுஞ்சொல்லமாட்டேன். உம்முடையசித்தப்படி செய்யுங்களண்ணா.*

## தேயொப்பீஸ்துவும் மாலுமியுந் தரு

இராகம் தறுவா. அடதாளசாப்பு.

மாலு சித்தமெனவேசொன்ன உத்மியாளேசிறை
வைத்ததுபாவமாக வந்ததே

தேஒ பாவமெனநீர்கண்டால் பூவைதனையிறக்கி
ஆவலாய்ப்போகவிடு மண்ணரே

மாலு கணவன்றன்னைக்காணாமற் கரையிலிறக்கிவிட்டாற்
றுணையுனக்கார்சொல்லுந் தோகையே

தேஒ துணைதனக்கென்னசெய்வேன் தூயபரமனுண்டு
அணையவழிகாணேனே அண்ணரே

மாலு வழிகாணேனென்றுசொல்லி மயங்கித்தவியாதெங்கள்
பிழையைப்பொறுத்துச்செல்லும் பேதையே

தேஒ பேதையெனக்கிரங்கும் பெருமானருளுண்டாகும்
நீதமாய்ப்போய்வருவேன் நேசரே

*தேயொப்பீஸ்து வசனம் -நான்போய்வருகிறேன் அண்ணமாரே*

### பொது விருத்தம்.

வஞ்சகருளமிரங்கி மறிப்பினால்விட்டபின்பு
நெஞ்சினிலதிகநேசம் நிறைந்துறுங்கரையில்வந்து
தஞ்சமொன்றின்றிப்பாலர் தலைவனைநினைந்துகொண்டு
அஞ்சுவாளயர்வாள்சோர்வா ளடிக்கடிபுலம்புவாளே.

*வசனம்- இந்தப்பிரகாரமாகத் தோணிக்காரர் கப்பலாலிறக்கிவிட்டபின்பு தலைவனையும் பிள்ளைகளையும் நினைந்து புலம்புகிற விதம் எப்படியோவென்றால்:*

தேயொப்பீஸ்து தரு.

இராகம் துசாவந்தி. தாளம் ஆதி

காதலரிங்கேவாராரோ வந்தென்கண்ணிற்
கண்டென்துயர்தீராரோ
காதலரிங்குவாராரோ கண்டென்துயர்தீராரோ
கருத்துடனேமிகப் பெருத்திடுமென்மன
வருத்தந்தனைத்தணித்துத் திருத்தவுரித்துடனே ...காத

இங்கேநானென்னசெய்குவேன் ஐயையோபாவி
எப்படிப்பூவிலுய்குவேன்
இங்கேநானென்னசெய்குவேன் எப்படிப்பூவிலுய்குவேன்
ஏங்குதேதுயரினாற் றேங்குதேமனமது
பாங்குறுபாலருட னோங்கல்வரக்காணேனே ...காத

பாவியெனைத்தேடுவாரோ என்றும்நினைத்துப்
பரதவித்துவாடுவாரோ
பாவியெனைத்தேடுவாரோ பரதவித்துவாடுவாரோ
பந்தமிகுந்திடு மென்றனதன்பரும்
சுந்தரமைந்தரு மந்தரித்தலைவாரோ ...காத

தேயொப்பீஸ்து விருத்தம்

சங்கைசேர்தலைவாமிக்க தயவாகநடத்திவந்த
மங்கையைத்தவிக்கவிட்டு மறுதேசம்போய்விட்டீரோ
இங்கேநானென்னசெய்வே னிருபாலருடனேயும்மை
எங்கென்றுதேடுவேனோ ஏதொன்றுமறிகிலேனே.

தரு

இராகம் நீலாம்புரி. அடதாளசாப்பு

எங்கென்றுதேடுவேன் ஏந்தலுடன்பாலர்
ஏகியதெவ்விடமோ-மனம்
ஏங்குதேயென்துயர் தாங்கமுடியாதே
ஏகனேயென்னசெய்வேன்
அங்கம்பதறுதே மங்கைநானென்செய்வேன்
அன்பரைக்காணேனே-நீங்கள்
ஆருங்கண்டாலவர் நேராய்ச்சென்றவிடம்
அன்பாயறைவீரே

பெற்றவயிறனலாய்ப் பற்றியெரியுதேயென்
புத்திரர்தமைக்காணேன்-உயர்
பேருறுமென்கணவர் சோர்வுடனேயெங்குற்றார்
ஆருமுரையீரே
சித்தமுருகியென்றன் புத்திரரொடுசென்ற
பத்தாவைக் காணேனே-எங்கே
சேர்ந்தாரோதுயரினாற் சோர்ந்தாரோவறிந்தவர்
செய்தியைச் செப்பீரே.

தேயொப்பீஸ்து விருத்தம்

சீருறுமனையிழந்தேன் செல்வமுமிழந்தேனென்றன்
ஊருடனுறவிழந்தேன் உண்டியுமிழந்தேன்பாவி
பேருறுபிராணநாதன் பிள்ளைகள்தமையுங்காணேன்
ஆருடனண்டிவாழ்வேன் அமலனேயருள்செய்வாயே.

*வசனம் -சர்வசீவ தயாபரகடவுளே! இசிறேயல் சந்ததியாருக்குக் கடலில் வழிகொடுக்கவில்லையோ? அவர்கள் பசி தாகந்தீர்க்க மன்னாவை வரவிடுக்கவில்லையோ? எலியாஸ்தீர்க்கதரிசிக்குக் காகங்கள் உணவளிக்கும்படி செய்யவில்லையோ? யோசேப்புவைச்சோதித்துத் துயர்தீர்க்கவில்லையோ? அடியாளையும் அவ்வண்ணமே காத்திரட்சிக்கவேண்டுஞ் சுவாமி.*

## விதவைதோற்றம்.

விருத்தம்.

காந்தனுடன் பாலரையுங் காணாதாலே
கலங்கிமன மலங்கியே கனற்பிடித்த
மாந்தளிர்போல் முகம்வாடி யகமுங்கோடி
மாதபயக் குரல்நீட்டும் வாறுகேட்டு
வேய்ந்தமணி யாபரணா திகளைப்பூட்டி
மிளிர்மலர்மா லைகள்சூட்டி விழிமைதீட்டிச்
சாய்ந்தகுழ லாய்ந்துமுடித் தழகுவாய்ந்த
தையல்வித வையுஞ்சபையிற் சார்ந்திட்டாளே

## ஆடற்றரு.

இராகம் சாவேரி தாளம் ஆதி

மதுரரச மொழி
வளர்மலரென விழி
மருவும்விதவையும் வந்தாள்
சபைமுன்பாக ...மது

ரதிமலருடையாள் எழிலுக்கிடையாள்
இசைந்தவிதவையும்வந்தாள் - சபைமுன்பாக ...மது
அன்னமென்னநடை சொன்னவன்னவுடை
அழகுசெறிந்திடவந்தாள் -சபைமுன்பாக ...மது

விதவை விருத்தம்

மதிநிகர்முகத்தினாளே மங்கயேபகரக்கேளாய்
அதிவிதனத்தினோடே ஆற்றலைந்தவர்போல்வந்தாய்
பதியதேதுன்பேரென்ன பாரினிலுனக்குவந்த
சதியதேதெனவெனக்குத் தயவுடன்சாற்றுவாயே.

## விதவையும் தேயொப்பீஸ்துவுந் தரு.

இராகம் ஆனந்தபைரவி. தாளம் மிசுரம்.

விதவை எந்தவூரடிநீ மாதே
இங்குவந்ததேதிப் போதே
சிந்தைநொந்துருகத் தீதே
சோர்ந்ததுசொல்வாய்தப் பாதே

தேஓ சுந்தரஞ்செறிந்த ரோமை
சொந்தமாயிருந்த சீமை
அந்தரித்துவந்தேன் தாயே
ஆதரித்துக்கொள்ளு வாயே

விதவை சிந்தாகுலமுற்ற தேது
தியக்கமுடனேயிப் போது
வந்தவகையைத்தப் பாது
வண்மையாயறிய வோது

தேஓ அந்தரித்துநொந் தலைந்தேன்
அன்பரைப்பிரிந்து லைந்தேன்
மைந்தரையிழந்து நைந்தேன்
வாடியலைந்திங்கே வந்தேன்

விதவை சேர்ந்துமிகுகண்ணீ ராறாய்ச்
சிந்திடவுன்னன்பர் வேறாய்
சோர்ந்துசென்றதாதி யீறாய்ச்
சூழ்ச்சியாயறியக் கூறாய்

தேஓ கூர்ந்தமாலுமி தடுத்தான்
கூலியாற்சோலி தொடுத்தான்
காந்தன்மைந்தரை விடுத்தான்
கப்பலிலெனைத் தடுத்தான்

விதவை தடுத்தபின்னடுத்த தென்ன
தனிமறிப்பிருக்கச் சொன்ன
கடுத்தவுள்ளத்தார்கள் பின்னே
காரியமென்செய்தார் மின்னே

தேஒ தீயமொழியாற் சோதித்தார்
தேவனருளைப் போதித்தார்
மாயமனதைச் சேதித்தார்
வங்கத்தால்விடச் சாதித்தார்

*வசனம் -இதுதான் எனதுசெய்தி அறியுமம்மா தாயே*

விதவை கலித்துறை

அணைவற் றலைந்துநொந் தாயே யினித்துய ராற்றிடுவாய்
இணையற்ற வேக திரித்துவ தேவ னிரங்கிடுவார்
பணைவுற்ற பூவினிற் பத்தாவை நீங்கிப் பரதவித்துத்
துணையற் றிருக்குமென் னோடு வசிக்கிற் சுகிர்தமுண்டே

*வசனம்- அகண்ட பரிபூரணானந்த ஏகவஸ்துவாயிருக்கின்ற தேவனுடைய கிருபாகடாட்சத்தினாலே சகல சம்பத்தையுமனுபவித்து என்னுடன் சுகமேயிருந்து வாழுமம்மாதாயே.*

*தேயொப்பீஸ்து வசனம்- அப்படியே மகாபாக்கியந்தான் அம்மணி.*

பொது விருத்தம்.

இந்தவித மாகவே விதவைவீட்டில்
எஸ்தாக்கி யின்தேவி யிருக்கவேயோர்
மைந்தனுழ வர்களுடனே வாசஞ்செய்ய
மற்றவனா யர்கள்மனையில் வதிந்திருக்கத்
தந்தைகொல்லை தனிற்பணிசெய் திருந்துவாழத்
தற்பரன்சோ தனைநீங்கத் தயவுகூர்ந்து
வந்துசக லருஞ்சேரச் செய்யவென்று
மன்னனைவல் லபனருட்டும் வாறுசொல்வாம்.

*வசனம்- இந்தப்பிரகாரமாக எஸ்தாக்கியின் பாரியாள் விதவையுடனேவசித்திருக்க, ஒருமகன் உழவர்களோடும், மற்றவன் ஆயருடனுஞ்சுகமேயிருக்க, எஸ்தாக்கியானவர் கொல்லையிற் பயிர்நாட்டிப் பராமரித்து வாழ்ந்திருக்கத் தயாபர சரவேஸ்பரன் சோதனைநீக்கிச் சுகங்கொடுக்கச்சித்தமுற்று ரோமாபுரி அரசனுடைய மனதை அருட்டுகிற விதங்காண்க.*

இராசன் விருத்தம்

மந்திரிவாராயிந்த வையகந்தனிலேவேந்தர்
தந்திடுதிறைகடன்னைத் தவறாதுதருகின்றாரா

வந்திடுதொகைகளெல்லாம் வண்மையாய்ப்பிரித்துப்பார்த்துச்
சிந்தனையாயறிந்து தேறிடக்கூறிடாயே.

*வசனம்- மந்திரி, எனதாளுகைக்குட்பட்ட தேசங்களை அரசாளும் வேந்தர்கள் தந்திறைகளை ஒழுங்காய்ச் செலுத்திவருகிறார்களா மந்திரி.*

மந்திரி விருத்தம்.

துட்டர்கள்வெருவிநிற்கச் சுடர்விடுமகுடஞ்சூடி
அட்டதிக்கெங்குமாளு மரசனேயறையக்கேண்மோ
இட்டமாயெகித்திராசன் எங்களுக்குற்றகப்பங்
கட்டவுமில்லையையா காரியமறிகிலேனே.

*வசனம்-- எகித்திராசன் சிலகாலமாய் எங்களுக்குத் தரவேண்டிய கப்பந் தரவில்லை மகாராசனே.*

## இராசன் கந்தார்த்தம்.

பொறுபொறுமமைச்சே புல்லனாம்வேந்தன்
மறுகியேகப்பம் வரவனுப்பாத
கறுவமதெல்லாங் கருத்துடன் வருத்தஞ்செய்தோர்

தரு.

கணத்தினிலடக்குவேனே--அடங்காவிடிற்
கடுஞ்சமர்தொடக்குவேனே
கணத்தினிலடக்குவேனே கடுஞ்சமர்தொடக்குவேனே
கண்டிடுவோர்கெடி மண்டிடமிண்டொடு
சண்டைபுரிந்துகைக் கொண்டிடுவேன்நகர் ...கண

பணத்தில்மிகுத்திட்டானோ-அழிவுகாலம்
பற்றிப்புத்திகெட்டிட்டானோ
பணத்தில்மிகுந்திட்டானோ பற்றிப்புத்திகெட்டிட்டானோ
பட்டினமெங்கணு மட்டறுதுட்டரை
விட்டமர்பொருதிறை சட்டெனவாங்குவேன் ...பண

மறு கந்தார்த்தம்.

பாங்கானதிறைபின் வாங்காது தந்து பரிவுற்றராசனவனும்
போங்காலமுற்றுநீங்காதமனதுபொலிவுற்றவலிமையெதுவோ
ஆங்காரமாக அரசாட்சிசெய்வதற்கு

தரு.

அத்தனைதத்துவமாமோ-எனதுடைய
ஆணவமழிந்துபோமோ

அத்தனைதத்துவமாமோ ஆணவமழிந்துபோமோ
அந்தரசூரிய சந்திரரித்தரை
வந்துவிழுந்து படிந்திடினும்விடேன் ...அத்

புத்திசற்றுமில்லைத்தானோ-அவனுயிரைப்
பூமிதனில்விடுவேனோ
புத்திசற்றுமில்லைத்தானோ பூமிதனில்விடுவேனோ
புந்தியழிந்துடல் நொந்துமடிந்திட
விந்தையுடன்மிகு தொந்தரைசெய்குவேன் ...அத்

இராசன் விருத்தம்.

புந்திதேர்ந்தெனதுமுன்பு புகழுடன்மதிகளோதும்
மந்திரிகேளெகித்து மன்னவன்றனையடக்கப்
பிந்திடாப்பொருநனான பிலாசிதுதன்னையென்முன்
வந்திடச்செய்வாய்கப்பம் வாங்கியேவருகுவானே.

*வசனம்--எகித்தரசனின் மகத்துவத்தை யடக்கவேண்டும் எனது விசைய சேனாதிபதியாகிய பிலாசிதுவை அதிசீக்கிரம் அழைப்பியும் பிள்ளாய் மந்திரி.*

மந்திரி விருத்தம்.

சொல்லிடக்கேளுமையா துரைபிலாசிதுவென்றோதும்
வல்லவன்றானிரேழு வருடங்களுக்குமுன்னே
செல்வங்களெல்லாந்தோற்றுத் தேவிமைந்தர்களினோடே
அல்லிலேயெழுந்துவேறூர்க் கணுகினானறிகுவீரே.

*வசனம்-கேளும் இராசனே, பிலாசிதென்னுந் தளபதி வறுமை வசத்தாய்ப் பெண்சாதி பிள்ளைகளுடனே தேசாந்திரியாய்ப் புறப்பட்டுப் போய்விட்டார் அறியுங்களையா சுவாமீ.*

## இராசனும் மந்திரியுந் தரு.

இராகம் ஆரபி ஏம் ஆதி.

இரா. என்னசொன்னாய்நீயிங்கே என்றன்பிலாசிதெங்கே
இந்நாள்வரையுமித்தை இயம்பாததேதுசொல்லாய்

மந். மன்னனேயிதையின்று வரையுமறியீரென்று
முன்னேதெரியாதையா முடிந்ததற்கேதுசெய்வோம்

இரா. சென்றுமுடிந்ததென்று திருத்தஞ்சொல்கிறாய்நின்று
நன்றியில்லாதவுன்னை நம்பியிருக்கலாமோ

மந். பொய்யாய்நான்சொல்லவில்லைப்பொருநனுக்குற்றதொல்லை
மெய்யாயறிவீரென்று விளங்கியிருந்தேனையா

இரா. இத்தையோதாநீவேறு எதனைச்சொல்வாயோகூறு
சித்தங்கலங்கியென்றன் தேகமுஞ்சோருகுதே

மந். நரபதியேமறுத்து நான்சொல்பிழைபொறுத்து
திருவருள்கூர்ந்தடியேன் செய்வதைசெப்புவீரே

மந்திரி வசனம்.

*இராசாதிராச பிரபிடீக மகத்துவனே,, மறுத்துப்பேசிய குற்றத்தை மன்னித்துக்கொண்டு இனிமேலடியேன் செய்யவேண்டிய பணிவிடையைக் கட்டளைபண்ணி யருளுங்களையா சுவாமீ.*

இராசன் விருத்தம்.

சிறந்திடுதலைவரஞ்சச் சீர்த்திபெற்றதிகமேன்மை
நிறைந்திடுமெனதுநாட்டை நேசமாய் ப்பாதுகாத்தே
உறைந்திடுதலைவாநீயு முன்றுயரோதாதென்னை
மறந்துவிட்டேகினாயோ வளர்படைக்குரியகோவே.

தரு.

இராகம் பெலகரி அடதாளம்

திசையெங்கும் புகழ்பொங்க
மிகுதுங்கனெனவந்த துரையே-நீரும்
திறல்பெற்ற திருவற்றுக்
குறைவுற்றுப் போனீரோ துரையே

அசைவற்ற நிலையுற்ற
மிகுகொற்றமுடையவென் துரையே-நீரும்
அணைகெட்டு மிடிதொட்டு
எனைவிட்டுப்போனீரோ துரையே

வகைசேரு மிகுதீர
ரணசூரனெனும்வீரத் துரையே-என்றன்
மனமஞ்சி யனல்நெஞ்சி
லுரமிஞ்சியெரியுதே துரையே

பகைகொண்ட திறல்வண்ட
ரடிதெண்டனிடுகின்ற துரையே-இந்தப்
படிவந்த தெனமுந்த
வுரைதந்தோரிலையென்றன் துரையே

இராசன் விருத்தம்.

இட்டனாம்பிலாசிதென்னும் என்படைத்தலைவன்றன்னை
எட்டுநாட்குள்ளதாக எங்கேனுந்தேடிப்பார்த்துத்
திட்டமாயழைத்துக்கொண்டு திரும்பிடத்தூதர்தம்மைக்
கட்டளைதவறாவண்ணங் கடிதினிலனுப்புவாயே.

*வசனம்- கேளும்மந்திரி, பிலாசிதென்னுஞ் சேனாதிபதியை எங்கேனுஞ்சென்றுதேடி எட்டுநாட்களுக்குள்ளாக என்சமுகத்திற் கொண்டுவரும்படி ஆங்காங்கு தூதரையனுப்பு ாய் மந்திரி.*

*மந்திரிவசனம் -அப்படியே செய்கிறேன் ராசனே.*

தூதுவர் தோற்றம்

விருத்தம்

சிரமிசைபாகைமாட்டிச் செண்டதின்மேலேநாட்டிப்
பரிவுறுசட்டைபூட்டிப் பளிரிடுங்கோல்கைநீட்டி
இரவிநேர்மணிகள்சூட்டி எரியெழுவிழிகள்காட்டித்
துரிதமன்னனைப்பாராட்டித் தூதுவரிதோவந்தாரே.

ஆட்டற்றரு

இராகம் ஆனந்தபைரவி. அடதாளம்

தூதுவர் வந்தாரே-விரகொடு
தூதுவர்வந்தாரே

பாதச்சிலம்பு தாதிமியென்னப்
படிந்தபதக்கம் மார்பினிற்றுன்னக்
காதிற்குண்டலக் குவளையாடக்
காவலன்கொலு மேவிநாடத் ...தூது

சிரசிற்பாகைசிறந்தொளிவிடச்
செண்டத்தின்மீது நின்றுபளீரிட
வரிசைத்துரையின் சமுகந்தாவியே
வந்திடவேமிகு சுந்தரமேவியே ...தூது

தூதுவர் விருத்தம்.

துதியுடனிலங்கிநிற்கும் தூயமாநகராம்ரோமைப்
பதியரசாளுகின்ற பார்த்திபன்கொலுமுன்பாக
அதிகெதியாகவெம்மை யழைத்திடுகருமந்தன்னை
மதிசெறியமைச்சேநீரும் வண்மையாயுரைசெய்வீரே.

*வசனம்-சரணஞ் சரணமையா, எங்களை அழைத்தகாரியம் இன்னதென்று திருவாய்மலர்ந்தருளுஞ் சுவாமி.*

மந்திரி விருத்தம்.

தூதரேகேளுமெங்கள் துரைபிலாசிதுமிகுந்த
ஆதுலனாகியேவே றன்னியநகரைநாடி
மாதுமைந்தர்களோடுற்றான் வலிமையாயெங்குந்தேடிக்
காதலாய்க்கூட்டிவந்தாற் காவலன்றயையுண்டாமே.

*வசனம்-வறுமையாய்புறப்பட்டுத் தேசாந்திரியாய்ச்சென்ற பிலாசிதென்னுஞ் சேனாபதியைக் கூடியவிரைவில் எங்கேனுந் தேடிக்கூட்டிக் கொண்டு வருவீராயின் இராசனது தயையைப்பெறுவீர் தூதரே.*

*தூதுவர் வசனம்-அப்படியே செய்கிறோமையா.*

தூதுவர் விருத்தம்.

வீரனேபகரக்கேளாய் விளங்கிடுரோமைநாட்டைத்
தீரமாயரசாள்வேந்தன் திட்டுகட்டளைதப்பாது
ஊரெல்லாமோடித்தேடி உயர்பிலாசிதுவைநாங்கள்
நேருடனழைத்துக்கொண்டு நிருபன்முன்னேகுவோமே.

தரு.

இராகம் சாவேரி அடதாளம்

தேடுவோம்வாராய்-பிலாசிதைத்
தேடுவோம்வாராய்
தேடுவோம்வாராயே வீடெங்கும்பாராயே
நாடுவிட்டேயோடி நாமிருவருங்கூடித் ...தேடு

அத்துறைபாராய்-மனத்தினி
லையத்தைத்தீராய்
நித்திரைகொள்ளாமல் நெடுந்தூரஞ்செல்லுவோம்
நேர்ந்தோரெல்லாருக்கும் நேசமாய்ச்சொல்லுவோம்...தேடு

சற்றங்கேநில்லும்-அங்கேவருந்
தலைவனார்சொல்லும்
உற்றுப்பாராமல்வா ஓ ! இவன்கட்டையன்
ஓங்கல்தளபதி உன்னதநெட்டையன் ...தேடு

சேனையைத்தாவி-நிற்பாரங்கே
சென்றுபார்மேவி
ஆனதலங்க ளடங்கலும்பார்த்தோமே
தீனின்றியோடியே தேகமும்வேர்த்தோமே ...தேடு

பொதுவிருத்தம்.

திறையானா மெம்பரதோர் விடுத்ததூதர்
திரைகடலோ டடவிமலை தேசந்தாண்டி
நிறையாயொவ் வொருநகரும் நேராய்ப்பார்த்து
நிமலனருட் கிருபையினால் நேர்ந்தெஸ்தாக்கி

உறைபதியா மெசித்துநகர் தனிலேமேவ
உதயதின கரன்குடபா லுறைந்ததாலே
குறைவறவே யவரிருக்கும் பிரபுவீட்டில்
குணமுடனே யிருபேருங் குறுகினாரே.

*வசனம் -இந்தப்பிரகாரமாகத் தூதுவர் ஆங்காங்கே சென்றுதேடியும் அகப்படாமல் மிகு சோகத்துடனே எஸ்தாக்கியிருக்கும் வீட்டினிடமாகவரச் சூரியனஸ்தமித்ததினால் அவ்வீட்டிற் சென்றாரென்க.*

பிரபு விருத்தம்.

கந்தடுபுயத்தினாரே கருதருவயத்தினாரே
சுந்தரமுடையவீர சூரரேபகரக்கேளீர்
அந்தரித்தலைந்துநொந்தே அகமிகவேர்த்துவாடி
வந்திடுகருமந்தன்னை வளம்பெறவிளம்புவீரே.

*வசனம்- மிகுந்த ஆவலுடன் இவ்வேளையில் நீங்கள் வந்த காரணமேதென்று சொல்லும் வீரரே.*

## தூதுவரும் பிரபுவுந் தரு.

இராகம் சங்கராபரணம் அடதாளசாப்பு.

தூதுவர் சீரியஏராளா-உலகிற்
சிறந்திடுபேராளா
காரியமற்றுலைந்தோம்-ஒர்வீரனைக்
காணாதுதேடிவந்தோம்

பிரபு காணாமலேநீருந்-தேடுகின்ற
காரியவானூரும்
நாணாதவன்பேரும்-அறிந்திட
நட்புடனேகூறும்

தூதுவர் கூறும்ரோமாபுரியூர்-அழகு
குலவுபிலாசிதுபேர்
மீறுந்தயாநிதியே-அவரெங்கள்
வேந்தன்தளபதியே

பிரபு தளபதிபோலறிஞன்-இங்கேயில்லைச்
சார்ந்தனனோர்வறிஞன்
உளமகிழ்வாயிங்குற்றான்-அவனென்
உதவிமிகவேபெற்றான்

தூதுவர் பெற்றமனுடனெங்கே-அதனைப்
பிரிவாயுரையுமிங்கே
சற்றவரைப்பார்ப்போம்-மனதினிற்
சந்தேகத்தைத்தீர்ப்போம்

பிரபு தீர்க்கிலிதோபாரும்-நிற்போனச்
செருனன்றானோதேரும்
ஆர்க்கும்மிகுநேசன்-இவனென்
னருமைசெறிதாசன்

*பிரபு வசனம்- என்னாற் கூறப்பட்டமனிதன் அதோநிற்கிறான்பாருந் தூதரே.*

தூதுவர் விருத்தம்.

நேருறுதோழாவங்கே நிற்பவர்தம்மைப்பார்த்தால்
சீருறுபிலாசிதைப்போல் தெரிந்திலவாதலாலே
பேருறுமிந்தவீட்டிற் பிரியமாயுறங்கிநாளை
ஊரினைநாடிநாங்க ளுவப்புடன்செல்லுவோமே.

*வசனம்- அங்கேநிற்பவர் பிலாசிதுபோற் காணப்படவில்லை இனியென்னசெய்வோம் இவ்வீட்டிற்றுயின்று சூரியோதயமானபின்பு நமது தேசத்துக்குப்போவோந் தோழனே,*

தூதுவர் மறுவிருத்தம்.

சாயலைத்தெரிந்திடாது தலைவன்போய்வெகுநாளப்பா
தீயபோர்க்களத்தில் முன்னாட் சென்றபோதுற்றநெற்றிக்
காயமொன்றுண்டேயத்தைக் கருதியேபார்க்கவேண்டும்
நேயனேவிடிந்தபின்பு நெற்றியைப்பார்த்துச்செல்வோம்.

*வசனம் -பிலாசிதுபுறப்பட்டு வெகுநாளாய்விட்டபடியால் ரூபம்விகாரமாயிருக்கும். ஆதலால் அவருக்கு யுத்தத்திலே நெற்றியிற்பட்ட காயமொன்றுண்டு.அக்காயம் இம்மனுசனிலிருக்கிறதோவென்று விடிந்தெழுந்து பார்த்துக்கொண்டுபோவோம் தோழனே.*

பொது விருத்தம்.

மன்னவன் விடுத்ததூதர் வரவினையறிந்தெஸ்தாக்கி
தன்மனந்தனில்நினைந்து தலைவிபாலகர்டம்மை
உன்னியேயுருகிவாடி உயர்பரன்றன்னைநோக்கித்
துன்னியவிழிநீரோட்த் துயரொடுசொல்லுவானே.

*வசனம்- தனது இராசன் விடுத்ததூதுவரென் றெஸ்தாக்கியறிந்து மனைவி மைந்தரைநினைத்துக் கலங்கித் தேவனைநோக்கி முறையிடும்விதம் எப்படியோவென்றால்.*

எஸ்தாக்கி விருத்தம்.

இறைவனேயென்னசெய்வேன் எனதுமன்னவனிப்போது
முறையுடனெனைநினைக்க முடுகியகாலமிதோ
குறைவறுமனைவியோடு குழந்தைகள்தமையும்விட்டு
உறைபதிதனக்குமீண்டு மொன்றியாய்ச்செல்லுவேனோ.

தரு.

இராகம் காபி தாளம் ஆதி.

காவலன் விடுத்ததூதர்
மேவிவந்திருக்கிறாரே கதிவாசா-என்றன்
காரிகைமைந்தரைவிட்டுப்
பாரினில்நான்வாழலாமோ கதிவாசா

தாவியென்மிடிமைதன்னைத்
தலைவற்கோதாதுவந்தேன் சருவேசா-அவர்
சார்ந்தறிந்ததாலோவிங்கே
போந்ததூதரைவிடுத்தார் சருவேசா

தேவியென்னசெய்திட்டாளோ
பாவிநானறிகிலேனே சேசுநாதா-என்றன்
தெள்ளமுதைப்போன்றவிரு
பிள்ளைகளைப்பிரிந்தேனே சேசுநாதா

ஆவிநிகர்மைந்தர்செய்தி
பூவையுமறிந்திடாளே ஆதிநாதா-அந்த
ஆரணங்கறிந்தாளாகில்
தாரணியிலிருப்பாளோ ஆதிநாதா

பொது விருத்தம்.

இவ்வடைவே எஸ்தாக்கி புலம்பியந்த
இரவதனிற் றுயின்றுமறு நாளெழுந்து
செவ்வையுறு கொல்லைதனக் கேகும்போது
தேடிவந்த தூதுவர்கள் நாடிவந்து
கௌவையுடன் பார்க்கவவர் நெற்றிதன்னிற்
காயமதைக் கண்டுதள கர்த்தனென்று
திவ்வியநா யகனருளாற் றோர்ந்துகொண்டு
தேறியவர் கழல்பணிந்து செப்புவாரே.

*வசனம்- இந்தப்பிரகாரமாக எஸ்தாக்கி புலம்பலுடனே அன்றிராவைக்கழித்து விடிந்தெழுந்து கொல்லயைநாடிச் செல்லும்போது காத்திருந்த தூதர் அவருடைய நெற்றிக்காயத்தைக்கண்டு இவர்தான் சேனாதிபதியென்று மட்டிட்டு நமஸ்காரஞ்செய்து சொல்லுகிற விதங்காண்க*

தூதுவர் விருத்தம்.

ஐயகோதுரையேயிந்த அவதிப்பட்டிடவாயிற்றோ
வையகமெல்லாந்தேடி வாடியேநாடிவந்தோம்
துய்யநல்வதனங்காணத் துரையுமையழைக்கச்சொன்னார்
செய்யகட்டளைதப்பாமற் சீக்கிரம்வருகுவீரே.

*வசனம்- நீரிந்த வருத்தமனுபவிக்கவுங் காலம்வந்ததோ! இதற்கு நாமென்னசெய்வோம். எங்களிராசன் உம்மைக்காணாமல் ஆங்காங்கு தூதரைவிடுத்தார் அப்படியே நாங்களுமிந்த நாடெங்குந்தேடி அலைந்து உம்மைச்சந்தித்தோம், இனிநீர்சந்தோசத்தோடு இராசசமுகத்துக்குச் சீக்கிரமாக வாரும் தளபதியே.*

எஸ்தாக்கி விருத்தம்.

சீக்கிரம்வருவீரென்று செப்பியதூதரேநான்
நீக்கரும்மைந்தரோடென் நேரிழையையுமிழந்தேன்
ஆக்கியவரசன்சொற்போ லடியனும்வருவதற்கு
ஊக்கமாய்ப்பிரபுமுன்போ யுத்தாரம்பெற்றுமீழ்வேன்

*வசனம்-தூதரே நானென் பெண்சாதி பிள்ளைகளைத் தோற்றுமிகுபாவியானேன். அதலால் அரசசமுகத்திற்கு வருவது சரியல்ல, ஆயினும் இராசகட்டளை தப்பாது எனது எசமானிடம்போய் உத்தரவுபெற்றுவருகிறேன் தூதரே.*

எஸ்தாக்கி விருத்தம்.

வரிசையற்றுலைந்துநொந்து வாடிவந்தடைந்தவென்னைப்
பிரியமோடிந்நாள்மட்டும் பேணியேகாத்திட்டீரே
உரிமையாய்முன்னெனக்கு உதவிசெய்ரோமைநாட்டின்
அரசனுமழைத்தான்போக அனுமதிதாருமையா.

*வசனம்- என்னைப்பாதுகாத்த எசமானே, முன்னே என்னைத் தாபரித்துவந்த ரோமாபுரிவேந்தன் என்னைவரும்படி தூதரையனுப்பினார், ஆதலால் நான்போக உத்தரவு தாருங்களையா.*

பிரபுவும் எஸ்தாக்கியுந் தரு.

இராகம் முகாரி அடதாளசாப்பு.

பிரபு. நேசமாய்என்றன்முன்றாய்-இருந்தநீ
நீங்கிறேனென்றுசொன்னாய்
வாசமறந்துஎன் னாசைதுறந்துநீ
பேசமுறையாமோ

இராகம் ஆனந்தபைரவி அடதாளம்.

எஸ் முறையல்லவானாலும் - என்தேசம்
முடுகியேபோனாலும்
நிறையுமிப்பூமியி லுறையுமட்டுமும்மை
மறவேனறிவீரே

பிரபு அறிவீரெனவோது -நேசாமன்னன்
அழைத்தவகையேது
பிறிவாகநானொன்றுங் குறையாதறிந்திட
முறையாகச்சொல்வாயே

எஸ் சொல்வேன்சேனாதிபதியாய்-- இராசன்கீழ்ச்
சுகித்திருந்தேன்சதியாய்ச்
செல்வமெல் லாஞ்சிதைந் தல்லலுற்றாருக்குஞ்
சொல்லாமலிங்குவந்தேன்

பிரபு வந்தேனென்றீர்நிரையே -அந்நாளிதை
வழுத்தாததென்துரையே
முந்தநானறிந்திடிற் சந்தோசமாயுமைச்
சிந்தையாய்க்காப்பேனே

எஸ் காத்தருளவில்லையோ- இராசசேவை
காசினிமேல்நிலையோ
பார்த்திபன்தூதர்க ளாத்திரமாய்வந்தார்
பூர்த்தியாய்ப்போய்வாறேன்

*எஸ்- வசனம்- என்னைப்பட்சமாக இற்றைவரைக்கும் நடத்தவில்லையா நீரே னிவ்வண்ணந் துதிக்கவேண்டியது. .இராசவுத்தியோகம் நிலையுள்ளதல்லவே. மனமுவந்து நான் போய்வர உத்தரவுதரவேண்டும் எசமானே*

பிரபு விருத்தம்

என்னிடமணுகிநீரு மேழைபோலிருந்தீரையா
முன்னிதையறிந்தேனானால் முதன்மையாய்வைத்துக்காப்பேன்
பின்னிதமாகநான்செய் பிழையெல்லாம்பொறுத்துக்கொண்டு
மன்னவனிடம்போய்வாரும் வானவனருள்செய்வாரே.

*வசனம்- கீர்த்திசெறிந்த தளபதியே ,அடியேன் தெரியாமற் செய்த குற்றத்தை மன்னித்துக்கொண்டு போய்வாருமன்பனே.*

*எஸ். வசனம்- அப்படியே போய்வருகிறேன் எசமானே.*

எஸ்தாக்கி விருத்தம்.

சீலமாமனையாளெங்கே சேர்ந்தாளோதிகைத்திட்டாளோ
பாலகருடனேயென்னைப் பரதவிப்புடனேதேடி

ஓலமிட்டிரங்குவாளோ வுற்றவிக்கவலையோடு
கோலமாமரசன்முன்பு குறுகிடலாமோசாமி.

தரு.

இராகம் கன்னடபியாகு. தாளம் மிசுரம்.

சோகமிகுந்தென் பாவைதவிக்கத் துய்யபாலரும்- மிகச்
சோர்ந்துமாய்ந்திட வேந்தனிடத்தில்
ஓர்ந்துசெல்வேனோ சதியைத் தேர்ந்துசொல்வேனோ

ஆபத்துவேளை பாலகர்பட்ட அவதிகொஞ்சமோ -அதை
அன்றுமின்று மென்றும்நினைத்து
அழுதிடுவேனோ ஆதியைத் தொழுதிடுவேனோ

கண்மணிநிகர்பெண்ணரியாளங்கே கலங்கிவாடுவளோ-என்றன்
காளைகளையெந் நாளுமெண்ணியே
கருகிவாடுவளோ மன முருகித்தேடுவளோ

எண்ணடங்காத சோகமாயுள மேங்கிநிற்பாளோ-உயர்
ஏகனருளால் என்னைக்காணில்
ஏதுசாற்றுவேன் எப்படி இதயமாற்றுவேன்

*வசனம் -அற்புத தற்பர உச்சித நிச்சய சச்சிதானந்த தயாபரகடவுளே இத்துயரோடே அடியேன் இராசசமுகஞ் செல்லலாமோ சுவாமி.*

எஸ்தாக்கி விருத்தம்.

முரணர்கள்வெருவிக்கூச முடிநரேந்திரர்கள் போற்ற
அரணுறுவீரர்சூட அமைச்சர்கள்ஒருபால்நீட
இரணபேரிகைமுழங்க எழிலரசியற்றுங்கோவே
சரணமேசரணம் நின்பொற் றாளிணைசரணந்தானே.

*வசனம்-பூச்சக்கிரவாளம்முழுதும் புகழ்பரப்பி அரசுசெய்யும் புரவலனே, உன் பாதாரவிந்தம் சரணமே சரணம் மகாராசனே.*

இராசன் விருத்தம்

சரணமென்றோதிநிற்குந் தளபதியேநீவாராய்
தரணியாளெனக்கோதாமற் றரித்திரனாகச்சென்றாய்
அருணன்போலொளிகொடுக்கு மருமுகங்கருகலாமோ
பொருனனேயெங்கேசென்றாய் பொறுமையாயுரைசெய்வாயே

*வசனம்- -எனக்கோர் மொழிசொல்லாமற் பரதேசஞ்சென்றாயோ, செந்தாமரை மலர்போன்றவுன் திருவதனம் இந்தவிதமாய்க்கருகலானதோ, நீ சென்றவரலாறும் உனக்குச்சம்பவித்த செய்திகளும் எனக்குச்சொல்வாய் தளபதியே.*

தரு.

இராகம் லாவணி தாளம் ஆதி

எஸ் சுந்தரமணிமுடி விந்தையாய்ச்சூடிய
துரைகள்சிகாமணியே
வந்ததுயர்தன்னை எந்தவிதஞ்சொல்வேன்
சிந்தைகலங்குதையா

இரா மந்தரம்போலமி குந்தபுயத்தானே
நொந்துவருந்தாதே
உன்றனுக்குறுதுயர் வந்தவகையையாதி
அந்தமோடறைவாயே

எஸ். உள்ளபொருளிழந்து நள்ளிரவினிற்பெண்டீர்
பிள்ளைகளுடன்நடந்தே
வள்ளலேகப்பலேறித் தள்ளிச்செல்கூலிக்காய்க்
குள்ளர்தேவியைமறித்தார்

இரா. தேவியைமறித்தபின் மேவியதுயரொடு
தாவிநீசெய்ததென்ன
ஆவிகலங்கியுன்றன் பூவைதனைநினைந்து
கூவியேயழுதாயோ

எஸ். தக்கபுதல்வரொடு துக்கித்தேகிடும்போது
மிக்கவோராற்றினிலே
பக்கங்களிலேநின்ற மக்களைமிருகங்கள்
சிக்கெனப்பிடித்ததையா

இரா. அடிக்குமேலடியாகத் திடுக்கிட்டெழுந்துமெத்த
நடுக்கமுற்றழுதாயோ
துடிக்குதேயங்கமெங்கு மடுத்திடுஞ்செய்தியைத்
திடத்துடன்சொல்வாயே

எஸ். எல்லையில்லாத்துயராய் மெல்லமெல்லநடந்தோர்
செல்வனிடத்தேகி
கொல்லையதனைக்காத்து நல்லபயிர்கள்நாட்டி
வல்லமையாய்வாழ்ந்தேன்

இராசன் விருத்தம்.

செவ்வையுடன் வாழ்ந்திருந்தாய் செப்பாமற்பிரதேசஞ்
சென்றலைந்தாய்
திவ்வியமைந்தரையிழந்தாய் தேவியையும்பிரிந்ததினாற்
றிடமுமற்றாய்
கவ்வையுடனேவலனாய்க் கஸ்தியுற்றுப்பணிபுரிந்து
கலக்கமுற்றாய்
இவ்வளவுதுயர்படவு மெம்பகவன்சித்தமதோ
என்செய்வேனே.

*வசனம்- சேனாதிபதியே! மிகுந்தசீர்சிறப்புடன் வாழ்ந்திருந்தாயே. இப்போது பெண்சாதி பிள்ளைகளையிழந்து துயரப்படத் தேவசித்தமாயிற்றே! இனியென்னசெய்யலாம், முன்போலஎனது சேனாபதியாய் இரும் அன்பனே.*

எஸ்தாக்கி விருத்தம்.

ஏழையாய்மனைவிதன்னை யீனர்கைக்கீந்தோனானேன்
காளைகள்தமைவிலங்கு கடித்துணக்கொடுத்தோனானேன்
நாளெலாங்கஸ்தியுற்றேன் நமக்கின்பதுன்பமில்லை
தாளிணைபணிந்தேனுன்றன் தயவுதந்தாளுமையா.

*வசனம்- மகாராசனே, நான் படாதபாடெல்லாம் பட்டனுபவித்துவிட்டேன். எனக்கினி இன்பமும்துன்பமுமேது ? ஆனாலும்தேவரீருடைய உத்தாரப்படிநடக்கக் காத்திருக்கிறேன். என்னைத் தயவாகநடத்தியருளும் சுவாமி.*

இராசன் விருத்தம்.

தூதரேபகரக்கேளீர் தொடர்ந்தமர்க்கேகவேண்டும்
ஆதலாலெனதுநாட்டி லடங்கியகுடியானோரில்
வாதுடன்வீட்டுக்கொவ்வோர் வாலிபர்தமைப்பிடித்துக்
காதலாய்க்கூட்டிவாருங் கட்டளையிதோதந்தேனே.

*வசனம்-எகித்துதேசத்துக்கு யுத்தஞ்செய்யப் போகவேண்டும். ஆதலால் எனது நாட்டெல்லைக்குட்பட்ட குடியானோரில் வீட்டுக்கொவ்வோர் வாலிபரைக் கட்டாயமாய்ப்பிடித்துவாருங்கள்! இதோ உத்தரவுப் பத்திரந்தந்தேன் வீரரே.*

*தூதுவர் வசனம் -அப்படியே செய்கிறோம் மகாராசனே.*

தூதுவர் தரு

இராகம் சாவேரி. அடதாளம்

துள்ளிக்குதித்தெங்குஞ் செல்வோம் -எங்கள்
துரைகட்டளையைச் சுறுக்காகச்சொல்வோம்

வள்ளல்நிருபத்தைக்காட்டி- நல்ல
வாலிபர்தம்மை வரும்படிகூட்டி
கைப்பிடியாகநாஞ்சென்று -மன்னன்
கட்டளைதன்னைச் செலுத்துதல்நன்று
ஒப்பிதமாய்க்கூட்டிவாடா-முன்னே
ஓடிவிடொவ்வொன்றுந் தேடியேபோடா.

தூதுவர் விருத்தம்

இடையனேவாராயெங்க ளிராசனிந்நிருபந்தந்து
படையதுபொருதிமாற்றார் பற்றறச்செய்வதற்காய்க்
குடிகளொவ்வொன்றினுக்கோர் குமாரரையழைக்கச்சொன்னார்
தடையறவுன்றன்பாலன் றன்னையும்விடுகுவாயே.

*வசனம்- யுத்தத்திற்குச் செல்வதற்காகக் குடிகளொவ்வொன்றிற்கு ஒவ்வோர் வாலிபரைப்பிடித்துவரும்படி இராசா கட்டளைதந்திருக்கிறர்.உனதுபுத்திரனையும் விடுவாய் இடையனே.*

இடையன் விருத்தம்.

மடுத்திடவந்திட்டீரோ வாலிபரேதெனக்கு
எடுத்துநான்வளர்த்தசேயை எப்படிவிடுவேனப்பா
அடுக்களைதனில்சீமாட்டி அறிந்திடிலேதுசொல்வாள்
திடுக்கிடுதெனதுநெஞ்சந் தேவனேயென்னசெய்வேன்.

*வசனம் -ஐயையோ இதென்ன அநியாயம்! வளர்த்தபிள்ளையை ரணகளத்திற்கு விடலாமா ? கடவுளே இதற்கென்னசெய்வேன் ,ஒன்றுமறியாமற் பதைக்கிறேன் சுவாமி*

**ஒப்பீஸ்து வரவு.**

விருத்தம்

காவலன் விடுத்ததூதர் கடிதினிலிடையன்வீட்டில்
மேவியேசிறுவன்றன்னை விடும்படிகேட்டபோது
ஆவலாய்வளர்த்திட்டாலு மரசனுக்கச்சமுற்றுக்
கோவலனழைக்கெஸ்தாக்கி குமாரனுங்குறுகினானே.

**ஆடற்றரு.**

இராகம் தோடி. தாளம் ஆதி.

வந்தானிதோ ஒப்பீஸ்து
மனமிகுமகிழ்வுடன். ...வந்.

வந்தானிதோஎஸ் தாக்கி
மைந்தன்சபையை நோக்கி
முந்தவாயனை நாடி
முயற்சியுடனே தேடி
இந்தவிதமாய்த் தோடி
ராகமதனைப் பாடி ...வந்

சோதிமுக மிலங்கத்
தூயவுடை துலங்க
நீதியுடன் துணிந்து
நெஞ்சிற்பகை தணிந்து
ஆதிதனைப் பணிந்து
ஆபரண மணிந்து ...வந்

ஒப்பீஸ்து கலித்துறை

வங்கார மான வனமிரு கத்துடை வாயினின்று
சிங்கார மாகப் பறித்தெடுத் தென்றனைச்சீருடனே
மங்காமல் நித்தம் மகிழ்ந்தமு தூட்டி வளர்த்தவரே
இங்கே யழைத்த கரும மதனை யியம்புகவே

*வசனம்-சரணம் சரணமையா, என்னை உமது சமுகத்துக்கழைத்த காரிய மின்னதென்று தெரியச்சொல்லவேண்டுமையா.*

இடையன் விருத்தம்

ஐயகோபாலாசீலா அங்கமுமுருகியென்றன்
கையதுநடுக்கமுற்றுக் கண்ணீரும்பெருகுதப்பா
வையகமாள்வோன்போர்க்கு வரும்படியழைக்கின்றாரே
துய்யனேயென்னசெய்வேன் சொல்வதேதறிகிலேனே.

*வசனம்-பாலகனே, போருக்குவரும்பிடி இராசாவின் கட்டளையாயிருக்கிறது. இந்த அநியாயத்துக்கு நானென்ன செய்யப்போகிறேன் பாலகா*

ஒப்பீஸ்து விருத்தம்

வையமேல்யுத்தமாடும் வகையைநானின்னதென்று
மெய்யனேயறியேனானால் வேந்தனுங்கோவிப்பானே
ஐயனேயுமக்குச்சித்த மாமெனிலர்சன்சேவை
செய்யவேயடியேன்மிக்க திடத்துடன்செல்லுவேனே..

*வசனம்-எனது ஆபத்தைக்காத்துரட்சித்த பிதாவே, இப்பெரிய பூமியின்கண்ணே சமர்செய்யும்வகை அடியேனுக்குத் தெரியவராது. மறுத்தால் அரசன்*

*சீற்றங்கொள்வான். வேந்தன்சீறி லாந்துணையேது ? ஆதலால் தேவரீர் சித்தமானால் அடியேன் போய்வர விடைதந்தனுப்புமையா.*

### இடையன் விருத்தம்

கண்மணிபோலவுன்னைக் காத்துநான்வளர்த்திட்டேனே
புண்மனமாகப்போர்க்குப் போவெனெனச்சொல்லுவேனோ
அண்ணலாக்கினைகள்செய்வா னதற்குநானென்னசெய்வேன்
விண்ணவனுதவியுண்டு வீரரோடேகுவாயே.

*வசனம்-பாலகா, உன்னைச் சமர்க்களத்துக்குவிட எப்படி மனந்துணிவேன். இராசகட்டளையானதால் மறுக்கக்கூடாது, தேவனுன்னைக் காப்பாற்றுவார், போய்ச் சுகமேவாரும் மகனே.*

*தூதுவர் வசனம்-வாலிபனே தாமதியாதே, நேரம்போய்விட்டது; சீக்கிரம்புறப்படு.*

*ஒப்பீஸ்து வசனம்-அப்படியே வருகிறேன் வீரரே.*

### ஒப்பீஸ்து விருத்தம்

கோனுடைகட்டளைக்குக் குலவுபோர்வீரனாக
நானுமேசெல்கின்றேன் நரர்பவந்தீர்ப்பதற்காய்
ஆனிடையதனிற்றூய வன்னையின்வயிற்றினின்று
மானிடவுருவாய்வந்த வானவாவிரங்குவாயே.

### தரு

இராகம் சாவேரி தாளம் ஆதி

மானிடகோலா மரிதருபாலா
வரப்பிரசாதந்தந் தருள்சீலா

ஊனுண்டுவாழு மோநாயால்மீளும்
உன்னதாவுன்கிருபை தந்தாளும்

தந்தையைத்துறந்தேன் தாயரைமறந்தேன்
சங்கடமடையவோ நான்பிறந்தேன்

சுந்தரநாதா தூய்மைசேர்போதா
துணைப்பதம்பாவிக்குத் தாநீதா

படையறியேனே பகர்சிறியேனே
பாரினில்நானேதுங் குறியேனே

தடையறநேராய்ச் சாமியேநீவாராய்
தமியனைக்கண்நோக்கி நீபாராய்.

தூதுவர் விருத்தம்

பாராளுமரசன்றானும் படையெடுத்திடநினைந்து
ஊரானதெங்குந்தேடி ஒவ்வொருகுடியிலுள்ள
சீரார்வாலிபரையெல்லாந் தெரிந்துவந்திடவே சொன்னார்
ஏராளாநீயுன்சேயை இச்சணம்விடுத்திடாயே

வசனம்-ஆனாற்கேளும்பிள்ளாய் காராளகுலதிலகனே! நமது ராசன் யுத்தத்திற்கனுப்பும்படி குடிக்கொவ்வோர் வாலிபரைக் கூட்டிவாச்சொன்னார். உம்மிடமிருக்குங் குமாரனையு மெம்முட னனுப்பும்பிள்ளாய் ஏராளனே.

வேளாளன் விருத்தம்

சொன்னசொற்கேட்டபோது சுடவைத்தஇரும்புக்கோலைக்
கன்னத்துட்செலுத்தினாற்போல் கடுத்துளம்பதைக்குதையோ
என்னகாரணமோவீது ராசருக்கேற்குந்தானோ
பொன்னொளிர்சேயைவிட்டுப் பூமியிலிருக்கலாமோ.

வசனம்-ஐயோ தூதரே, இதென்ன அ நிய ாயமான கட்டளை. புத்திவித்தார சவுந்தரரூபமுள்ள குமாரனை யுத்தத்துக்கனுப்பி நானென்னசெய்வேன் தெய்வமே!

அகப்பீஸ்துவரவு
விருத்தம்

நேராளனானவேந்தன் நிருபித்தவுரையைக்கேட்டு
ஏராளனழைத்ததாலே எஸ்தாக்கிகுமாரனான
பேராளனாகமேன்மை பெருகிடுமகப்பீஸ்தென்னுஞ்
சீராளன்சமுகநாடிச் சிறப்புடன்வருகின்றானே.

ஆடற்றரு

இராகம் மத்தியமாவதி. தாளம் ஆதி.

சுந்தரமா யகப்பீஸ்து
தோன்றல்வந்தா னிதோ

மந்தரநேர் புயத்தான் வடிவந்தங்க மயத்தான்
சிந்துரம்போல் வயத்தான் திறலுற்றிடு செயத்தான் ...சுந்

அவனியுளோர் மதிக்க அறிஞர்மிகத் துதிக்க
கவனமது மதிக்கக் கநராளன்முன் னுதிக்க ...சுந்

அகப்பீஸ்து விருத்தம்

மிண்டுடனெனைப்பிடித்த விலங்கதுகலங்கிமாளத்
தண்டினாலடித்தேயென்னைத் தப்பவைத்தீரேயுங்கள்

அண்டையிலிருந்தவேளை யடியனையழைத்ததேது
தெண்டமேதெண்டமையா தெரிந்திடவுரைசெய்வீரே.

*வசனம்-என்னைத் துட்டவிலங்கினிடத்தினின்று மீட்டுவளர்த்த ஐயனே, அடியேனை யழைத்த பணிவிடை யின்னதென்று திருவாய் மலர்ந்தருள வேண்டுமையா.*

## வேளாளனும் அகப்பீஸ்துவுந் தரு

இராகம் சுருட்டிமல்லாரி அடதாளசாப்பு.

வே. என்னசெய்வேனென்றன் சின்னக்குமாரனே
ராசனுனையழைத்தா னினியவுதாரனே

அக. மன்னனழைத்திட்ட வகைதனையேதென்று
வாக்காலுரையுமென்னை வளர்த்தவரேயின்று

வே. குடிக்கோர்குமாரரைப் படைக்கேயழைக்கின்றார்
குமாரனேயுன்னையுங் கூட்டியனுப்பென்றார்

அக. பிடிக்கவந்தபருந்து பேசாமற்போகுமோ
பெருமானின் கட்டளை பிசகிடலாகுமோ

வே. பிசகலாகாதென்று பேசியபாலனே
பிரிந்திருப்பேனோடா பரிந்திடுசீலனே

அக. நிசமாகநிர்மலன் நீண்டகிருபையுண்டு
நீரென்னையனுப்பிடும் நிலைத்தமனங்கொண்டு

*வசனம்-ஐயா கோவின்மேற்பட்டகுடிகளில்லை நீரென்னையனுப்பிவிடும். தேவஒத்தாசையினாற் சுகமேபோய்வருகிறேன் தாதாவே.*

*தாதுவர்வசனம்-ஆகா! நன்றாயிருக்கிறது, பின்புகட்டியழுங்கள். இப்போ திராசகட்டளைக்குச் சீக்கிரம் புறப்படும் பிள்ளாய்.*

### வேளாளன் விருத்தம்.

துடிக்குதேயென்றனாகந் தொடர்ந்தெலியழுதிட்டாலும்
பிடிக்கவந்திட்டபூனை பேசாமற்போவதுண்டோ
கடித்திடும்விலங்கால்மீண்டு கருத்துடன்வளர்த்தேனப்பா
தடுத்திடமுடியாதேகித் தயவுடன்மீளுவாயே.

*வசனம் -நானென்னபேசியும் பயனில்லை. தயாபரனை நினைந்து கொண்டு போய்வாரும் மகனே.*

## அகப்பீஸ்துவும் தூதுவரும் ஒப்பீஸ்துவுந் தரு.

இராகம் ஆனந்தபைரவி அடதாளம்

அக. என்னவகைசெய்வோம்நீரும் எமதுநிலையைப்பாரும்
மன்னவன் நீதிதேரும் வருமெம்மிலன்புகூரும்

தூது. மன்னவனுத்தாரமீது மறுத்துப்பேசலாகாது
பின்னிதமொன்றுமில்லாது பேணிவருவாயிப்போது

ஒப். பேணியெங்கள்முன்னாய்நின்றேபேசியதூதரேசென்றே
வீணமர்செய்வதெங்கென்றே விளக்குவீரறியவின்றே

தூது. வென்றிமன்னன்சொற்போலிங்கே மேவிநாம்போர்
செய்வதெங்கே
என்றறியோம்நாமுமங்கே ஏகுவோம்நமக்கும்பங்கே

அக. பங்குடையவண்ணமாரே பாரினிற்பகைவர்நேரே
செங்குருதியோடப்போரே செய்யும்வகைசொல்லுவீரே

தூது. சொல்லரிதுசோர்ந்துவாடுந் துங்கரேசமரில்நீடும்
தொல்லையைப்போய்ப்பார்க்கநாடும் சூழ்ச்சமெல்லாங்
கைகூடும்

### தூதுவர் விருத்தம்.

தன்னிணையில்லாவேந்தர் தாளிணையிறஞ்சிப்போற்ற
உன்னருஞ்செங்கோலேந்தி உலகமோர்குடைக்கீழாளும்
மன்னனேயூரிலுள்ள வாலிபர்தம்மைக்கூட்டி
நின்மனப்பிரியம்போல நேர்மையாய்வந்தோமையா.

*வசனம் - பகைவர்க் கிடியேறுபோன்ற மகாராசனே, உமதுசித்தப்படியே குடிக்கொவ்வோர் வாலிபரைக் கூட்டிவந்திருக்கின்றோமையா*

### இராசன் விருத்தம்.

மிக்கமர்பொருதவல்ல வீரனேபகரக்கேளாய்
தக்கெசித்தரசனானோன் றருதிறையனுப்பவில்லை
துக்கத்தையுள்ளடக்கித் தொடர்ந்தவிச்சேனையோடே
சிக்கெனநடந்துசென்று திறைதனைவாங்கிவாராய்.

*வசனம்-பிலாசிதுவே! எகித்தரசன் மகத்துவமிகுத்து நமக்குத் திறையனுப்பாமலிருக்கிறான். நீ இந்தச் சேனைகளோடே நடந்து அவன் கர்வத்தையொடுக்கித் திறைவாங்கிவரவேண்டுஞ் சேனாபதியே.*

*எஸ்தாக்கி வசனம்-தேவரீர் திருவாக்குக் கெதிர்வாக்கில்லை. அடியேன் உமது சித்தப்படியே செய்கிறேன் ராசனே.*

## பொது விருத்தம்.

சீர்க்கோலமுடையநேசத் தேவிபாலகரையெண்ணிக்
கார்க்கோலமழைபோற்கண்ணீர் கசிந்தழுதெழுந்தெஸ்தாக்கி
தார்க்கோலமாலைபூண்டு தானைகளருகுசூழப்
போர்க்கோலமெடுத்துக்கொண்டு பொருனனும்புறப்பட்டானே

*வசனம் - இந்தப்பிரகாரமாக அரசனுத்தரவினால் தேவி மைந்தரின் கவலையையுள்ளடக்கி எஸ்தாக்கி போருக்குப் போகிறவிதங்காண்க.*

## எஸ்தாக்கி விருத்தம்.

கத்துகடல் சுற்றுமுல கத்தையாளுங்
காவலர்க ளொருங்குறினுங் களத்திற்சென்னி
தத்திவிழ எத்துகத மெறிகோலீட்டி
தாவுகதை குந்தமழு கரத்திற்றாங்கிச்
சத்தமு லைத்தழுவி முழவதார்ப்பச்
சடசடென வெடியதிரக் கொடிகளாட
மத்தகரி யொத்தவய வீரரேநீர்
வருகுவீ ரெகித்துநகர் மருவுவோமே.

## எஸ்தாக்கி தரு.

இராகம் இங்கிலீஷ். தாளம் ஆதி,

விரைவாய் வருவீர் - அதி
வீரர்களே ரண சூரர்களே
வருவீர் பொருவீர் - உறு
மண்டர்கள் மண்டை யுருண்டிடவே

உடைவாள் வடிவே - லுடை
யுக்கிர்ம வக்கிர்ம வீரர்களே
கடிதா யடுபோர் - மிகு
கண்டித மொடுபொர வண்டிடுவீர்

திடமார் இடிபோல் - வெடி
திடுதி டெனச்சுடு மடையலர்மேல்
படுவார்கெடுவார் - அவர்
பட்டுயிர் விட்டிட வெட்டிடுவீர்

### வேறு தரு.

இராகம் கமாசு தாளம் ஆதி

வாருமெம்மோடுறுவீரர்களே - மிகு
மனமதுவலிவுடன் ...வாரு

வாருமிதோ படர்ந்து
சேரும்பதி தொடர்ந்து
சாரும்வழி கடந்து
ஓர்மமொடு நடந்து .....வாரு

பீரங்கிகள் நடுவீர்
பேணிமருந் திடுவீர்
வீரசூரத் தொடுநீர்
வேகமாகச் சுடுவீர் .....வாரு

ஆயுதங்களைத் தீட்டும்
ஆரம்பமிகக் காட்டும்
தீயவொன்னாரை வாட்டுந்
தியங்கவவரை யோட்டும் .....வாரு

ஈதோமுன்னாக நாடு
மிடத்திற்கூடாரம் போடும்
மோதுமொன்னாரைத் தேடும்
முயன்றவர்தமைச் சாடும் .....வாரு

## இஸ்தானாபதி வரவு.

### விருத்தம்.

விஸ்தார வீரரோடு பரவைதாண்டி
விறல்பொருந னெகித்துறவவ் வேந்தன்கேட்டு
மஸ்தானார் போலமன மயக்கமுற்று
மந்திரரோ டுசாவிவிலை மதிக்கெட்டாத
வஸ்தான பலபலாத் தினங்களோடு
வரிசையுறு திறையனைத்தும் வகையாயீந்து
எஸ்தாக்கிக் களித்திடுவா யென்னவோத
விஸ்தானா பதியேக வெழுந்திட்டானே.

### இஸ்தானாபதி ஆடற்றரு.

இராகம் அடாணா தாளம் சாப்பு.

இஸ்தானா பதியும்வந்தானே - நல்ல
ஏந்தல்விடுத்திடச் சாந்தகுணத்துடன் ...இஸ்

பகைவர்முன் செல்லவஞ்சியே - அதி
பத்தியாய்ப்பாத்தியாச் சித்தமோடோதியே ...இஸ்

முகமது பாதம்போற்றியே - மிகு
முக்கியமக்க மகத்துவஞ்சாற்றியே ...இஸ்

### இஸ்தானாபதி விருத்தம்.

இகபரமிரண்டுமியற்றியவீசா இலாஇல்லாஇல்லல்லாகாகும்
முகமதுறைசூலுல்லாகியதனால் முயன்றவர்தமைநிதம்பணிந்து
அகமகிழ்ந்தழகாரில்முக்கள்புரியு மாலீங்களோடுநாந்தழைக்க
றகுமத்துச்செய்து சலாமத்தாக்கிடுவாய் இமானல்லாகுத்தஆலாவே.

### தரு.

இராகம் லாலி தாளம் சாப்பு.

அதிநபிமுக மதுசல்லாகு அலைகிவசலா அருள்வாய்
மதியுறுமுலமாக்களிடத்தில் வகுத்தில்முகளைக்கல்லா
வண்டரிடத்திற்சென்றுமீண்டு மகிழ்த்தறஜாப்புரிவாய்
காபர்கள்நம்மிற்கோபித்தேயென் காயம்மவுத்தாக்காமல்
ஆபத்தைக்காத்தருளவேணும் அல்லாகூவத்தஆலா
தப்பிவந்தால்மக்கம்மதீனா தகுபைத்துல்முகத்திசாந்
தலங்களிற்சென்றுநோன்புபிடித்து தறசாக்களைப்பெறுவேன்
தவிக்கவதைக்கிறஜவாப்புத்தந்து சலாமத்தாக்கிநோக்கி
தாறுதல்பணாதன்னைக்கடத்தித் தாறுதல்பகாச்சேர்த்திடுவாய்:

*வசனம் - நம்மஅல்லாகூவத்தஆலாவே, சத்துராதிகள் கையாற் தப்பிவரும்படி தயைசெய்தகுளும் ஆண்டவனே ஆமீன்.*

### இஸ்தானாபதி விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அடலதிபதியேபோற்றி
மெய்யனேபோற்றிபோற்றி வீரனேபோற்றிபோற்றி
உய்யவேஎகித்திராசன் உகப்புடன் திறையுந்தந்து
துய்யனேதுதியோடெம்மைத் தூதாகவனுப்பினானே.

*வசனம் - மகா விசயகெம்பீர வீரசூர தளபதியே! சரணம் சரணம். எகிப்துராசன் கப்பந்தந்து என்னை ஸ்தானாபதியாய் அனுப்பிவைத்தார் ஐயா.*

எஸ்தாக்கி விருத்தம்.

திறைதந்துவணங்கிநிற்குஞ் சீர்த்திசேர்துரையேகேளாய்
முறைகொண்டேயிதனைமன்னன் முன்னமேயனுப்பிவைத்தால்
குறையொன்றுமிலையானாலுங்குற்றத்தைப்பொறுத்துக்கொண்டேன்
நிறைகொண்டேயினிமேல்வேந்தை நேர்மையாய்நடக்கச்சொல்வாய்.

*வசனம் - இத்திறையை முன்னேயனுப்பாமல்விட்டதென்ன ? ஆயினு மக்குற்றத்தை மன்னித்துக்கொண்டேன். இனிமேல் நேர்மையாய் நடக்கும்படி சொல்வாய் ஸ்தானாபதியே.*

பொதுவிருத்தம்.

கப்பமதீந்தபின் கருதெஸ்தாக்கியும்
தப்பறுபலபல தானைவீரரும்
ஒப்பறுமாதியை உகந்துபோற்றியே
செப்பரோமாபுரி செலத்திரும்பினார்.

*வசனம் - இந்தப்பிரகாரமாக எகிப்திராசன் பயந்து திறைகொடுத்தபின்பு ரோமாபுரிக்குத் திரும்பிச்செல்கிறவிதங்காண்க.*

## எஸ்தாக்கி தரு

இராகம் கன்னடபியாகு. தாளம் மிகரம்.

சோதிநாதா வேதபோதா தூயநின்னடிபோற்றியே

மாதுதவிட மேதினிதன்னில் வந்தசுந்தரப்பாலனே
காதலுடனிப் போதிலெங்களைக் காத்திரட்சித்திட்டசீலனே சோதி

தளத்துடன்ரண களத்திலேசிரஞ் சாய்ந்திடாதருள்கூர்ந்தவா
பழத்தினாலிங்கே விழைத்ததீமையையொழிக்கவந்தெமைச்சார்ந்தவா. சோதி

வன்மமுடைய மன்னவன்திறை வழங்கநல்லருள்செய்தவா
இந்நிலத்துறைமன்னுயிர்கட்காய் இரத்தமாரியைப்பெய்தவா .. சோதி

அந்தரித்தவர் சிந்தைமகிழ வந்துதவிடுங்காரணா
எந்தநாளினு மிந்தவண்ணமாய் ரட்சைசெய்திடும்பூரணா... சோதி

எஸ்தாக்கி விருத்தம்.

எங்களைப்புரிந்துகாக்கு மேகனாரருளினாலே
மங்கிடாவேந்தன்கப்பம் மகிழ்வுறவாங்கிவந்தோம்
செங்கதிர்மறைந்ததாலே திருந்துகூடாரமிட்டுத்
தங்கிநாமிருந்துரோமை தனக்கெழுந்தருளுவோமே.

*வசனம் - பொழுது அஸ்தமனவேளையாகிறது. ஆதலால் இவ்விடத்திலே கூடாரமிட்டு இளைப்பாறியிருந்து நாளைக்கு ரோமாபுரிக்குச்செல்வோம் வீரரே.*

*படைவீரர்வசனம் - அப்படியாகட்டும் ஐயா.*

### பொதுவிருத்தம்

உதிரமுறவறியுமெனமுன்னோரந்நா
ளோதியமூதுரைதவறாதுகந்தெஸ்தாக்கி
விதுரமுடனிழந்தமைந்தர்படையிற்சேர்ந்த
விதமறியாதிருந்துமவர்விசித்திரங்கண்டு
மதுரமொழிபேசியவர்களைத்தம்மோடு
மருவவருகிருத்தியன்னமகிழ்வாயுண்டு
சதுரதளத்தோடிருக்கும்போதுமைந்தர்
தாய்வசிக்கும்மனையதனைச்சார்ந்திட்டாரே.

*வசனம் - எஸ்தாக்கியானவர் படையிற்சேர்ந்த புத்திரரை ஆரென்றறியாதிருப்பினும் உதிரமுறவறியுமென்றாற்போல அவர்களின் முகரூபத்தைக்கண்டு பட்சமாகி அவ்விருவரையுமழைத்து அருகிலிருத்திப் போசனமருந்திவருவார். அப்படியிருக்கும்போது அவ்விருவரும் ஒருவரையொருவ ரறியாதிருந்தும் உள்ளன்புற்று உறவாடித் தாயிருக்கும் விதவைவீட்டிடமாகச் சென்றவிதங் காண்க.*

### அகப்பீஸ்து விருத்தம்.

உற்றமர்க்களத்துக்கேகி யுவப்புடனிந்நாள்மட்டும்
சுற்றமித்திரரைப்போலத் தோழமைகூடிவாழ்ந்தோம்
கற்சற்குணத்தோயங்கே காணுமம்மனையிற்சென்று
சற்றதிலிருந்துபேசித் தயவொடுமீளுவோமே.

*வசனம் - தோழனே நாங்கள் இற்றைவரைக்கும் ஓர் சகோதரர்போல நேசம்மறவாமலிருந்தோம். இன்றைக்கு அதோதெரிகிற மனையிற்போயிருந்து நேசபந்தனமாய்ச் சம்பாசித்து துயின்றுவருவோம் அன்பனே.*

### ஒப்பீஸ்து விருத்தம்

பொங்கியமலர்க்காவென்னப் புகலருந்தருக்கள்சூழச்
சங்கைசேர்மனையில்வைகுந் தார்குழலாளேகேளாய்
இங்கேநாமுமதுவீட்டி லிரவினிற்றுயின்றுசெல்ல
எங்களுக்குமதுத்தார மின்பமோடீந்திடாயே.

*வசனம் - நாங்கள் உமதுமனையி லின்றிராத்திரிசிறிதுகாலந் துயின்று செல்வதற்கு விடைதரவேண்டுமம்மா.*

### விதவை விருத்தம்.

நன்னயவார்த்தைபேசி நற்குணமுடையோர்போலென்
தன்மனைநாடிவந்து தங்கியேசெல்வதற்கு

உன்னிதமாகவிப்போ துத்தாரந்தரவேசொன்னீர்
துன்னுமச்சாலைதன்னில் துயின்றெழுந்தேகுவீரே.

*வசனம் - பிள்ளைகாள் உங்களிஷ்டப்படியே அந்தச் சாலையினிடமாய்ச் சென்றுறங்கி விடிந்தெழுந்துசெல்லும் வீரரே.*

அகப்பீஸ்து விருத்தம்.

இந்தநாளளவாய்நாங்க ளிருவருமிசைந்துகூடி
வந்தோமனாலுமெங்கள் வழமையையறியவில்லை
முந்தவுன்சரிதையூர்பேர் மொழிந்திடிலறிந்தபின்பு
சந்தோசமுற்றென்னூர்பேர் சவிஸ்தாரமாய்ச்சொல்வேனே.

*வசனம் - தோழனே நாங்களிற்றைவரைக்கும் சிநேகம்பாராட்டி நடந்துவந்தாலும் ஒருவரையொருவ ரின்னாரென் றறியவில்லை. ஆதலால் முன்னே உமது பேருராதியவற்றைத் தெரியச்சொன்னால் பின்பு எனது பேருராதிய விசேசங்களைத் தெரியச்சொல்லுவேன் அறிவாயாக.*

ஒப்பீஸ்து தரு.

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி.

என்றன்வழமைசொல்ல
இன்பமாய்க்கேட்டருளும் தோழா - நானும்
ராசகுலத்தில்ரோமைத்
தேசந்தனிலுதித்தேன் தோழா

தந்தையரசனது
தளபதியாயிருந்தார் தோழா - என்
தன்னோடுடன்பிறந்தான்
இன்னுமொருவனுண்டு தோழா

*வசனம் - நான்பெரிய ராசகுலத்திற்பிறந்தேன் .என்பிதா ராசாவின் சேனாபதியாயிருந்தார் .எனக்கு இன்னுமோர் சகோதரனுண்டு நண்பனே.*

தந்தைதாயோடுநாங்கள்
சுந்தரமாகவாழ்ந்தோம் தோழா - எங்கள்
தக்கசெல்வங்களெல்லாந்
தரையிலிழந்துநொந்தோம் தோழா

சொந்தவூர்விட்டுவேறூர்க்
கந்தரித்தேநடந்தோம் தோழா - பின்பு
தோணியில்நால்வர்களும்
பேணியேயேறிவந்தோம் தோழா

*வசனம் - நாங்கள் பிதாமாதாவுடன் சீர்சிறப்பாய் வாழ்ந்திருக்கும் போது வறுமைவசத்தராய்த் தேசாந்திரிகளாய்ப் புறப்பட்டு ஓர் கப்பலிலேறிவந்தோம் தோழனே.*

மாலுமிகூலிகேட்க
வகையின்றியேதிகைத்தோம் தோழா - அங்கே
மாதாவைமறித்தெமைத்
தீதாகத்தள்ளிவிட்டான் தோழா
சோலியாயெமைத்தந்தை
துயருடன்கொடுசென்றார் தோழா - அங்கே
தோன்றியவாற்றைக்கண்டு
தாண்டப்பயந்திருந்தார் தோழா

*வசனம் - கரைசேர்ந்தவுடன் மாலுமி கூலியைக்கேட்டான் கொடுக்க வழியில்லாததாற் தாயை மறியற்படுத்தித் தகப்பனோ டெங்களைப் போகவிட்டான். நாங்கள் வரும்வழியிலோர் ஆறுகுறுக்கிட்டதால் தந்தை மிக்க துயரப்பட்டார் தோழனே.*

அண்ணனைவிட்டேயென்னை
அக்கரைகொடுசென்றார் தோழா - என்னை
அவ்விடம்விட்டுத்தந்தை
ஆற்றின்நடுவேவந்தார் தோழா
நண்ணியோனாய்வந்தென்னை
நாடிப்பிடித்தோடிற்றே தோழா - அப்போ
நாட்டிலிடையர்கண்டு
கூட்டமாயெனைமீட்டார் தோழா

*வசனம் - எனது தமையனாரை ஓர்கரையில்விட்டு என்னைத் தூக்கிக்கொண்டுபோய் மறுகரையில்விட்டு அண்ணனைத்தேடிநடுக்கடலிற் செல்லும்போது என்னை ஒனாய்வந்து பிடித்துக்கொண்டோடிற்று. அப்போது இடையர்கண்டு ஒனாயைக்கொன்று என்னை மீட்டிரட்சித்தார்கள் தோழனே.*

என்றன்பெற்றாரோடண்ண
ரெப்படியலைந்தாரோ தோழா - இப்போ
திடையரிடத்திருந்தே
இங்குனைப்போலவந்தேன் தோழா
தந்தையெஸ்தாக்கிதாய்பேர்
தக்கதேயொப்பீஸ்தாகும் தோழா - என்
தன்பேரொப்பீஸ்தென்றன்
தமையன்பேரகப்பீஸ்தாம் தோழா

*வசனம் - என் தந்தை தாய் சகோதரரெங்கேயென் றிற்றைவரைக்குமறியேன் .நான் இடையசேரியிலிருந்து உன்னைப்போலவே வீரருடன் சேர்க்கப்பட்டேன். எனது தகப்பன்பெயர் எஸ்தாக்கி, தாய்பெயர் தேயொப்பீஸ்து, தமையன் பெயர் அகப்பீஸ்து, என்பெயர் ஒப்பீஸ்து 'அறிவாய்தோழனே.*

*அகப்பீஸ்து வசனம் - தம்பி! தம்பி!!*

அகப்பீஸ்து விருத்தம்.

என்னுடன்பிறப்பேநான்றா னினியவுன்றுணைவன்தம்பி!
உன்னுடைமொழியைக்கேட்டு உள்ளமுருகுதையோ!
வன்மனக்கடுவாயோனாய் வாயினின்றெம்மைமிட்டுப்
பின்னுமோரிடத்திற்சேர்த்த பெருமானையிறைஞ்சுவோமே.

## ஒப்பீஸ்தும் அகப்பீஸ்துந் தரு.

இராகம் சாவேரி. தாளம் ஆதி.

ஒப். அன்பாலுருகுதுளம் இங்கே - அருமைசேரண்ணா
அரியநம் முடையப்பர் எங்கே

அக. உன்போலஅப்பரைக்கை விட்டேன் - எனதுடைதம்பி
உற்றகடுவாய்வசப் பட்டேன்.

ஒப். அந்தவிபத்தகன்ற தேது - அருமைசேரண்ணா
அன்பாயுரைத்திடுமிப் போது

அக. வந்தேயுழவன்பறித் தெடுத்தான் - எனதுடைதம்பி
வளர்த்துப்படைக்குவர விடுத்தான்

ஒப். தந்தைதாயைப்போயடுத் தாரோ - அருமைசேரண்ணா
தாங்காதுயிரைவிடுத் தாரோ

அக. சிந்தைநொந்தன்னையுஞ்சேர்ந்தாளோ - எனதுடைதம்பி
சிறைநீங்கியெங்கேனுஞ்சேர்ந்தாளோ.

இருவரும் தேவாரம்.

நீதியாயெங்கும்நிறைபரஞ்சுடரே நித்தியசத்தியசொரூபா
ஆதியேயுன்றனடியவர்தமக்கு னளவிலாக்கருணையைவிளக்குஞ்
சோதியேயின்றுதுணைவர்நாங்கூடச் சொல்லருந்தயைசெய்தாயிதுபோற்
கோதிலாத்தந்தை தாயாருமொருங்கு கூடிடவருள்புரிபரனே.

*வசனம் - சர்வதயாபர சர்வேஸ்பரா! இப்போது எங்களை ஒரிடத்திற் சேர்த்ததுபோல எமது தாய் தந்தையரையும் ஒருங்கு சேர்த்தருளும் சுவாமி.*

பொதுவிருத்தம்.

வீரிவறுவிதவைவீட்டில் மேவினோர்தங்கட்குற்ற
சரிதைகளுரைத்துத்தம்பி தமையனென்றறிந்துகொண்டு
பரிவுடனெழுந்துசென்றார் பாலகர்பேசக்கேட்ட
அரியதாயிவராரென்றே ஐயமுற்றுருகினாளே,

வசனம் - இந்தப்பிரகாரமாக ஒருவரை யொருவர் தம்பி தமையனென் றறிந்துகொண்டு கூடாரத்துக்கேகினார்கள். இவர்கள் முன்பேசிய சிலமொழிகள் அவ்வீட்டிலிருந்த தாயின்செவியி லேறினவுடனே தனது மைந்தர்தானோவென் றையங்கொண்டு பிரலாபிக்கிறவிதம் எப்படியோவென்றால்,

தேயொப்பீஸ்து விருத்தம்.

இருவருமோர் சகோதரரென் றிசைந்துசென்ற
இனியபடை வீரர்தம்மு ளியம்பும்போது
அருகில்நின்று சிலமொழிகள் பேசக்கேட்டு
அரியவென் புத்திரரோவென் றையமுற்றேன்
மருவியந்த வாலிபரை நீராரென்று
மாதுநான் மனந்துணிந்து கேட்கலாமோ
மிருகங்கள் மைந்தர்தம்மைப் பிடிக்கத்தந்தை
விடுவாரோ வகையொன்றும் விளங்கிலேனே.

தரு.

இராகம் சங்கராபரணம். தாளம் மிசுரம்.

எனதன்பர்களே நீங்கள் என்னைப்பிரிந்தீரோ எழிலின்பர்களே
மனதுமிளைத்தே மிகு மயக்கமாகினேன் வாடிக்களைத்தே

வசனம் - மாபாவிவயிற்றினிலே பிறந்தீரோ
மாதாவினாசைதனைத் துறந்தீரோ
பூபாலரேயெனையும் மறந்தீரோ
புட்குலத்தைப்போலெங்கே பறந்தீரோ

இனியபாலரே நீங்க ளெத்தேசஞ்சென்றீ ரெந்தன்சீலரே
தனியேவாடி ஏங்குந் தாய்முன்னாக வாரீரோதேடி

வசனம் - சஞ்சலத்தோடுமிக வேங்கித்
தரையிலென்றுந்துயர் மோங்கி
மிஞ்சுதேநானுமுமை நீங்கி
விட்டிருப்பேனோபின் வாங்கி

வீரருரையே கேட்டு விதனமானே னெனதுதுரையே
பாரிற்கலங்கி மிகப் பரித்பித்தீரோ மனமுமலங்கி

வசனம் - பற்றியேவயிற்றிலன லெரியுதே
பார்த்தவிழியாலருவி சொரியுதே
சிற்றியேயென்மனது திரியுதே
சோகமேலிட்டகங் கரியுதே

### தேயொப்பீஸ்து விருத்தம்

கிள்ளைமொழிச் சுந்தரியே யிந்நாள்மட்டும்
கிரகமதிற் பரிவுடனே கிளர்ந்திருந்தேன்
பிள்ளைபோல் நீயுமெனைப் பேணிக்காத்தாய்
பிரியமனம் வருகுதில்லைப் பேசக்கேளாய்
தெள்ளமுது போன்றமக ரோடுதந்தை
தேடியலைந் தேசொயலூர் சேர்ந்திட்டாரோ
உள்ளமதிற் றெரிகிலே னதனாலென்ற
னூர்போக வுத்தார முதவுவீரே

வசனம் - ஆனாற் கேளுமம்மா, எனது பிராணநாயகனும் பிள்ளைகளும் எங்கேயலைந்தாரோ, தஞ்சொயலூர் சேர்ந்தாரோ தெரியாது. ஆதலால் நானென் ஜெனனதேசம் போய்வர உத்தரவு தரவேண்டுமம்மா.

### விதவை விருத்தம்.

கன்னலிலினியசொல்லாய் கருத்துடன்கூடிவாழ்ந்த
என்னைநீவிட்டுச்செல்ல எப்படிமனந்துணிந்தாய்
உன்னையான்பிரிந்தாற்கண்ணி லுறக்கம்வாராதானாலும்
பின்னிதம்பேசலாமோ பிரியமாய்ச்சென்றுவாராய்.

வசனம் - கேளுமெனதுநேசியே, உன்னைப்பிரிந்து நான் சந்தோசமாயிருப்பேனோ ? ஆனாலுமக்கு நாயகன் பிள்ளைகளுடைய கவலைபெரிதாயிருப்பதால் நான் தடுத்தல் சரியல்ல. மனச்சந்தோசமாய்ப்போய்வாருமம்மா.

### பொதுவிருத்தம்.

விதவையிட முத்தாரம் பெற்றபின்பு
மெவ்வியலும் மிகுசோப முடனெழுந்து
கதமுலவு படைவீரர் ரோமைசெல்லக்
கருத்துடனங் கிருப்பதனைக் காதிற்கேட்டு
அதிவிதன மோடன்பர் தனைநினைந்து
அவருடனே ரோமைநக ரணுகுதற்குச்
சதியேதும் வாராமற் காக்கவென்று
தயாபரனை வேண்டியங்கே சார்ந்திட்டாளே

வசனம் - இந்தப்பிரகாரமாய் விதவையிட முத்தரவுபெற்றுக்கொண்டு ரோமாபுரிக்குச் செல்லும்போது,படைவீருடன்கூடித் தானும்போகக் கிருபைசெய்யவேண்டுமென்று தேவனைப்பிராத்தித்துச் செல்லும்விதங்காண்க.

## தேயொப்பீஸ்து தரு.

இராகம் உசேனி தாளம் மிசுரம்.

மைந்தரோடு மன்னர்சென்ற தெந்தவிடமறியேன்
அந்தோவரக் காணேனுயர் சந்தமரிபாலா
சிந்தைநொந்து கலங்கிமிக நைந்தேவருந்துகிறேன்
இந்தவேளை வந்துன்னருள் தந்தாளுவைசீலா
வரனேதிருக் கரனேயுயர் பரனேயென்னசெய்வேன்
வாராய்முகம் பாராயருள் தாராய்துயர்தீராய்
பரிவாய்ரோமை புரிபார்த்திபன் படையிங்குறைகிறதாம்
பாவியவ்வூர் தாவியங்கே மேவவருள்தேவே

தேயொப்பீஸ்து விருத்தம்.

இந்நிலத்திறைவர்போற்றும் ஏந்தலேயியம்பக்கேளாய்
மின்னிடுரோமைநாடு மேவிடவந்தீரென்று
பின்னிதமற்றறிந்து பேதைநானெழுந்துவந்தேன்
என்னையுங்கூட்டிச்சென்றா லேகனாருதவியுண்டே.

*வசனம் - பூமண்டலாதிபதிகள் துதிபுரியும் பொருனரேறே, என்னையும் ரோமைக் கூட்டிச்செல்லுவீராகில் தேவ கிருபாகடாட்சங் கிடைக்குந் தளபதியே.*

எஸ்தாக்கி விருத்தம்.

சிந்தையாய்க்கூட்டிச்சென்றாற் றேவனாலருளுண்டென்றாய்
எந்தவூரடிநீமானே யேற்றவுன்பெயர்தானென்ன
சுந்தரரோமைநாட்டிற் சுற்றத்தாராருமுண்டோ
அந்தமதாகவிப்போ தறிந்திடவுரைசெய்வாயே.

*வசனம் - ஆனாற் கேளுமம்மா, உன்னூரென்ன? பேரென்ன? ரோமாபுரிக்குச்செல்லுங் காரியமென்ன? அங்கேயுனதுறவினரிருக்கின்றார்களா? உன்சரித்திரமெல்லாம் விபரமாய்ச் சொல்லுவாயாக*

தேயொப்பீஸ்து விருத்தம்.

சீர்செறிரோமைமாநகரமெம்மூர் திறலுறுபொருனனென்கணவன்
திகழகப்பீஸ்து ஒப்பீஸ்துஎன்னுஞ் சிறுமகார்தம்மொடுவாழ்நாள்
வார்செறிசெல்வ மழிந்ததால்மிக்க வறிஞராய்நால்வருமெழுந்தோர்
வங்கத்திலேறி வந்தனங்கூலி வழங்கெனமாலுமிவருத்தி
ஏர்செறியென்னை மறித்தனன்கணவ னிரந்தேனுமீட்டிடவெண்ணி
இருபுதல்வர்களோ டேகியபின்ன ரீனர்களிரங்கியேவிடுத்தார்.

தார்செறிவிதவை வீட்டினையடைந்தேன் தகுமன்பனெங்கென
வறியேன் தலைவனெஸ்தாக்கி தேயொப்பீஸ்தென்பேர்
சங்கதியறிந்துதவுவையே.

*வசனம் - இதுதானென் சரித்திரமறிந் திரட்சிக்கவேண்டுமையா.*

எஸ்தாக்கி விருத்தம்

ஆசைப்பைங்கிளியேயென்ற னன்னமேயுன்றன்காந்தன்
நேசத்தோடிங்கேதானே நிற்கிறேன்நிற்கிறேன்நான்

பெண்

மோசத்தையடையாவண்ணம் முதல்வனேசேர்ந்திரேகன்
தாசரைக்கைவிடாரே சரணமேசரணமையா,

*பெண் வசனம் - ஓ என் பிராணநாயகா! இதுகாலவரையு மெங்கேயிருந்தீர்! இருந்தீர்!! இருந்தீரோ!!!*

*எஸ்.வசனம் - ஓ என் பிராணநாயகி! ஓரற்புதத்தைக் கண்டேன்! கண்டேன்!! கண்டேனே!!!*

பொதுவிருத்தம்.

நீடியவெயிலில்நின்றலைபவர்க்கோர் நிழல்வந்துசேர்ந்தவாறெனவுந்
தேடியமூலிகாலினிற்பட்ட தென்னவுமுன்னிதமாகி
வாடியவிருவர்முகங்களுஞ்செழிக்கவளமுறுமுளங்களுங்களிக்க
கூடியேயொருவரொருவரையறிந்து கூறொணாவன்புகொண்டனரே

*வசனம் - இந்தப்பிரகாரமாக இருவரும் ஒருவரையொருவரறிந்து சந்தோஷமுற்றவிதங்காண்க.*

எஸ்தாக்கி தரு.

இராகம் தறுவா. அடதாளசாப்பு.

என்றன திருக்கண்ணே இனிமைசெறிந்தபெண்ணே
யானேயுன்காதலனே.

உன்றனைமறக்கவு முற்றாசைதுறக்கவும்
உடையவன்சித்தமிதோ

இங்குனைச்சேர்க்கவும் என்முகம்பார்க்கவும்
ஏகன்கிருபைசெய்தாரே

மங்கையரேபொல்லா மாபாவிநானுன்னை
மறந்தின்றளவும்வாழ்ந்தேனே

சுந்தரமுகமெங்கே துலங்கிடுமகமெங்கே
துயரால்மனதுநோகுதே

வந்தவரவுகண்டு வருத்தமிகவேகொண்டு
வாடுகிறேன்மங்கையே

*வசனம் - என்கண்ணே, பெண்ணே, பொன்னே, மின்னே, உன்கோலமென்ன ? சீலமென்ன ? இக்கெடுதியடையவுமாயிற்றோ ? என் செய்வேன் தேவனே !*

தேயொப்பீஸ்து தரு.

இராகம் காபி தாளம் ஆதி

சரணமையாசாமி சரணமையா - உன்றன்
றாளிணைக்கேநித்ய சரணமையா
தருணமையாவிது தருணமையா - எங்கள்
தவிப்பினைத்தீர்த்திடுந் தருணமையா
என்னைமறந்தீரோ எழிலரசே - யெனக்
கேற்றமொழிசொல்லு மென்சிரசே
அந்நியராலேநீ ரலைந்தீரோ - சாமி
ஆறாத்துயரினால் மலைந்தீரோ
சீலமுறுமுகங் கருகினதோ - சாமி
தியங்கிநித்தமுமுள்ள முருகினதோ
பாலரைவிரைந்திங்கே சேருமையா - சாமி
பாவையென்துயர்தன்னைத் தீருமையா

விருத்தம்.

தரையோர்கள்புகழ்கெம்பீரா தத்துவமிகுத்ததீரர்
உரைபேசற்கருமொய்யாரா வுத்தண்டமிகுமுதாரா
நிரையாகவருகில்மைந்தர் நிற்பதைக்காண்கிலேனே
துரையேயென்பாலரெங்கே சுறுக்கினிலுரைசெய்வீரே.

தரு.

இராகம் நீலாம்புரி, அடதாளசாப்பு

துரையே! பாலகரெங்கே விரைவாய்ச்சொல்வீரே
அருமையாய்நான்பெற்ற அன்பரைக்காணேனே...துரை

*வசனம் - என்னாசைத்துரையே, என்னருமைப்பிள்ளைகளருகில் நிற்கக்காணேனே ? அவர்கள் எங்கேயென்றுசொல்லும் பிராணநாயகா*

பெண் தரு.

ஆசைக்கண்ணாளரே அரியமைந்தருக்கு
மோசமெதுவுமுண்டோ பேசிடுவீரே ...துரை

*எஸ்தாக்கிவசனம் - என்னசொல்லப்போகிறேன் பெண்ணே.*

*வசனம் - எனது பாலகருக்கு ஏதுந் தீமைசம்பவித்ததோ சொல்லும் பிராணநாயகா !*

*எஸ்தாக்கிவசனம் - தேவசித்தத்துக்கு எதிர்பேசலாமா ? எவ்விதமாய் சொல்லப்போகிறேன் பெண்ணே.*

பெண் தரு.

உற்றகுறையேதென்று ஓதிடலாகாதோ
பெற்றவயிறனலாய்ப் பற்றியெரியுதையோ ...துரை

*வசனம் - எனது வயிற்றிற் சோகாக்கினி பற்றியெரியுதே, தெய்வமே! தெய்வமே! தெய்வமே!!!*

எஸ்தாக்கி விருத்தம்.

நாவினாற்பாலர்செய்தி நன்றாகநவில்வதற்குத்
தேவியேகூடுதில்லைச் செகத்தினில்நாங்கள்மிக்க
பாவிகளானோமையோ பாலரைக்கடுவாயோனாய்
கூவியேபுலம்பக்கௌவிக் கொண்டோடிற்றேதுசெய்வோம்.

பெண் தரு.

இராகம் ஆனந்தபைரவி. தாளம் ஆதி

உம்மைநினைந்துருகி விம்மிக்கலங்கிமிக
ஓலமிடலாயிற்றே பாலரே
எம்மைமறந்தீர்களோ பாலரே
ஏங்கித்தவிக்கின்றேனே பாலரே
கட்டிக்கரும்பேயென்றன் பாலரே
கண்மணிபோலருமைப் பாலரே
விட்டுப்பிரிந்தீர்களோ பாலரே
விலங்குக்குணவானீரோ பாலரே

பொது விருத்தம்.

தையலாளிதனைக்கேட்டுத் தலையில்மண்வாரியிட்டாள்
கையினால்முகத்தறைந்தாள் கலையையுங்கிளித்தெறிந்தாள்
மெய்யினால்வேர்வைசிந்த விம்மிமண்விழுந்துருண்டாள்
செய்யபுத்திரசோகத்தாற் றியங்கினாள்மயங்கினாளே.

பெண் கந்தார்த்தத் தரு.

இராகம் மோகனம், தாளம் ஆதி,

உற்றாருமின்றி யுறவோருமின்றி யோனாயோடுலவுகடுவாய்
சற்றேனுமனது தாளாமல்வந்து சருவமனதுருகினீரோ
அற்றேனோவும்மை யநியாயமிருக மணுகியிரையாகயுணவே
பெற்றேனோமிக்க பிரலாபமொடு

பேதைநானென்னசெய்குவேன் எப்படியிந்தப்
பேருலகத்திலுய்குவேன்
பாதகிநானும்மைப் பத்தாவோடேன்விட்டேன்
ஏதுநான்செய்குவேன் என்மதியாற்கெட்டேன் ...பேதை

மறு கந்தார்த்தத் தரு.

சிற்றாறருகிற் சேர்மிருகங்கள்
சற்றாயினுமோர் தயவுற்றிலையோ
மற்றார்தனிலே மனவன்புற்றுப்
பற்றாய்வளர்த்தேன்

பாரினில்நானே - கடைகெட்ட
பாவியானேனே
வாரியணைத்து மடிமேலிருத்தியே
சீராய்முத்தமிடத் தேவனேயென்செய்வேன் ...பாரி

விருத்தம்.

மின்னியேமுழங்கிடாமல் வீழ்ந்துருவிடுவிண்ணேறு
என்னவிச்சதியாயிற்றே இடருடன்கடுவாயோனாய்
தின்னவேறுணவில்லாமற் சிறுவரைப்பிடித்தோடிற்றோ
என்னையாட்கொள்ளுநாதா இத்துயர்பொறுக்கிலேனே

தரு.

இராகம் ஆரபி. அடதாளம்.

என்னசெய்குவே னிந்தத்துயரை எப்படிப்பொறுப்பேன்
நெஞ்சில்மறப்பேன் எங்கேபறப்பேன் ஐயையோ
ஏங்குதே ஏங்குதே ஏங்குதேமனம் தாங்குதில்லையே

கன்னெஞ்சுடைய கடுவாயோனாய்கள் கர்வமாகவே
உளம்நோகவே அன்பர்சாகவே ஐயையோ
கௌவியேகௌவியேகௌவியேகொண்டு காட்டிற்சென்றதோ

பாய்ந்துவந்தகங் காய்ந்தசெந்துக்கள் பாலர்கள்பதைக்க
எழில்சிதைக்கக் கூவிவதைக்க ஐயையோ
பாவிநான் பாவிநான் பாவிநான்மண்ணில் மேவலாகுமோ

சாய்ந்துமூர்க்கமாய்ச் சாடுமிருகங்கள் தம்மையேபார்க்க
உடல்வேர்க்கக்கூவியார்க்க ஐயையோ
தற்பரா தற்பரா தற்பராகண்டாற் றாங்கலாகுமோ

பெண் விருத்தம்.

துடிக்குதேயென்றனாவி சோருதே அயர்ந்துநெஞ்ச
மிடிக்குதேபாலரும்மை யெப்படிப்பிரிந்திட்டாரோ
படிக்குள்ளேயிருப்போர்தம்மிற் பாவிநாமானோமையா
நொடிக்குள்ளேயவர்தன்செய்தி நோக்கமாயுரைசெய்வீரே.

*வசனம் எனது பிள்ளைகள் எப்படி உம்மைப்பிரிந்தார்களென்று சீக்கிரமாய்ச்சொல்லும்.என் மனம்பதைத்து அறிவுகேடாய் வருகுதே பிராணநாயகா.*

எஸ்தாக்கி சிந்து.

இராகம் தோடி. தாளம் ஆதி.

என்னென்றுசொல்லுவேன் பெண்ணே - என
திங்கிர்தமிகுந்ததுங்க லங்கிர்தசிங்காரமானே
ஏதென்றுசொல்லுவேன்கண்ணே

என்னென்றுசொல்லுவேன்நா னிருபாலரைக்கொண்டேகி
இக்கரைதனிலொன்றைப் பக்குவமாகவிட்டு
அக்கரைசென்றுமீளச் சிக்கியகாரணத்தை ...என்

தோணித்துறையைக்கடந்து - மிகு
சொல்லரியசோபமுட னெல்லையில்லாவல்லபனைப்
பேணிச்சலித்துநடந்து

காணுற்றிடுமோராற்றைக் கடக்கப்பயந்ததாலே
கருத்தொடுபாலரை ஒருத்தனொருத்தனாகக்
கடத்திடநினைத்திட வடுத்திடுகாரணத்தை ...என்

கரையிலோர்பாலனைவிட்டு - மறு
காளைதன்னையேந்தியந்த வேளைதன்னிலாற்றினைக்
கடக்கமனமொருப்பட்டு

விரைவாயவனைவிட்டு மீண்டுவரும்போதிலே
வெடுக்கெனக்கடுவாயு மடுத்திடுமோனாயும்
பிடித்திருபாலரையுந் துடிக்கக்கொண்டேகினதை ...என்

*வசனம் - இதுதான் நடந்தகாரியம் அறிந்துகொள்ளும்பெண்ணே*

பெண் விருத்தம்.

மறிப்பினிலிருந்தபோது மைந்தர்கள்மாட்டோமென்ற
குறிப்பதுசொல்லிநிற்கக் குழந்தைகள்பசியப்போது
பொறுக்கரிதெனநினைத்துப் போங்களென்றேகடத்திப்
பிரித்திட்டபாவிநானே பேதைநானென்னசெய்வேன்.

தரு.

இராகம் நீலாம்பரி. அடதாளசாப்பு.

பெண். புத்திரரே ஐயோவென்றன் புத்திரரே
இத்தரைமீதினி யெம்மைக்காப்பீரென்று
சித்தத்திலெண்ணினேன் தேவன்செயலிதோ ...புத்

எஸ். சித்தமிதே மானேதேவ சித்தமிதே
எத்தனைபாடுபட் டெங்கெங்கேசென்றாலும்
கர்த்தன்செயலின்றிக் காரியமாகுமோ ...சித்

பெண். உருகுதையோ எனதுள முருகுதையோ
இருமைந்தரையும் மிருகங்கள்சூழ்ந்துளம்
கருகிவாடிடக் கௌவிப்பிடித்ததோ ...உரு

எஸ். என்னசெய்வோம் என்னன்னமே ஏதுசெய்வோம்
இந்நிலமீதில்நா மெண்ணிவருந்திட
பொன்னம்பரன்சித்த மென்னிற்றடுப்பதார் ...என்

*வசனம் - பிராணநாயகி இறைவன்செயலின்றி ஏதும் நடவாது, நாமவருடன் முறையிட்டுக்கொள்ளுதலாகாது. அவர்செய்வதெல்லாம் நன்மைக்கன்றித் தீமைக்கல்ல, மனவியாகுலத்தை யொழித்து அவரைப் போற்றிசெய்வோம் பெண்ணே.*

பெண் விருத்தம்.

மன்னவனே மறந்துவிட்டேன் நேற்றிராவில்
வாலிபராம் போர்வீர ரிரண்டுபேர்கள்
என்னுடைய விடுதியாம் விதவைவீட்டி
லிருந்துதம்மூர் பேர்கேட்டு இசைந்துதம்மைப்
பின்னித வோனாய்கடுவாய் பிடித்ததென்றும்
பிழைத்துவிட்டோ மென்றுமுடன் பிறந்தோமென்றும்
உன்னியே யறிந்து மகிழ்ந்தாரையா
உவந்தவரை யுழைத்துநீ ருசாவுவீரே.

*வசனம் - பிராணநாயகா நானென் புத்திரசோகத்தால் மறந்துவிட்டேன். இராத்திரி நானிருந்த விதவைவீட்டில் உமது போர்வீரரிருவர் வந்திருந்து தத்தம் ஊர் பேர் கேட்டுத் தாமிருவருமோர் சகோதரறென்றும் தம்மை ஓனாய் கடுவாய் பிடித்து மறுபடி இரட்சிக்கப்பட்டோமென்றும் பேசி உறவாடினார்கள். அவர்களையழைத்து விசாரணைசெய்யும் நாயகா*

எஸ்தாக்கி விருத்தம்.

அருகுறுவோரேகேளீ ரகன்றிடுமிரவுதன்னில்
பிரியமாய்விதவைவீட்டிற் பேணியேசென்றுமீண்ட
இருகுமாரர்களுங்கட்குள் ளிருந்திடிலவராரென்று
தெரியவென்சமுகந்தன்னிற் சீக்கிரம்வருகுவீரே.

*வசனம் - இராத்திரி விதவைவீட்டடமாய்ச் சென்றவர்க ளுங்களுக்குள்ளிருந்தால் என்சமுகத்தில்வாரும் வீரரே.*

### பிள்ளைகள் விருத்தம்.

நிதிதராக்கயவர்தங்கள் நெஞ்சோர்மமடக்கவேபூ
பதியினாலனுப்பவந்து பரிவுடன்றிறையும்வாங்கித்
துதியுடன்புகழும்பெற்ற தூயனேவிதவைவீட்டி
லிதமுறச்சென்றராவி லிசைவுடன்றுயின்றோர்நாமே.

*வசனம் - மகா கீர்த்திப்பிரதாபம்பொருந்திய அதிபதியே, இராத்திரி விதவைவீட்டிற்சென்று துயின்றுவந்தவர்கள் நாங்கள் தானையா.*

### எஸ்தாக்கி விருத்தம்.

எம்முடைநேசரேநீ ரிருக்கின்றபதிதானேது
உம்முடைபெற்றாரோடே யுங்கடன் பெயர்தானேது
நம்முடைசேவகத்தில் நாடியவரல்வாறேது
செம்மையாயறிந்துதேறச் சீக்கிரமுரைசெய்வீரே.

*வசனம் - அன்பானவர்களே, உங்கள் ஊரேது? பேரேது? உங்கள் தாய் தந்தையர் நாமமென்ன? நீங்கள் நமதுபடையிற் சேர்க்கப்பட்ட வரல்வாறேது? நானறியும்படி சொல்லும் வீரரே.*

*பிள்ளைகள் வசனம் - அப்படியே சொல்லுகிறோமையா.*

### பிள்ளைகள் அகவல்.

அகப். உரைசெய்யுமென்ன உவந்தெமைக்கேட்ட
துரைசிகாமணியே சொல்லிடக்கேளும்

ஒப்பீ. நற்குலந்தனிலே நாங்களுமுதித்தோம்
உற்றிருபேரும் ஓர்சகோதரரே

அகப். எங்கள்செல்வங்க ளெல்லாமழிந்து
பங்கமுற்றதினாற் பரதவித்திட்டோம்

ஒப்பீ. தந்தைதாய்மிக்க சஞ்சலத்துடனே
சிந்தையாய்ப்பிறவூர் சென்றிடநினைந்தே

அகப். நம்மையுங்கூட்டி நடந்தாரப்போது
வெம்மைசேர்வனமொடு வெகுமலைதாண்டிக்

ஒப்பீ. கடலினையடுத்தோர் கப்பலினதிபதி
உடையவுத்தரம்பெற் றுவந்ததிற்சென்றோம்

அகப். எகித்துமாநகரா மிக்கரைசேர்ந்தபின்
சகிக்கரிதான கஞ்சலமடைந்தோம்

ஒப்பீ. ஏதெனிற்கேளு மிசைந்தவங்காதிபன்
வாதொடுகூலியை வைத்துப்போமென்றான்

அகப். வகையொன்றுமின்றி மயங்கியேபெற்றார்
மிகவிரந்திடவும் விடமாட்டோமென்றான்

ஒப்பீ. மன்னனேகூலி வாங்குமட்டாக
அன்னையைமறிப்பி லன்னியர்வைத்தார்

அகப். என்னசெய்திடலா மிச்சதியாலே
மன்னவன் திகைத்து மறுபடிதேறி

ஒப்பீ. எங்கெனுஞ்சென்றே யிரந்தவர்கூலியைச்
சங்கையாய்க்கொடுத்தே தாயரைமீள

அகப். எண்ணியேதந்தை எம்மையுமேந்திக்
கண்ணீரோடக் கடிதாய்நடந்தார்

ஒப்பீ. நடந்திடும்வழியில் நண்ணியவாற்றைக்
கடந்திடப்பயந்து காவலன்திகைத்து

அகப். என்னையோர்கரையி லிருத்தியேதம்பி
தன்னையேதூக்கித் தாண்டினார்கடலை

ஒப்பீ. மிகவருத்தத்தொடு வேந்தனக்கரைபோய்
மகவெனைவிட்டு மறுபடிமீண்டார்

அகப். மீண்டேநடுக்கடல் மேவியபோது
ஆண்டவாவோனா யருங்கடுவாயும்

ஒப்பீ. அடியரைத்தூக்கி அடவியிற்செல்ல
இடையரோடுழவ ரெம்மையேமீட்டார்

அகப். மீட்டெமைவளர்க்க மேவிநாமவர்கள்
வீட்டினில்வசித்தோம் வேந்தனும்போர்க்காய்

ஒப்பீ. எங்களையழைத்தா ரிருவரும்வந்தோம்
உங்கடன்றயவா லுறவுகொண்டாடினோம்

அகப். ஒருவரையொருவ ருண்மையாயறிந்தோம்
விரவிடுமெம்பதி விளங்குரோமாபுரி

ஒப்பீ. தந்தையெஸ்தாக்கி தாய்தேயொப்பீஸ்து
மைந்தனென்பேர்தான் வழங்குமொப்பீஸ்தாம்

அகப். அண்ணலேயென்னை அகப்பீஸ்தென்பர்
மண்ணினிலிந்த வருத்தங்களடைந்தோம்

ஒப்பீ. தந்தைதாயெவ்விதந் தவித்தலைந்தாரோ
சிந்தைநொந்துரைத்தோஞ் செம்மலேயறிவீர்,

*வசனம் - இதுதானெங்கள் வரலாறு அறியுந் தளபதியே.*

### இருவரும் விருத்தம்.

எஸ். ஆதியேபோற்றியெங்க ளன்பரைக்கூட்டிவைத்த
சோதியேயுமதுஞானஞ் சொல்லவுந்தொலைந்திடாதே
பெண். நீதியையுடையமக்காள் நீங்கள்மாண்டீர்களென்றே
மாதுநான்நினைத்திருந்தேன் வானவனருள்செய்தாரே,

## நால்வருந் தரு.

இராகம் பெலகிரி. அடதாளசாப்பு.

எஸ்தாக்கி.

காட்டிற்கடுவாயோனாய் கவ்விப்பிடித்ததோ மக்காள் - அவை
கடிக்கச்சோரிசொரியத் துடித்துப்பதைத்தீரோ மக்காள்

தேயொப்பீஸ்து

நாட்டில்வாழுவீரென்று நானெண்ணியிருந்தேனே மக்காள் -நீங்கள்
நலிந்துமிகுதுயராய் மெலிந்துபுலம்பினீரோ மக்காள்

அகப்பீஸ்து

காண்போமென்றிருந்தோமோ சேண்புவிதனிலேபெற் றோரே -நவக்
காட்சிகண்டோமினித் தாழ்ச்சியுண்டோசொல்லுவீரே

ஒப்பீஸ்து

வீண்போமோஆதியை விரும்பிப்பணிந்தாற்பெற் றோரே - எங்கள்
விக்கினந்தன்னைக்காத்த மிக்கோனைப்புகழ்ந்திடுவீரே

எஸ்தாக்கி

மீட்டுமெங்களையிங்கே கூட்டிவைத்தவனு கூலா - உயர்
மேதினியிலருள்செய் மாதுமரியைதிருப் பாலா

தேயொப்பீஸ்து

நாட்டமுடன்பா லூட்டிவளர்த்தவென்றன் மக்காள் - ஐயோ
நாங்கள்பிரியவந்த பாங்கேதென்றறிகிலேன் மக்காள்

அகப்பீஸ்து

அம்மையேயெம்மைவிட் டசனமருந்தாயே தாயே - பின்னர்
அடுத்தவாபத்தினை எடுத்தெவ்விதஞ்சொல்வோந் தாயே

அகப்பீஸ்து

நம்மைமிருகங்கள் கவ்வியோடியபோதில் ஐயா - நீரும்
நடுக்கடல்தனில்நின்று நலிந்துசோர்ந்தழுதீரோ ஐயா

எஸ்தாக்கி

விம்மியழவாயிற்றே உம்மைநினைக்கும்போது மக்காள் - பொல்லா
விலங்குபிடித்ததாலே கலங்கித்துடித்திட்டேனே மக்காள்

தேயொப்பீஸ்து

உம்மைமிருகங்கள்கவ்வியோடிடக்கண்டால் மக்காள் - என்றன்
உயிர்வைத்திருப்பேனோ அயர்வுற்றிடுதுள்ளம் மக்காள்

எஸ்தாக்கி விருத்தம்.

நீரின்றி வாடுபயிர் மழையைக்கண்டு
நிமிர்ந்துசெழித் தேதழைக்கும் வாறுபோலும்
வாரின்றிக் குவிந்தகோ கனகம்மிக்க
மார்த்தாண்டன் வரவுகண்டு மலர்ந்தாற்போலும்
நேரின்றிச் சமுத்திரத்தில் வீழ்ந்தவர்க்கு
நிலையுடைய வோர்மிதவை நேர்ந்தாற்போலும்
தாரொன்று பாலர்களே யும்மைக்கண்டு
சந்தோஷ முறத்தேவன் றயைசெய்தாரே.

*வசனம் - நாங்கள் மனமகிழ்ச்சியடையும்படியாக ஓரிடத்திற் கூட்டிச்சேர்த்த சருவேஸ்பரனது இரக்கத்தை எவ்விதமென்று சொல்லுவேன் மக்காள்.*

நால்வருந் தரு.

இராகம் மலையாமி. அடதாளம்,

மக்கள் அன்னையேயெம்முட னப்பர்தமைவிட்டே
அங்கேமறிப்பிருந்தீர் - தாயே
என்னவிதமாகப் பின்னீர்வெளிப்பட்டீ
ரெங்கட்கியம்பிடுவீர்

தேஒ. வன்னக்குமாரரே உம்மைப்பிரிந்து
மறிப்பினில்நானிருக்க - அந்த
அன்னியர்தன்மன மென்னிலிரங்கி
அவர்களிறக்கிவிட்டார்

மக்கள் வீட்டில்நீர்துயர் தொட்டலைந்தேமிக
விம்மியழுவீரே - நீருந்
திட்டமதாய்ப்பின்பு இட்டமுடனெங்கே
சென்றீரெனத்திட்டும்

தேஒப். தீட்டருஞ்சோகமாய் நாட்டிற்புகுந்தெனைச்
சேர்ப்பாரில்லாதலைந்து - ஓர்
வீட்டினிற்சென்றன்பு காட்டியணைத்த
விதவையுடனிருந்தேன்

மக்கள் இருந்திடுதாயைப் பிரிந்தேயெமையு
மிழந்துமனமெலிந்து - பின்
பெருந்துயராக வருந்தியெங்குற்றீர்
பிரித்துரைப்பீர்தந்தையே

எஸ். வருந்தியேசோகம் பொருந்தியிருந்து
மறுபடிநான்தேறிச் - சென்று
திருந்தோர்பிரபைப் பொருந்திப்பணிசெய்து
சீராகவாழ்ந்திருந்தேன்

பிள்ளைகள் தரு

இராகம் நாதநாமக்கிரியை. தாளம் மிசுரம்.

எங்கள்தந்தைதாயேயுமக்கு இந்தவருத்தம்வந்ததோ - ஐயோ
பங்கமுடனெங்களாஸ்தியழிந்து பரதேசஞ்செல்லலாயிற்றே
பந்தமாய்வலு வந்தமாலுமி
முந்தமறித்திடச் சிந்தைநொந்தீர்களே ...எங்

அன்னைதனைவிட்டு ஐயரேயெங்க
டன்னைத்தூக்கிநடந்தீரே
ஐயையோவிந்த வையமேலுமக்
கண்டுந்துயரினை விண்டிடலாமோ ...எங்

ஆற்றைத்தாண்டி யெம்மைத்தனித்தனி
யாகத்தூக்கிச்சென்றீரே
ஐயரேயெங்கள் துய்யரேயெம்மை
வெய்யமிருகங்கள் நையப்பிடித்ததே ...எங்

சோகமதாய்ச்சென்று தொண்டுபுரிந்து
துயரப்படவுமானீரே
சொல்லவோஅதைப் புல்லவோதுக்க
மல்லவோஎங்கள் வல்லமைசெல்லுமோ ...எங்

எஸ்தாக்கி வெண்பா

என்னுடைய புத்திரரே எவ்வவதிப் பட்டாலும்
நன்மைவந் திப்போது நணுகிற்றே - இந்நிலத்தில்
எம்பெரு மானாரி னிணையடியை யெந்நாளும்
நம்பித் துதித்திடுவோம் நாம்.

## தேவாரம்.

யாழ்முறி.

ஆசினிபூமியுயிர் பொருள்க ளனைத்தையுமாறுதினத்
தாக்கி யெம்மை நோக்கி யென்றுங் காக்குந்தயைக்கடலே

யோசித்திடாவிலக்குங் கனிதனை யுண்டபவமகல
ஒட்டத் தயை காட்டக் கிர்பை நாட்டவுதித்தவனே
காசினிமீதினிலே யுனது கருணைத்திருவருளைக்
காட்டி யெம்மைக் கூட்டி வைத்த காரணபூரணனே
பூசிதமேவிவள ருனதுடை பொற்பதபற்பமதைப்
போற்றித் துதி சாற்றி என்றும் ஏத்தித்தொழுவோமே.

## எஸ்தாக்கி தரு.

இராகம் பெலகிரி. தாளம் திரிபுடை.

அமலா எனக் கனுக்கிரகஞ்செய்தருளும் விமலா
உமையவமதிசெய்த பவவடியோர்
கவலையையகலிட நவமதுசெய் ...அமலா

பரவுறுதரையுறுசரமசரமு மருககனமதொடுமதியுடுகூடர்
விரிவுறுமறு தினமதில்மனமொடு
தருதிருவுறு மொருபரகுருவே ...அமலா

இனியொருபொழுதினுமருவுவதிலை யெனநினைவுறுமெனதுடை
மனமது,கனிவுறநனி பெறுதனயர்களொடு
கனமுறைவுறு வனிதையைசேர்த்த ...அமலா

## சபை தரு

இராகம் பூபாளம். அடதாளம்.

ஏகபரனருளால் இன்பமுடன்நால்வர்களும்
தாகமொடுகூடியபின் தம்பதியைநோக்கினரே

ரோமைநகர்செல்லுமுன்னே ஒங்கலையலகைகொல்ல
நாமமதிரியானென்போன் நரபதியாய்வந்தானே

இந்தமன்னன்செய்திகேட்டு எஸ்தாக்கிமுன்னேயேகச்
சந்தோஷமோடழைத்துத் தயவாய்நடத்திவந்தான்

இப்படியிருக்கையிலே ஈனமயலேவலினால்
தப்பில்லாதமெய்ம்மறையைத் தள்ளியேவிடுங்களென்று

நால்வரையுமவ்வரசன் நாடியேநெருக்கஞ்செய்ய
மால்வரையில்வந்தவரை மறவோமென்றோதியதால்

கோபம்மிகுதியுற்றுக் கொப்பரைபோற்செப்பெருத்தைக்
காவலனுந்தீயெழவே காய்ச்சுவித்துநால்வரையும்

ஆரும்பரிதமிக்க அவ்வனலிற்போட்டதினால்
சீருலவுமம்பரத்திற் சிட்டரொடுசேர்ந்தனரே.

## மங்களம்.

இராகம் லிலிதா. தாளம் மிசுரம்.

மங்களம் மங்களம் - நித்யசுக
மங்களம் மங்களம்

எங்கும்நிறந்தவன் எல்லாமறிந்தவன்
துங்கஞ்செறிந்தவன் தூயபாதத்திற்கு ...மங்

செகநரர்க்கனுகூலி திருமரியெனுஞ்சீலி
புகலருங்கிருபாலி பொற்பதாம்புயத்திற்கு ...மங்

பரிசுத்தவானோர்க்கும் பரன்றொண்டரானோர்க்கும்
விரிவுறெஸ்தாக்கிக்கும் விறல்மைந்தர்தேவிக்கும் ...மங்

மண்ணாடோங்கிடச்செய்ய மதியில்மும்மழைபெய்ய
பண்ணீடுநாடகம் பாடியாடினோருய்ய ...மங்

## வாழி.

உத்தமகுரவர்வேந்தர் உற்றார்பெற்றாரும்வாழி
வித்தகர்பெரியோர்கற்பில் மிகுத்தமாதர்களும்வாழி
முத்தசேர்பத்தன்காதை முயன்றுகேட்போர்கள்வாழி
பத்தியாய்நாடகத்தைப் பாடியாடினரும்வாழி.

## எஸ்தாக்கியார் நாடகம் முற்றிற்று.

திருமறைக் கலாமன்ற
வெளியீடு

**Christian Centre For
Performing Arts**

PUBLISHED BY :
THIRUMARAI KALAMANRAM
JAFFNA, SRI LANKA

OFFSET PRINTED BY: UNIE-ARTS (PVT) LTD, TEL: 445915